www.padippakam.com

# மலர்

உள்ளே:

**ஈழத்து வசன இலக்கியத்தின் மூலவர்:**
வ. அ. இராசரத்தினம்

**பின் நவீனத்துவமும் நானும்:**
—அ. மார்க்ஸ்

அனைத்திந்திய தேசியமும் திராவிட தேசியமும்:
**உறவுகளும் முரண்களும்:**
—தொ. பரமசிவன்

அவைதிகப் பாரம்பரியத்தில்
**திராவிட இயக்கங்கள்:**
—பொ. வேல்சாமி

**தென்திசை முளைத்த செஞ்சுடர்:**
டாக்டர் கே. கிருஷ்ணசாமி பற்றிய ஒரு மதிப்பீடு

அக்டோபர்(21)- நவம்பர், 1997 விலை ரூ. 10.

72ஆம் பக்கத் தொடர்ச்சியை 81ஆம் பக்கம் பார்க்கவும்.

படிப்பகம்

www.padippakam.com



## கடிதங்கள்...

● 'கவிதாசரண்' ஜனவரி 1997 இதழ் வெகு சிறப்பாக அமைந்துள்ளது. 'எஸ்.பொன்னுத்துரையுடன் ஒரு கருத்தாடல்' சுய சிந்தனை மிக்க ஒரு படைப்பாளியின் தீவிர எண்ணங்களை தெரிந்து கொள்ள உதவுகிறது. 'அடையாளம்' ஜெயமோகன் எனும் படைப்பாளியை நன்கு அடையாளம் காட்டுகிறது. 'தமிழ்மொழி வளர்ச்சி' பற்றிய, அந்நாளைய அமைச்சர் டி.என். சிவஞானம் பிள்ளையின் கருத்துக்கள் 1925இல் வலியுறுத்தப்பட்டவை என்றாலும் அவை இன்றைக்கும் தேவையான கருத்துக்களாகவே ஒலிக்கின்றன. கட்டுரையின் மறுபிரசுரம் பொருத்தமானதே. கவிதைகள் நன்றாக இருக்கின்றன; பாராட்டப்பட வேண்டிய படைப்புகள்.

**வல்லிக்கண்ணன், சென்னை–5.**

● 'ஈழத் தமிழர்கள்தான் 21ஆம் நூற்றாண்டின் தமிழிலக்கியத்தை முன்னெடுத்துச்செல்வார்கள்' என்ற எஸ்.பொ வின் கருத்து முற்றிலும் உண்மையாக இருக்கும் என்றே தோன்றுகிறது. இவரின் கருத்து வெறும் கூச்சல் அல்ல. இந்தக் கருத்தை இவர்கள் தங்கள் மண்ணிலும் (ஈழத்திலும்), புலம் பெயர்ந்த நாடுகளிலும் அயராமல் உழைத்து நடைமுறைப் படுத்தி வருகிறார்கள் என்பதற்கு தமிழ்நாட்டிலிருந்து ஈழத்திற்கும், ஆஸ்திரேலியா, மற்றும் அமெரிக்க நாடுகளுக்கும் அண்மையில் சென்று வந்த இலக்கியவாதிகளின் நேர்காணலும் கட்டுரைகளுமே எடுத்துக்காட்டாய் இருக்கிறது.

"திராவிட இயக்கங்கள் அறிமுகப்படுத்திய தமிழினால் கடந்த அரை நூற்றாண்டு காலமாக இதுதான் இலக்கியம் என்று சொல்லக் கூடியதாக ஒரு இலக்கியத்தைப் படைக்க முடிந்ததா?" என்ற அவரது கேள்வியும், தொடர்ந்த பதிலும் ஆழமாய் ஒவ்வொரு தமிழனாலும் சிந்திக்கக் கூடியது.

திராவிட இயக்கங்களால் எந்தக் காலத்தில் தமிழும் தமிழனும் தமது அடையாளங்களோடு உலகுக்குப் புலப்பட்டுள்ளார்கள்?

தமிழீழப் போராட்டத்திற்குப் பின்புதானே, உலகில் தமிழும், தமிழனும் இருக்கிறார்கள் என்பதே தெரிந்தது. இதை யாரால் மறுக்க முடியும்?

முரண்பாடுகள் இருந்தாலும், பொன்னுத்துரையின் நேர்காணல் நிறைவாகவும், புதிய செய்திகளையும், மேலும் அவரைப் பற்றி அறியவும் அவரது படைப்புகளைப் படிக்கவும் தூண்டும் ஒரு நெம்புகோலாய் இருந்தது.

படிப்பகம்

www.padippakam.com



அடுத்து 'தமிழ்மொழி வளர்ச்சி' என்ற தலைப்பில் திரு சிவ ஞானம் பிள்ளை அவர்களின் அரிய சொற்பொழிவினை, சுமார் 70 ஆண்டுக் காலம் கழிந்தும், அக்கட்டுரையை வெளியிடக் காரணமாயிருந்த ராசதுரை அவர்களைப் பாராட்ட வேண்டும்.

கட்டுரையைப் படித்து முடித்ததும், தமிழகத்தில், தமிழ் எல்லாக் காலக்கட்டத்திலும் யாராலும் சரியான அக்கறை காட்டப்படாமல், எல்லாத் துறையிலும் ஒரு தொடர்ச்சியான தேக்கம் நிலவி வருகிறது என்பது புரிகிறது. தமிழன் ஆண்டாலும் தமிழன் அல்லாதோர் ஆண்டாலும் நிலைமை அப்படியே தொடர்கிறது. (தொடரும்!?) அன்று வடமொழி ஆதிக்கம். இன்று ஆங்கிலத்தின் ஆதிக்கம்.

இந்தி கூடாது என்று சொன்னோம். ஆங்கிலத்தைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டோம். அதன் விளைவுகள்? தமிழ் எங்கே? தமிழால் முடியுமா என்று கேட்குமளவுக்குத் தமிழ் தலை குப்புறப் படுத்துக் கொண்டது. (தமிழனும்.)

தமிழ் பேரைச் சொல்லி ஆட்சி பிடித்தவர்கள் காலத்தில்தான் ஆங்கிலம் வளமாய் சிற்றூரிலெல்லாம் வளர்ந்தது. வளர்ந்தும் வருகிறது. 'தமிழ் வாழ்க' என்று கூச்சலிட்டுக் கொண்டு, மறுபுறம் தமிழைக் கொஞ்சம் கொஞ்சமாய்க் கொன்று வருவது தமிழனால் மட்டுமே முடிகிறது. மற்ற மாநிலங்களில் கூச்சல் இல்லை. ஆனால் மொழி வாழ்கிறது; வளர்கிறது.

'புதிய பார்வை'யில் திரு. ஜெயமோகனின் நேர்காணலைப் படித்தேன். நிறைய முரண்பாடுகள் இருந்தாலும், அவரின் சில கருத்துகள் உண்மையாக இருக்கின்றன. அரசியல் பற்றி அவரின் கருத்துகள் கசப்பாக இருந்தாலும் நாம் மறுக்கமுடியாதல்லவா?

இன்குலாபின் கட்டுரை சுருக்கமாக இருந்தாலும் நச்சென்று இருந்தது. சில வரிகள் நெருடலாய் உள்ளது.

வெளிநாடுகளில் ஈழத்தமிழர்களுக்கான ஆதரவு கூட்டங்களும் செய்திகளும் எவ்விதச் சிக்கலும் இன்றி நடைபெற்று வருகிறது. அண்மையில் பெங்களூர் மாநகரில் ஈழத்தமிழர் ஆதரவு மாநாடு சிறப்பாய் நடந்து முடிந்தது. வெளிநாடுகளிலும், வெளி மாநிலங்களிலும் ஈழத்தமிழருக்காய் ஆதரவுக் குரல் தடையேதுமில்லாமல் நடக்கும் போது, தமிழகத்தில் மட்டும் தடை செய்வதும், கைது செய்வதும் கொடூரம். அவமானப்பட வேண்டிய செயல். நடந்து கொண்டிருக்கும் ஆட்சி தமிழினத் தலைவரின் ஆட்சி!

துக்ளக் 'சோ' அவர் வேலையைச் செய்கிறார். நாம் கோபப்பட வேண்டியது யார் மீது?

**த.சை. தமிழ்ச்செல்வன், கோலார் தங்கவயல்.**

படிப்பகம்

www.padippakam.com



● ஒவ்வொரு கவிதாசரணும் ஒரு 'கருத்துப்பெட்டகமே'. பெரியாரியம் பற்றிய தெளிவோடு சென்ற இதழ் அமைய, இந்த இதழ் ஈழத்தமிழர்களுக்கான, புலம் பெயர்ந்த தமிழர்களுக்கான ஆதரவுக் குரலெழுப்பும் இதழாக அமைந்துள்ளது. எஸ்.பொ.வின் ஒவ்வொரு வரியும் சரியானதே. 21ஆம் நூற்றாண்டில் "புலம் பெயர் இலக்கியமே" தமிழுக்கான தரமான அடையாளமாக விளங்கும் என்பதில் சந்தேகமில்லை. பாறைக்கிடையிலும் கிளர்ந்து எழும் படைப்புக்கள் அவை. எனவே கட்டாயம் சாதிக்கும். கண்மணி குணசேகரன் ஆழமான கவிஞர். அவர் பாராட்டப்பட வேண்டியவர். ஜெயமோகனை ஒதுக்கிவிடுங்கள். அவனுக்காக பக்க வீணடிப்பு தேவையில்லாதது. அந்தப் பக்கங்கள் படைப்பாக்கங்களால் நிரம்ப மகிழ்வு மிகும்.

**பொள்ளாச்சி நசன், பொள்ளாச்சி.**

● எஸ்.பொ. நேர்காணலில் 21ஆம் நூற்றாண்டில் புலம் பெயர்ந்த ஈழத்தமிழர்கள் தமிழிலக்கியத்திற்குத் தலைமை தாங்குவார்கள் என்ற திடமான நம்பிக்கை பலிக்கத்தான் செய்யும். காரணம் வெற்றுப் பேச்சாக இல்லாமல், நடைமுறைக்கு வருவதற்கான ஆயத்தங்கள் செய்து வருவதையும் சுட்டிச் சொல்லியிருக்கிறார். இப்படி ஒரு நம்பிக்கை இங்கு தமிழர்கள் என்று கூறும் நம்மவர்களில் யாருக்காவது உண்டா? வெற்றுக் கூட்டமும், வெட்டிப் பேச்சும் தான் நம்மிடம் இருப்பது. ஜெயமோகன் என்கிற ஒரு சாதாரண எழுத்தாளனுக்கு பதில் சொல்ல இத்தனை பக்கங்களை ஒதுக்க வேண்டுமா?

**தோப்பில் முஹம்மது மீரான், திருநெல்வேலி.**

● அன்றே சுபமங்களா நாடக விழாவில் ஜெயமோகனின் பேச்சில் ஆத்திரமடைந்த சாருநிவேதிதா, அக்னிபுத்திரன் ஆகியோர் அவரின் பி.ஜே.பி. நிறத்தைத் தோலுரித்துக் காட்டினர்.

அறிவுமதியும் நேருக்கு நேராய் அன்று மோதியிருக்கிறார். "ஜெயமோகன்! நீ அள்ளித் தின்கின்றாயே சோறு, அதில் கண்ணுக்குத் தெரியாத பல்லாயிரக் கணக்கான உழவர்களின் வியர்வை நாற்றத்தை உன்னால் உணர முடியுமென்றால் இன்குலாப்பின் ஒவ்வொரு கவிதை வரியையும் உன்னால் உணர முடியும். அப்படி உணரும் பார்வை உனக்கில்லை. அதனால் நீ இன்குலாப் கவிஞரில்லை என்று கூறுகிறாய்" என்று அறிவுமதி ஒரு பிடி பிடித்

படிப்பகம்

www.padippakam.com



திருக்கிறார். (இடையிலேயே "இது அநாகரிகமான பேச்சு" என்று கூறி கோமல் ஒலிவாங்கியைப் பிடுங்கிக்கொண்டாராம்.)

இன்னும் தன்னை கொம்பு முளைத்தவராக நினைத்துக் கொண்டு ஜெயமோகன் தேவையில்லாமல் மூக்கை நீட்டுகிறார்.

தக்க நேரத்தில் நீங்கள் ஒரு தட்டு தட்டியிருக்கிறீர்கள்.

**இரத்தின புகழேந்தி, மருங்கூர்.**

● ஜெயமோகனின் அடையாளம் குறித்த நீங்கள் எழுதிய து முழுவதும் எனக்கு உடன்பாடு. இன்றையச் சூழலில் மிக அவசியமான ஒன்றும்கூட.

அவருடைய புதிய பார்வை பேட்டியில், தனது ஆரம்பக் காலக் கதைகளைப் பற்றிச் சொல்லும் போது. "கதைகளைப் படிக்கும் போதே அதில் என்னென்ன டிரிக்ஸ் இருக்குன்னு பாத்துப்பேன். அதை வச்சு எழுதிருவேன்" என்கிறார். தமிழ்ச் சூழலில் அங்கீகாரம் பெறுவதற்கான டிரிக்ஸ்களாகத்தான் அவருடைய நடவடிக்கைகள் அமைந்திருக்கின்றன.

இந்த அங்கீகாரத்தைப் பெற அவர் கையாளும் Tricks இருபடித்தானவை. 1. தொடர்ச்சியாய்த் தமிழ் மீதும் தமிழ்ச் சூழல் மீதும் துவேஷத்தைத் துப்புவது. 2. தலைமைப் (பிராமணப்) பீடங்களுக்குப் பிண்டம் வைப்பது. புதிய பார்வை பேட்டியில்கூட 'எண்ட ப்ரிய குருநாதர்' என்ற பிண்டத்தை சுந்தரராமசாமிக்கும் (தமிழின் ஒரே நாவலாசிரியர் என்ற பிண்டத்தை 'நாவல்' புத்தகத்தில் 'பணால்' ஆக்கிவிட்டது வேறு விஷயம்) யதார்த்த வகை எழுத்தில் பூர்த்தியான, திருப்தியான, முழுமையான நிலையை அடைந்தவர் என்ற பிண்டத்தை அசோகமித்திரனுக்கும் வைத்திருக்கிறார்.

இவர் சமீபமாய்த் துப்பியுள்ள துவேஷங்கள் என்னென்ன?

1. தமிழில் நாவலே இல்லை என்றொரு குற்றச்சாட்டு. அதற்கு 100 பக்கக் காரணம் சொல்லி புத்தகமும் போட்டாச்சு. சி. மோகன், க. பூர்ணச்சந்திரன், சு. வேணுகோபால், ந. முருகேச பாண்டியன் முதலியோர் முன்வைத்த விமர்சனங்களுக்கு ஒழுங்கான பதிலை இதுவரை தராமல், எல்லாத்துக்கும் 100 பக்கத்தில இருக்கு என்கிறார். திடீரென நாவலின் கலைத்தரம் பற்றிச் சொல்லலை. வடிவம் பற்றித்தான் சொன்னேன் என முனகுகிறார்.

2. தமிழில் sensitive ஆன விமர்சனம் இல்லை என்பது.

படிப்பகம்

www.padippakam.com



3. சில்லறை பி. எச்டி. வாங்கினவனெல்லாம் பெரிய அறிஞர் ஆயிடறாங்க (உங்க) தமிழ்ல.

4. தமிழ்ச் சூழல்ல சின்ன விஷயம்கூட முளையிலேயே கருக்கப்படும்.

5. இந்திய மொழிகளில் தமிழல்லாத மொழிகளுக்கு சமஸ்கிருதமே செவ்விலக்கிய மரபு. தமிழுக்குப் பண்டைத் தமிழ் மரபும், சமஸ்கிருதமும் செவ்வியல் மரபுகள் என்கிறார். (பார்க்க காலச்சுவடு- கடிதம்). ஏன்? இந்திய மொழிகளுக்குத் தமிழும் சமஸ்கிருதமும் செவ்வியல் மரபுகள் என்று சொல்வதற்கென்ன வந்துச்சாம்? சூத்திர பாஷையாய் இருப்பதுதான் தடையா இருக்கோ என்ன எழவோ?

தொடர்ந்து அவர் பேசியும், எழுதியும் வருவதெல்லாம் "பாண்டிக்காரப் பசங்களுக்கு எதுவும் தெரியாது. முடியாது. அதுக்குத்தான் ஞான் ரக்ஷிக்க வந்திருக்கேன்" என்கிற ரீதியில் இருக்கிறது.

விருதுகளை வாங்குவதும் மறுப்பதும் படைப்பாளியின் உரிமை. என்றாலும் சமஸ்கிருதம் சம்மான் விருது, கதா விருதுகளை நாக்கை நொட்டை விட்டுக்கொண்டு வாங்கும் அவர் லில்லி தேவசிகாமணி விருது, திருப்பூர் தமிழ்ச் சங்க விருதுகளை மட்டும் வேண்டாமெனச் சொல்வதும்கூட பாண்டிக்காரப் பயல்க குடுத்து தறவாட்டு நாயர் வாங்குறதா என்கிற மேட்டிமைப் பார்வைதான் எனக் கருத வேண்டியிருக்கிறது. அகிலன் நினைவுப் பரிசு வாங்கினதுக்கு நொண்டிச் சமாதானமெல்லாம் சொல்ல வேண்டியதில்லீங்க. அப்ப "அண்ணன், ('இலக்கிய அண்ணன்') ஜூஜூபியா இருந்தீங்க. வாங்குவது அவசியமாய் இருந்தது. இப்போ கொம்பு முளைச்சிடுத்தோல்லியோ?

அவர் முன்வைக்கும் இன்னொரு குற்றச்சாட்டு: தலித்துகளைப் பற்றி யதார்த்தவாதியும், அமைப்பியல்வாதியும், அராஜகவாதியும் (பின் நவீனுத்துவ வாதிகளைத்தான் இப்படிக் குறிக்கிறாரென நினைக்கிறேன்) ஒரே குரலில் துதிகளைத்தான் எழுதுகிறார்கள் என்பது உண்மையில் தலித்துகள் அராஜகவாதிகள் என வசை பாடுவதும், தலித்தியத்திற்கு மெய்யியல் இல்லை, அது இல்லை, இது இல்லையெனப் புறக்கணிக்கப்படுவதும், தலித் அரசியல் முற்போக்கு பேசுபவர்கள் உள்ளிட்டவர்களால் மூர்க்கமாய்த் தாக்கப்படுவதும் தானே நடந்துகொண்டிருக்கிறது.

இத்தகைய(?) முழுமையான அங்கீகாரம் இருந்தால் தமிழ்ச் சூழலில் அவர்கள் (தலித்துகள்) ஆற்ற வேண்டிய பணி ஏதுமில்லையே என்கிறார். என்ன அர்த்தம் இதற்கு? தலித்துகள் அறிவுச் சூழலில் பணியாற்ற வேண்டுமானால், அவர்களை அங்கீக

படிப்பகம்

www.padippakam.com



ரிக்காதே. கண்டுக்காம விட்ரு. ஒதுக்கிரு என்பதா? ஒதுக்குவதும் ஒடுக்குவதும் பார்ப்பனியம் என்று புரிந்திருக்கோம் நாம்.

தலித் படைப்பாளி மீது "இயல்பாக" தனது கண்ணோட்டத்தை பிரயோகிக்கும் விமர்சகன் தலித் விரோதி ஆகிறானாம். தனது கண்ணோட்டத்தை 'இயல்பாக' பிரயோகிப்பது எப்படி என்பதை ஜெயமோகன்தான் சொல்ல வேண்டும். காலக்சுவடு நேர்காணலில் டி. ஆர். நாகராஜிடம், கோவேறு கழுதைகளை விமர்சனம் பண்றாங்க சார்னு கண்ணீரும் கம்பலையுமாய் ரிப்போர்ட் பண்ணியதிலிருந்து ஜெயமோகனின் 'இயல்பான' பிரயோகத்தைப் புரிந்துகொள்ள முடிகிறது ஓரளவு.

'அமைப்புகளைச் சார்ந்தவர்கள் எழுதும் குப்பைகள்கூட தினந்தோறும் பிரசுரமாகும் தமிழ் நாட்டில் ஒவ்வொரு நூலுக்கும் பிரசுரத்திற்கும் நண்பர்களைச் சார்ந்தே இருக்கும் நிலை எனக்கு உள்ளது' என்று புலம்புகிறார். உச்சு கொட்டி முடித்துவிட்டு இந்த உண்மையைப் பரிசீலிப்போம். முப்பத்தைந்து வயதுக்குள்ளாகவே 'திசைகளின் நடுவே', 'மண்' என இரு சிறுகதைத் தொகுப்புகளும், 'ரப்பர்' என்றொரு நாவலும், 'தற்கால மலையாளக் கவிதைகள்' என்றொரு மொழிபெயர்ப்பு நூலும், 'நாவல்' என்றொரு விமர்சன நூலும் வெளியிட்டிருக்கும் இவர், எதையும் தன் கைக்காசைப் போட்டு கொண்டு வரவில்லை என்பது கவனிக்கப்பட வேண்டிய விஷயம். முற்போக்கு அமைப்பு சார்ந்த பீர்முகமது, சோ. தர்மன், ஸ்ரீதரகணேசன் போன்றோருக்குத் தங்கள் புத்தகங்களைப் பார்க்க நாற்பத்தைந்து வயதாக வேண்டியிருக்கிறது என்கிற ஒரு உதாரணம் போதும் இவரின் கூற்றிலுள்ள 'உண்மை'யைத் தெரிந்து கொள்ள.

மாறாக தினமணி, இந்தியா டுடே, சுபமங்களா முதலான வணிகப் பத்திரிகைகளில் இவருக்குக் கொடுக்கப்படுகிற அதீத முக்கியத்துவம் யாவரும் அறிந்த ஒன்று.

அப்புறம் முற்போக்குக் கலைவிழாவில் இவரைக் கூப்பிட்டப்ப இருந்த Creative அம்சம் கூப்பிடாதப்ப செத்துப் போச்சி என்று கூப்பாடு போடுகிறார். தப்பாட்டம், கரகாட்டம்னு இப்படி வந்துருச்சு என்ற கிண்டல் வேறு. தப்பாட்டமும் கரகாட்டமும் creative இல்லை. Destructive என்று நமக்குப் புரியவைக்க ஜெயமோகன் பாவம் எவ்வளவு சிரமப்படுகிறார்! இனியாவது மேற்படி விழாக்களில் கதக்களி, மோகினியாட்டம் போன்ற Creative ஆன கலைகள் நிகழ்த்தப் படட்டும்.

'வாய்மொழிக் கதைகள் எழுத்தில் வரும்போது பெரிய பாதிப்பை ஏற்படுத்தாதுன்னு சொன்னீங்களே. முத்தம்மாவின்

படிப்பகம்

www.padippakam.com



கதை ஏற்படுத்தியிருக்கே?' என்ற பேட்டியாளரின் கேள்விக்கு, 'அது கற்பனையான பாதிப்பு. உண்மையான பாதிப்பு இல்லை. தவிரவும் அதிலே நிறைய பொய் இருக்கு' என்கிறார், வாய் மொழிக் கதைகளைப் பற்றி கேட்டா வாய் மொழி உண்மையைப் பற்றி பேசுகிறோமென்ற உணர்வே இல்லாமல். வாய் மொழிக் கதைகள் எழுத்தாகும் போது, தீவிர அனுபவத்தின் வெளிப்பாடுகள் மண் சார்ந்த அழகியலோடு வெளிவரும் போது ஜெயமோகன் போன்றவர்கள் 'அட்ரஸ் இல்லாமல் போய்விடுவோம்' என்பதை உணர்ந்த பதற்றம்தானேயன்றி வேறொன்றுமில்லை.

இறுதியாக, ஜெயமோகன் தமிழில் என்னென்னவோ இல்லை என்கிறார். எனக்கு என்ன தோன்றுகிறதென்றால் தமிழ்ச் சூழலில் சொரணைதான் இல்லாமல் போய்விட்டது.

ம. மதிவண்ணன், திருச்செந்தூர்.

● எஸ். பா. நேர்காணலில் சிறுபத்திரிகைகள் பற்றி அவர் கூறியுள்ளவை ஏற்றுக்கொள்ளும்படி இல்லை. தவறாகக் குறிப்பிடுகிறார். மற்றபடி அவரின் பேட்டியில் பல விஷயங்களை வெளிப்படுத்தியுள்ளது மகிழ்ச்சிக்குரியது. ஜெயமோகனின் இரண்டு கட்டுரைகளையும் ஒரு பேட்டியையும் வைத்து இவ்வளவு தெளிவாக அவரையும் படைப்பையும் கட்டுடைப்பு நிகழ்த்தியது ரசமாக இருந்த உண்மைகளாகும். அவரின் மற்றபிற படைப்புகளை படித்திருந்தால் விமர்சனம் செய்து அவரின் மத அடிப்படைவாத படைப்புகளை, கருத்தாக்கங்களை அடையாளப்படுத்தி பல புத்தகங்கள் அளவில் எழுதலாம் என்று தோன்றுகிறது.

நீங்கள் சொல்லியிருக்கும் உண்மைகள் அனைத்தும் ஜெயமோகனின் சுயமுகத்தை வெளிச்சமிட்டுக் காட்டியது. அவரது ரப்பர் நாவலில் மத அடிப்படைவாதத்தை மிகக் கொடூரமாகத் தூக்கிப் பிடிக்கிறார். ஓர் அமுக்கப்பட்ட சமுதாய மக்கள் வளர்ச்சி அடைவதை பொறுக்காமல் அவர்களிடமிருந்தும் அது போய்விடும் என்று உயர் சாதிக்கு ஆதரவான குரலே அந்த நாவலின் கதை.

கே. புஷ்பராஜ், களியக்காவிளை.

● ஜனவரி 97 இதழ் ஜெயமோகன் குறித்த கட்டுரை அருமை. அதில் அதிகாரத்தில் பார்ப்பனியம் இல்லை என்பதாக உள்ள வரிகள் அவசரத்தில் வந்து விழுந்ததாயிருக்கும். உண்மையில் இன்

படிப்பகம்

www.padippakam.com



னும் அதுதான் அதிகாரத்தில் உள்ளது. இது குறித்து இன்குலாப் கட்டுரையில் உள்ளதே சரி.

இருக்கட்டும். மொத்தத்தில் இதழ் சிறப்பாகவே உள்ளது.

**இர். இராஜேந்திர சோழன், மயிலம்.**

★ கட்டுரை 'தமிழகக் காங்கிரசில் (கட்சியில்) பார்ப்பன ஆதிக்கம் மட்டுப்பட்டது' என்பதை மட்டுமே குறிப்பிடுகிறது. அதிகாரத்தில் பார்ப்பனியம் என்பதும், காங்கிரசில் பார்ப்பனிய ஆதிக்கம் என்பதும் இப்போதும் ஏறுமுகத்தில்தான்.

பார்ப்பனர்களைவிடவும் பார்ப்பன தாசர்கள் அபாயகரமானவர்கள். சீரழிவைத் தெரிந்தே செய்கிறவர்கள் பார்ப்பனர்கள் என்றால், அது தெரியாமலேயே தங்களை விற்றுப் பிழைக்கிறவர்கள் இந்தத் தாசர்கள். இதுபற்றிய மேலதிகப் புரிதலுக்குக் கருப்பையா மூப்பனாரை அணுகலாம். 'காமராசரின் ஆட்சி' பெரியாருக்குப் 'பச்சைத் தமிழனின் ஆட்சி'யாக இருந்தது. (இப்படிச் சொல்லிச் சொல்லியே பச்சைத் தமிழனை மீட்டெடுத்துக் காரிய மாற்றிக்கொள்ளும் உத்தியாயிருந்திருக்கலாம்.) ஆனால் மூப்பனாருக்கோ அது சத்தியமூர்த்தி ஐயருடைய நம்பிக்கைக்குரிய சீடரின் ஆட்சியாகவே தெரியும். அங்கே 'சோ'தான் ராஜகுரு!

மொழி, இனம், சாதிமறுப்பு ஆகிய சகலத்திலும் போலித்தனத்தால் மலினப்பட்டு, அரசியல் தளம் முற்றிலும் கந்தை கூளமான பின்னும், தமிழ்ச் சமூகத்தின் திகிலுற்ற 'மனக்குறளி' "திராவிடக் கட்சிகளின் ஆட்சியே இருந்து தொலைத்துவிட்டுப் போகட்டும் போ" என்று உள்ளிணக்கம் கொள்வதற்கு இதுதான் காரணம் போலும். —ஆ-ர்.

● இதழ் வந்தது. வெகுவாய் நம்பிக்கை வைத்திருந்த கவிதாசரண் இன்னும் தன் பாணியிலான பாதையிலேயே செக்குமாடாய் சுற்றி வருவது வருத்தம் அளிக்கிறது. பாராட்டுக்கள் ஆனாலும் கண்டனங்களானாலும் விமரிசனம் அல்லது திறனாய்வு என்ற பெயரில் ஒரு தனிநபருக்காய் பாதிப் புத்தகம் செலவிடும் தன்மையினின்று கவிதாசரண் எப்போது திசை திரும்பப்போகிறது? இதழில் இலக்கியம் இல்லாமல் இல்லை. ஆனால் இலக்கியமும் இருக்கிறது என்று சொல்லும் வகையில்தான்... களங்கத்திடை சந்திரன் என்பது போல். சந்திரனிடம் களங்கம் என்றாவது எப்போது? விமரிசனமும் ஒருவகை இலக்கியந்தான் என்ற வாதம் முன் வைத்தா

படிப்பகம்

www.padippakam.com



லும் அதற்கு இத்தனை பக்கங்களா? இதனால் இதழின் நோக்கமே சந்தேகத்திற்குரியதாகிறது.

என் கருத்து தங்களுக்குத் தவறாகப் பட்டால் just ignore it என்பேனே தவிர மன்னியுங்கள் என்று கேட்கமாட்டேன். இதழை மனமுவந்து படித்து உண்மையான அக்கறையுடன் விமரிசிக்க வாசகருக்கு உரிமை உண்டல்லவா? எதுவுமே எல்லாமே இதழின் மேம்பாடு குறித்துதான். தாங்கள் மனம் வைத்தால் இன்னும் இதழ் சிறப்பாக அமையும். 'இன்னும்' என்பதால் இப்போதே சிறப்புதான் என்றாகிறதல்லவா? தனிமனித அல்லது தனி இனத் திறனாய்வு அது படைப்புகளின் அடிப்படையில்தான் என்று எவ்வளவு ஆணித்தரமாக சாதித்தாலும்— பாதிப் பக்கங்களை மலைப் பாம்பாய் விழுங்கிவிடுகிறபோதும் இதழின் சிறப்பு தொலைந்து போகவில்லை. மூன்றாம் பிறைக் கீற்றாகப் புலப்படும் சிறப்பு முழு நிலவாகப் பரிமளிக்க வேண்டும் என்பதுதான் இதழ் நலம் கோரும் என் போன்றோர் வேண்டுகோள். புரிந்து கொள்வீர்களா?

**சாந்தா தத், ஹைதராபாத்.**

★ இவர் ஒரு நல்ல படைப்பாளி. அதையும்விட நல்ல மொழி பெயர்ப்பாளராய் வெளிப்பட்டிருப்பவர். அண்மையில் இவர் மொழி பெயர்த்த 'தெலுங்கானா சொல்லும் கதைகள்' அதற்குச் சான்று.

''மூலத்தில்தான் படிக்கிறோமா! அல்லது மொழிபெயர்ப்புத் தானா!'' என்று அதிசயிக்கும்படியாக அற்புதமாய்ச் செய்திருந்தார். இந்த அற்புதத்தை இவருடைய இருமொழிப் புலமை மாத்திரமே சாத்தியப்படுத்தியிருக்க முடியாது.

நிஜாம் அரசின் ரசாக்கர்களைவிடவும் கொடியவர்களாய், அடக்குமுறையாளர்களாய், அடையாளம் அழிப்பவர்களாய், 'பன்மையில் ஒருமை'யை நிர்மூலப்படுத்துகிறவர்களாய் 'சுதந்திர' இந்தியாவின் புதிய காந்திக் குல்லாக்காரர்களும் அவர்களின் காவல் நாய்களும் பேயாட்டம் ஆடினர் என்பதும், இன்றுவரை நிலைமை இதுதான் என்பதும், சுதந்திர இந்தியாவில் ஐந்தரை மாதங்களே உயிர் தரித்த காந்தியடிகள் புதிய ஆட்சியாளர்களால் ஓரங்கட்டப்பட்டு, 'பொது மனிதனுக்'கெதிரான அவர்களின் அதிகார அத்துமீறல்கள் பற்றி மக்கள் எழுதிக் குவித்த பல்லாயிரக் கணக்கான முறையீடுகளுக்கு நடுவே, திக்கற்ற இந்திய மக்களுக்காகக் கண்ணீர் மல்கி, அதுவரை தான் தாங்கிப் பிடித்த வர்ணாசிரமத்தை மறுபரிசீலனைக்கும், பாவமன்னிப்புக்கும் உட்படுத்த வேண்டியவராய், ஒரு மெய்யான மகாத்மாவாக மாறித் தன் மரணத்திற்காகக் காத்திருந்தார் என்பதும்—

படிப்பகம்

www.padippakam.com



இவர் படைப்பு மனத்தில் ஊமை அலைகளாகவேனும் ஓடியிருக்க வேண்டும். மரபணுச் செயல்பாடுகள் நம்மையறியாமலேயே நம்முள் இயங்குவது போலவே இந்த ஊமை அலைகளும் நம் ஒவ்வொருவர் உந்திச் சுழியிலும் கர்ப்பம் காக்கும் உணர்வுகள்தாம். ஒருமைப்பாடு, மறுமைப்பாடெல்லாம் இருமைக்குகந்த கற்பிதங்கள்தாம்.

'இந்தியா முழுதும் (வட கிழக்கு மாநிலங்களைத் தவிர்க்கலாமா?) பிராமணர்களே மேலானவர்கள்: சமஸ்கிருதமே மேலான மொழி'— என்னும் இரு கண்ணிகள்தான் இம்மண்ணை ஒரே தேசமாகக் கட்டமைக்கிறது என்றால் அதை நிராகரிக்கும் நெருப்புப் பொறி– ஆழப் புதைத்தாலும் அணையாமல் பீறிப்பொங்கும் எரிமலை நாக்கு போல, எல்லாத் தமிழ் நெஞ்சிலும் கனன்று கொண்டே இருக்கும். தமிழும் தமிழரும் எவ்வளவுதான் மலினப்பட்டுப் போனாலும் இந்தத் தீயின் தீண்டல் ஒரு சாபம் போலப் பிறரைச் சுட்டுக் கொண்டுதான் இருக்கும். இருக்கப் பண்ணுவதே இருப்புக்கான பணி. அதை எப்படிச் சொன்னால் என்ன?

சொல்லப் போனால் நாம் எல்லோரும் செக்குமாடுகள்தாம். செக்குமாட்டுத்தனத்தால் மரத்துப் போய்விடாமலிருக்க, உறைக்கும்படியாக கிள்ளிப்போவதுதான் நம் எழுத்தும் அதன் பயனும். இந்தக் கிள்ளல் அரிக்கும் மனதுக்கு சுகமாகும்; மரத்த மனதுக்கு சுரணையாகும்.

'கவிதாசரண்' அறிமுகமான காலத்திலிருந்து இவர் இந்த விமர்சனத்தைத் தொடர்ந்து செய்து வருகிறார். (மெய்யான நல்லெண்ணத்தோடுதான்.) கவிதாசரண் என்னும் விமர்சகனிடமிருந்து படைப்பாளியை மீட்பதற்கான முயற்சிதான் இவரது வைராக்கியம் என்று நான் ஆறுதல் கொண்டாலும் விமர்சகனாயிருப்பதில் எனக்குள்ள வைராக்கியம் இவருக்குள்ளதைவிட சற்றுக் கூடுதலாக இருப்பதை இவர் அறிந்தே வைத்திருக்கிறார். (மிகுந்த நட்புணர்வோடு இது தொடர்பாக இவர் என்னோடு நிகழ்த்திய கருத்துப் பரிமாற்றங்களை ஒரு நேர்காணலாகவே தொகுக்கலாம்.)

மற்றபடி, என்னுள்ளும் 'படைப்பாளியைத் தொலைத்துவிடத்தான் போகிறோமோ!' என்னும் தவிப்பு திடுக்குறத்தான் செய்கிறது. வாழ்க்கையில் திடுக்குற்றே நிலைகுலைந்து போகும்படியான எத்தனையோ தொட்டுணர் சுகங்கள் தொலைந்து போயின. அவற்றின் இலக்கிய மீட்டுருவாக்கம் என் இருப்பை நிறைவு செய்யும்போது இவரின் இடையறாத நினைவூட்டல் நன்றியோடு உணரப்படும்.

—ஆ-ர்.

படிப்பகம்

www.padippakam.com

# ஈழத்து வசன இலக்கியத்தின் மூலவர்

—வ அ. இராசரத்தினம்

சங்க காலத்திற்குப் பின்னால் தமிழ்மொழி சமயப் பெரியார்களால் வளர்ச்சியுற்றது. சமணரும் பௌத்தரும் ஜைனரும் தம்தம் சமயக் கருத்துக்களை உயிர்நாடியாகக் கொண்ட இலக்கியங்களைப் படைத்தார்கள். அவர்களைப் போலவே பின்னால் இஸ்லாமியரும் கிறீஸ்தவர்களும் தமிழிற் சமய இலக்கியங்களைப் படைத்தார்கள். கிறீஸ்தவப் போதகர்களாக வந்த ஐரோப்பியர்கள் தமிழ்மொழிக்கு ஆற்றிய தொண்டு தனிச் சிறப்பு வாய்ந்தது. அது தமிழில் வசன இலக்கியத்தைப் படைத்ததாகும்.

16ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவைச் சேர்ந்த யேசு சபைத் துறவிகள் தமிழ் நாட்டிற்குத் தம் சமயத்தைப் போதிக்க வந்தார்கள். சமயம் போதிப்பதற்காகத் தமிழ்மொழியைக் கற்றார்கள். தமது மதச் செபங்களைத் தமிழிலே மொழி பெயர்த்தார்கள். ஐரோப்பாவில் அச்சியந்திரம் கண்டு பிடிக்கபட்டதன் பின்னர் யேசு சபைக் குருக்களாற் கொல்லத்தில் ஓர் அச்சகம் நிறுவப்பட்டது. அந்த அச்சகத்தில் ஹென்றிக்கஸ் என்ற யேசு சபைக் குருவினால் கிறிஸ்துநாதர் தாமே திருவாய் மலர்ந்தருளிய பரமண்டல மந்திரம் பதிப்பிக்கப்பட்டது. இந்தியாவிலேயே அச்சில் வெளியான முதல் நூல் அதுதான்!

'பரலோகத்திலிருக்கிற எங்கள் பிதாவே' எனத் தற்போது வழங்கப்படும் அச்செபம், தம்பிரான் வணக்கம் என்ற பெயரிற் பதிப்பிக்கப்பட்டது. வீரமாமுனிவராற் செய்யப்பட்ட எழுத்துச் சீர்திருத்தங்களுக்கு முன்பாக, மெய் எழுத்துகளுக்குப் புள்ளிகளின்றியும், எகர ஒகரங்களுக்கு மேற்புள்ளியிட்டு ஏகார, ஓகாரங்களாகக் கொண்டதுமான பழைய வடிவத்தில் அச்செபம் பதிப்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரதியை வகுப்புக் கலவரங்களால் எரிக்கப்பட்ட யாழ்ப்பாண நூல்நிலையத்தில் நான் பார்த்திருக்கிறேன்.

ஆனாலும் தமிழ் வசன நடையிற் பெரிய நூல்களை எழுதித் தமிழ் வசனநடைக்கு வித்திட்டவர், இத்தாலியிலிருந்து வந்த யேசு சபைக் குருவான 'றொபேட்டி நொபிலி' என்ற தத்துவ போதகர் ஆவார். ஞானோபதேசப் பர்வத காண்டம், ஆத்தும நிர்ணயம் போன்ற பெரிய வசன நூல்களை, பதினாறாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே மதுரைக்கு வந்த தத்துவப் போதகர் எழுதினார்.

அவரைத் தொடர்ந்து 1711ஆம் ஆண்டு மதுரைக்கு வந்து, காமநாயக்கன்பட்டி, குருக்கள்பட்டி, எயிலூர், ஏலாக்குறிச்சி, புதுச்சேரி, வடுகர்பட்டி, தூத்துக்குடி, மணப்பாடு, அம்பலக்காடு ஆகிய

படிப்பகம்

www.padippakam.com



இடங்களிற் சமயப்பணி புரிந்த கொன்ஸ்ரனரியூஸ் ஜோசப் பெஸ்கி என்ற வீரமாமுனிவர் வேதியர் ஒழுக்கம், வேத விளக்கம், பேதக மறுத்தல், ஞான உணர்த்துதல், திருச்சபைக் கணிதம், வாமன் கதை, பரமார்த்த குரு கதை ஆகிய வசன நூல்களை எழுதித் தமிழ் வசனநடையை வளர்த்தார்.

தமிழகத்தில் வசனநடைக்கு வித்திட்டு வளர்த்த கிறீஸ்தவக் குருக்களைப் போல, ஈழநாட்டிலும் ஒரு கிறீஸ்தவக் குருவே வசன நடைக்கு வித்திட்டார்

ஆனால் அவர் தத்துவப் போதகரைப் போலவோ வீரமாமுனிவரைப் போலவோ இத்தாலியரல்லர். இந்தியர். கோவா நாட்டைச் சார்ந்தவர். கொங்கண மொழி பேசிய பிராமணர்!

இத்தாலியர்களான றொபேட்டிநொபிலி, டிபிறிற்றோ, ஜோசப் பெஸ்கி ஆகியோர் முறையே தத்துவ போதகர், அருளானந்தர், வீரமாமுனிவர் எனத் தமக்குத் தமிழ்ப் பெயர்களைச் சூட்டிக் கொண்டது போல ஐக்கோமே கொன்சால்வெஸ் என்ற கோவாக் குருவும் தமக்குச் சாங்கோபாங்கர் என்ற தமிழ்ப் பெயரைத் தரித்துக் கொண்டார்.

1505ஆம் ஆண்டு போர்த்துக்கீசர் இலங்கையின் கரையோரப் பகுதியைக் கைப்பற்றிக்கொண்டார்கள். 1542இல் பிரான்சிஸ்கன் சபையைச் சேர்ந்த குருக்கள் மதம் பரப்புவதற்காக இலங்கைக்கு வந்தனர். அவர்களால் கோட்டை மன்னன் பராக்கிரமபாகு மத மாற்றம் செய்யப்பட்டான். அரசனைத் தொடர்ந்து கோட்டை ராச்சியத்து மக்கள் பலரும் கிறீஸ்தவ மதத்தைத் தழுவினார்கள். கொழும்பு, நீர் கொழும்பு, சிலாபம், புத்தளம், களுத்துறை ஆகிய மேற்குக் கரைப் பகுதிகளிலும், வடக்கே மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலும், கிழக்கே திருக்கோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களிலும் கிறீஸ்தவ மதம் பரவியது.

1638இல் இலங்கையில் போர்துக்கீசர் ஆட்சி முடிவடைந்தது. கல்வீனிய மதப் பிரிவைச் சேர்ந்தவர்களான டச்சுக்காரர், போர்த்துக்கீசரைத் தோற்கடித்து அவர்களிடமிருந்த கரைப்பிரதேசங்களைக் கைப்பற்றினர். கைப்பற்றியவர்கள் கத்தோலிக்கத் தேவாலயங்களைத் தகர்த்தார்கள். கத்தோலிக்க மக்களைத் தமது வழிபாடுகளில் கலந்து கொள்ளும்படி வற்புறுத்தினார்கள். பிள்ளைகளைத் தமது புரொடெஸ்தாந்த மதபோதகர்கள் நடத்தும் பாடசாலைகளிலே சேர்ந்து கற்கும்படியும் நிர்ப்பந்தித்தார்கள்.

சுமார் ஐம்பது ஆண்டு காலமாகக் கத்தோலிக்க மக்களால் தமது மதக் கடமையை நிறைவேற்ற முடியவில்லை. கத்தோலிக்க குருக்களே நாட்டில் இல்லை. வழிகாட்ட எவருமில்லாத நிலையிலும், கத்தோலிக்க மக்கள் தம் மதத்தைக் கூடியவரை அனுட்டித்தார்கள்.

படிப்பகம்

www.padippakam.com



இந்த நிலையைக் கோவாவிலுள்ள கத்தோலிக்கக் குருவான வந். யோசேப்வாஸ் அடிகளார் தெரிந்துகொண்டார். தெரிந்ததும் இலங்கைக்கு வந்து இங்குள்ள கத்தோலிக்க மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என விரும்பினார். 1686ஆம் ஆண்டு கோவா வைவிட்டுப் புறப்பட்டு மங்களூர் வழியாகத் தூத்துக்குடிக்கு வந்து அங்கிருந்து கடல் கடந்து 1687 மே மாதத்தில் மன்னாரை அடைந் தார். ஒல்லாந்தருக்குப் பயந்து இரகசியமாக மன்னார், யாழ்ப் பாணம், புத்தளம் ஆகிய இடங்களிற் சமயப் பணி புரிந்தார். 1692இல் கண்டியை அடைந்தார். கண்டியரசன் அவரது சமயப் பணிக்கு ஆதரவளித்தான். இதனால் இலங்கையிற் பணிபுரிவதற் காக மேலும் சில குருக்களை கோவாவிலிருந்து அழைத்திருந்தார். அவரது அழைப்பை ஏற்று 1705ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 30ஆம் நாள் மூன்று கோவாக் குருக்கள் இலங்கைக்கு வந்தனர். அம்மூவரில் ஒருவர்தான் ஜக்கோமே கொன்சால்வெஸ் என்னும் சாங்கோபாங்க அடிகளார்!

கொன்சால்வெஸ் கோவாவில் திவாரி என்ற ஊரில் 1676ஆம் ஆண்டிற் பிறந்தார். இளம் வயதிலேயே லத்தீன், போர்த்துக்கேய மொழிகளையும், தாய்மொழியான கொங்கணத்தையும் கற்றார். விவேகமும் கல்வியில் ஆர்வமுமுள்ள கொன்சால்வெஸ் மேற் கல்வி கற்க றோமுக்குப் போக விரும்பினார். ஆனால் அது வாய்க் கவில்லை. அதனாற் கோவா சர்வகலாசாலையிற் சேர்ந்து கலைப் பட்டம் பெற்றார். பியானோ, வயலின் ஆகிய இசைக் கருவிகளை மீட்டுவதிலும் பாண்டித்யம் பெற்றார். குருவாக விரும்பினார்

குடும்பத்தைத் தாபரிக்க வேண்டியவனான மூத்த மகன் குருவாவதைப் பெற்றோர் விரும்பவில்லை. ஆனாற் பெற்றாரை யும் மீறி 1700ஆம் ஆண்டிற் குரு பட்டம் பெற்றார். குருவான தும், தான் படித்த குருத்துவக் கல்லூரியிலேயே இறையியல், தர்க் கம் படிப்பிக்கும் ஆசிரியரானார். ஆனாலும் ஆசிரியப் பணியை விட சமயப் பணியே மேலானது என எண்ணியவராக 1705ஆம் ஆண்டு இலங்கைக்கு வந்தார். இலங்கை வந்தபோது அவருக்கு வயது இருபத்தொன்பது.

வீரமாமுனிவர முப்பது வயதுகளுக்கு மேல்தான், தமக்கு முற் றிலும் அன்னியமான தமிழ் மொழியைக் கற்று, அதிலே பாண்டித் யம் பெற்றார். அவர் சுப்ரதீபக் கவிராயரிடம் தமிழ் கற்றார் எனச் சொல்லப்படுகிறது! ஆனால் 29 வயதினரான கொன்சால்வெஸ் யாரிடம் தமிழ் கற்றாரோ? கோவாவில் இருந்து இலங்கை வரும் வழியில் திருவாங்கூரில் தமிழைப் பேசவும் ஓரளவுக்கு எழுதவும் கற்றுக்கொண்டார். இங்கு வந்ததும் அரிப்பு, முசலி, புளியங்கு ளம், இலுப்பைக்கடவை, குருக்கள்குளம், தேக்கம்பிட்டி வெள்ளாங் குளம், பல்லவராயன்கட்டு, பனங்காமம் என்ற வன்னித்தமிழ் ஊர் களிலேதான் அவர் பணியாற்றினார். தான் ஏற்கனவே திருவாங் கூரிற் கற்ற தமிழை விருத்தியாக்கியிருக்கலாம்!

படிப்பகம்

www.padippakam.com



1706இல் அவருடன் வந்த மிக்கேல் மெல்லோ என்ற இளங்குரு மரணமடைந்தார். அதனால் இறந்தவர் பணிபுரிந்த மூன்று கோரளை, சப்ரகமுவா, ஊவா, குருபோவில, சீத்தவாக்க, கொங்கம என்ற சிங்களப் பிரதேசங்களிலும் பணிபுரிய வேண்டியதாயிற்று. அதற்காகச் சிங்களத்தையும் கற்றார். மிக விரைவாகவே அம்மொழியையும் கற்றார். அவர் மொழி கற்கும் வேகத்தினைக் கண்ட குருமுதல்வர் யோசேப்வாஸ் அடிகளார் அவரைத் தம்மோடு கண்டி நகரிலேயே வைத்துக் கொண்டார். கண்டி நகரிலே தம் சிங்கள மொழியறிவை மேலும் விருத்தியாக்கிக் கொண்டார்.

பௌத்த சங்கத்தினர் 'பண' சொல்லும் போது இலக்கண சுத்தமான உயர்ந்த சிங்களத்திலேயே மக்களுக்கு உபதேசிப்பர். (பண என்றாற் சொல் என்று அர்த்தம். அதாவது புத்த பகவானின் சொற்கள்.) அதற்காகப் பௌத்த பிக்குகள் சிங்கள மொழியைத் துறைபோகக் கற்றனர். பௌத்த பிக்குகளிடம் கொன்சால்வெஸ் அடிகளார் சிங்களத்தைக் கற்றார். இரண்டே ஆண்டுகளில் சிங்கள மொழி விற்பன்னர் ஆனார். பின்னர் தென்பகுதி நகரமான மாத்தறைக்குச் சென்றார். மாத்தறையிலும் அவர் சிங்களத்தை மேலும் கற்றார். சிங்களத்திற் பாண்டித்தியம் பெற்றதும் 1715இல் 'திறிஸ்தியானி பள்ளிய' என்ற சிங்கள நூலை எழுதினார். பின்னர் இரண்டு போர்த்துக்கேய–சிங்கள அகராதிகளையும் சேர்த்து இருபது சிங்கள நூல்களை எழுதினார்.

1730ஆம் ஆண்டு அவர் 'வியாகுல பிரசங்கம்' என்ற நூலைத் தமிழில் எழுதினார். இது பின்னர் பல பதிப்புக்களாக யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாயிற்று. ஏறத்தாழ எல்லாக் கத்தோலிக்க மக்கள் வீடுகளிலும் இந்நூல் உண்டு. இந்நூல் கிறீஸ்துநாதர் தம் பாடுகளுக்கான நேரம் சமீபித்ததையுணர்ந்து ஜெத்சமெனி பூங்காவிற் செபித்தது தொடக்கம் யூதராற் பிடிக்கப்பட்டு, விசாரிக்கப்பட்டு, முள்முடி தரிக்கப்பட்டு, சிலுவையைச் சுமந்து கொல்கொதா மலை சென்று, மலையுச்சியிற் சிலுவையிற் அறையப்பட்டு மரணித்து, பின்னர் அவர் சடலம் அடக்கம் பண்ணப்பட்டது வரையிலான சம்பவங்களை ஒன்பது 'குறிப்பிடங்களாக' — அதாவது ஒன்பது அத்தியாயங்களாகச் சொல்கிறது. இந்நூல் மக்களால் இன்றும் பாராயணம் பண்ணப்படுகிறது. மேலும் சிலுவை மரணக் காட்சிகளைப் பொம்மலாட்டப் பாணியிற் பாஸ்காக் காலங்களிற் காட்டப்படும்போதும் இந்நூல் படிக்கப்படுகின்றது. நூலின் முதலாம் பிரசங்கத்தை இப்படி ஆரம்பிக்கிறார் சாங்கோ பாங்கர்.

> வானமும் பூமியும் விருக்ஷ, மிருக, பக்ஷி முதலான சகலத்தையும் உண்டு பண்ணியவரான சர்வ வல்லப பிதா, சுதன், பரிசுத்த ஆவியாகிய திரீத்துவத்தின் இரண்டாம் பேராகிய எங்கள்

படிப்பகம்

www.padippakam.com



நாயக யேசுக்கிறீஸ்து, பாவிகளாயிருக்கிற எங்களுக்காகத் தமதனந்த செல்வ பாக்கியமுள்ள மோக்ஷ ராச்சியத்தினின்று, துக்க சமுத்திரமாயிருக்கிற பூமியிலே மனுஷனாகப் பிறந்து பாடுபட்ட அளவற்ற பாடுகளைப் பிரசங்கமாக இந்தத் தபசு நாளையிற் துவக்கம் பண்ணுவது.

அதேதெனில் நெறி நீதி பொருந்திய சுகிர்த மகிமையுடைத் தான நரபதியான இராயனுக்குத் தன் குடியானவன் செய்த துரோகத்துக்காக அவனை வதைக்க பறையிட்டுக் கொண்டு போவதை அந்த இராசகுமாரன் கண்டு, மகாதயாபர கருணையாயிரங்கி 'அவனைக் கொல்ல வேண்டாம். நானந்தக் குற்றத்தை உத்தரிப்பேனவனுக்காக. நான் கொலையுண்பேனென்'றவன் விலங்குகளைத் தானணிந்து கொண்டு கொலைக் களத்துக்குப் போவானாகில் அந்தக் குமாரன் பேரிலெத்தனை தயாபர பக்ஷமாயிறார்களோ? இந்தக் கிருத்தியத்தை மகா கீர்த்தியாய்ச் சகல லோகத்துக்கும் பிரசித்தம் பண்ணிச் செப்புப் பத்திரங்களிலெழுதி நித்தமும் நினைக்க மாட்டார்களோ! நினைப்பார்களே.

நூல் தொடர்கிறது. இரண்டாவது பிரசங்கம் யேசுநாதர் யூதர் கையிலகப்பட்ட குறிப்பிடம் காண்பிக்கப்படுவது என்றும், மூன்றாவது பிரசங்கம் யேசுநாதர் கற்றூணிலே கட்டுண்டடிபட்ட குறிப்பிடம் காண்பிக்கப்படுவது என்றும், இப்படியாக ஒன்பதாம் பிரசங்கம் யேசுநாதரின் சடலம் சிலுவையினின்றிறக்கப்பட்ட குறிப்பிடம் காண்பிக்கப்படுவது என்றும் ஒன்பது பிரசங்கங்களில் நூல் முடிவடைகின்றது. நான்கு நற்செய்திக்காரர்களும் தெரிவிக்கும் கிறீஸ்துநாதரின் பாடுகளை இந்நூல் வர்ணாலங்காரங்களோடு குறுநாவல் பாணியிற் சொல்கின்றது.

சுவிசேஷவிரித்துரை என்னும் நூல், ஞாயிற்றுக்கிழமைகளிலும் விசேட நாட்களிலும் பூசையில் வாசிக்கும் நற்செய்திகளை விவரித்துச் சொல்கின்றது. 1965இல் இரண்டாம் வத்திக்கான் சங்கம் கூடிப் பிரகடணம் செய்யும் வரை பூசைப்பலி லத்தீன் மொழியிலேயே ஒப்புக்கொடுக்கப்பட்டது. நற்செய்திகள்கூட லத்தீன் மொழியிலேயே வாசிக்கப்பட்டன. அந்த நற்செய்திகளைத் தமிழ் மக்கள் தமது மொழியிலேயே விளங்கிக்கொள்ள வேண்டும் என்று எண்ணினார் கொன்சால்வெஸ் அடிகளார். தமக்கேயுரிய பாணியில் அதை எழுதியும் வைத்தார். உயிர்ப்பு ஞாயிறன்று வாசிக்கும் சுவிசேஷத்தை,

கருமுகில்களால் மறைக்கப்பட்ட சூரியக்கதிர் முகிற்திரையைக் கிழித்துக்கொண்டு வெளிப்பட்டது போலவும், பூமியில் புதைத்த

படிப்பகம்

www.padippakam.com



வித்து மண்ணைப் பீறிக்கொண்டு வெளிவருவது போலவும் எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து மரணம் என்கிற கருமேகத்தையும், கல்லறை என்கிற மண்ணையும் கிழித்துக்கொண்டு ஒட்டோலகமாய் உயிர்த்தெழுந்த மகிமை இன்று கொண்டாடப் படுவது இதை சுவிசேஷ லூக்கா எழுதியுள்ள பிரகாரமாவது...

என நற்செய்தியைச் சொல்கிறார் கொன்சாலவெஸ் அடிகளார்.

ஆனாற் தற்போது பூசைப்பலி அத்தந்த பிரதேசத்து மொழியிலேயே ஒப்புக்கொடுக்கப்பட்டு நற்செய்தியும் அம்மொழியிலேயே படிக்கப்படுவதால் சுவிசேஷ விரித்துரை கோயில்களிற் படிக்கப்படுவதில்லை. சுவிசேஷ விரித்துரை என்ற நூல் 1/28ஆம் ஆண்டு எழுதப்பட்டது. இவ்விரு நூல்களோடு,

| | |
|---|---|
| கிறீஸ்தியானி ஆலயம் | –1728 |
| தேவ அருள் வேத புராணம் | –1728 |
| தர்ம உத்தியானம் (புனிதர்களின் சரித்திரம்) | –1728 |
| அற்புத வரலாறு | –1734 |
| ஞான உணர்ச்சி | –1734 |
| வட்டியானும் குடியானவனும் (கண்டன நூல்) | –1732 |
| நவதர்க்கம் (கண்டன நூல்) | –1732 |
| முசல்மான் வேதம் | –1734 |
| கடவுள் நிர்ணயம் (கணடன நூல்) | –1720 |
| நாலு வேதம் | –1738 |

இந்து பௌத்த இஸ்லாம் கல்வினிய மதங்களைக் கண்டிக்கும் நூல், ஆகிய நூல்களையும் கொன்சால்வெஸ் எழுதியுள்ளார் இந்நூல்களின் கையெழுத்துப் பிரதிகளை இலங்கை காலி புனித அலோசியஸ் கல்லூரி வளாகத்திலமைந்துள்ள, ஈழத்தின் பிரபல சரித்திராசிரியர் அருட்திரு S. G. பெரேரா, S.J. அடிகளாரின் நூல் நிலையத்திற் காணலாம். தமிழில் எழுதிய அத்தனை நூல்களையும் சிங்கள மொழியிலும் எழுதியுள்ளார்.

ஈழத்துத் தமிழ் வசன நடையை வளம்பெறச் செய்த ஆறுமுக நாவலரைவிடக் கொன்சால்வெஸ் அடிகளார் காலத்தால் நூறு ஆண்டுகள் முந்தியவர். ஆனால் அவர் ஈழத்துத் தமிழ் வசன நடைக்கு வித்திட்டார் என்ற விவகாரம் தமிழகத்தில் இலக்கியச் சரித்திரம் எழுத வந்த பலருக்குத் தெரியாமலிருப்பது, அல்லது தெரிந்தும் அதை மறைப்பது வேதனைக்குரியதொன்று.

கொன்சால்வெஸ் அடிகளார் தமது அறுபத்தொன்பதாம் வயதில் இறந்தார் (1745). அவரது சடலம் இலங்கை நீர் கொழும்புக்கு வடக்கே சிலாபம் பாதையில் அமைந்துள்ள போளவத்த என்ற ஊரில் அடக்கம் பண்ணப்பட்டுள்ளது. ●

படிப்பகம்

www.padippakam.com

# மண்வெட்டி

**—கண்மணி குணசேகரன்**

ஓட்டமா ஓடியாந்து மாமரத்துங் கீழ ஒக்காந் தங்காட்டியும் உசுரு பூடும் போல்ருக்கு. என்னா வெய்ய வரவு ஓட்டுல போட்டு வறுக்கற மாதிரி! எம்மாந் தூரம் ஓடறதா இருக்கு. இந்த கருமாந்தர மாடுவோ இம்மாம் அழிச்சாட்டியம் பண்ணுது. அய்யய்ய, என்னாப் பொடி! மாட்டு கூட தொரத்திக்கிட்டு ஓடறப்ப லப்பரு செருப்புல மணலு ஏறிகிட்டு, நறநறன்னு என்னா சூடு சுட்டுப் போச்சி. மாட்டுக்கூடயே ஓடலன்னா படாருன்னு மேற்கே அய்யனாரு கோயிலப் பக்கம் திரும்பிடும்னுட்டு செருப்பக் கைட்டி வுட்டுட்டு, மாட்டுவுள தொரத்திக்கிட்டு கோடியப் பக்கம் முந்திரியில அடிச்சிட்டு, போன அடிமேல வந்துப் பாக்கறன், கைட்டி வுட்ட செருப்பக் காணம். மொட்ட வெயிலுல ஓடியாந்தது வேற கண்ணு பூத்துப் போச்சி. சொயிட்டி சொயிட்டிப் பாக்றன், செருப்பக் காணம். பொடி நிக்க முடியில. வரப்புல காய்ஞ்சிப் போன தும்பச்செடி ஒன்னு இருந்துது. அது மேல ஏறிநின்னுக்கிட்டுப் பாக்கறன். நண்டு வூட்டுக் கொல்லையில ஒன்னு கெடந்துது. இன்னொன்னு, நின்ன நெலயில பாக்கறன் காணம். இப்பதான் கைட்டி வுட்டுட்டு ஓடனது, அதுக்குள்ள இது ஒன்னுக்கு மட்டும் எங்கேர்ந்து திருடன் வந்துருப்பான். நானும் சுத்தி சுத்திப் பாத்துட்டு, சரி வெய்யத் தாழ வந்து பாப்பும்னு சொல்லிட்டு அடியெடுத்து வச்சா மூல வரப்புக்கிட்ட மின்னாலேயே கவுத்துக்கிட்டு கெடக்குது. மண்ணு நெறத்திலேயே இருந்ததால, வெயில்ல பூத்த கண்ணுக்கு தெரியாமப் பூட்டுது. மாளாவெட்டி பொம்பளைக்குக் கண்ணு மங்கன மாதிரி, நெனைச்சா அசிங்கமாப் பூட்டுது.

மரத்துல ஒரு எலகூட அசையில. ஒரே இறுக்கமா இருக்குது. சலசலன்னு வேர்க்குது. பக்கத்துல கெணறு, மொளாக் கொல்லலாம் காத்து அடிச்சா குளு குளுன்னு இருக்கும். எங்க அடிக்குது. காங்கதான்

படிப்பகம்

www.padippakam.com



கணுக்காலு அளவுக்கு நெளிநெளியா எழும்புது. தலயில கட்டியிருந்த துண்ட எடுத்து மூஞ்சத் தொடச்சிக்கிட்டு விசிறிக்கறன். இந்தக் காத்துலாம் எங்கியோ போய்ட்ட மாதிரி ஒரே புழுக்கம், அணலு. மாமரத்துங் கீழால ஒக்காந்துருக்கறதுக்கே அடுக்குப் பானைக்குள்ள இருக்கற மாதிரி கமுறுது.

அசதியா இருந்துது. பூட்டுக்குப் பூட்டு உட்டுப் போற மாதிரி வலி. வலிக்காம என்னா செய்யும், கால மடிச்சிக் கீழ ஒக்கார உடாம மாடுவோ வந்துக்கிட்டு இருந்தா. காட்டுக்குள்ளேர்ந்து வெளியில வந்து உடும்பாட்டம் தலய தூக்கிப் பாத்தா, அதுவுளுக்கு கண்ணுல பச்சயா இந்த மொளாக் கொல்லதான் தெரியுது. அப்பறம் என்னா, ஒரே ஓட்டம் எக்கர்ணம் எடுத்துக்கிட்டு வருது இங்க. காட்ல முந்திரிப்பழத்தையும், முந்திரிச்சருவையும் அலம்பிக்கிட்டு இருந்ததுவுளுக்கு பச்சயக் கண்டா பாயாசத்தைக் கண்ட மாதிரி தான். கோடியில மாட்டப் பாத்துட்டா, ஒடனே கொல்லையிலேர்ந்து ஒரு காணி தலமாட்டுக்குப் போயி எதுர்ல மறிச்சி ஓட்டிக்கணும். இல்லன்னா ஒரு பாக்கு கடிக்கற நேரத்துல பனாலாப் பூடும் மொளா.

களத்துல மொளாப் பழம் காயுது. எப்பிடியும் ரெண்டு மூட்டைக்கு இழுத்துப்புடிச்சிக்கிட்டு வரும். வித்துட்டு மருந்தும் ஒரமும் வாங்கியாரணும். மொளாச் செடியில பழம் நெறயாத் தெரியுது. எடுக்கணும். பூவும் பிஞ்சுமா குலுங்க குலுங்க நிக்கிது செடி. எல்லாம் சித்தரா பருவத்துக்கு உட்ட பிஞ்சுவோ. மருந்தடிக்கலன்னா ஒன்னும் தேறாது. தண்ணிதான் ஒன்னும் எட்டிக்கில. ஒரு நாளக்கி ஒரு வாய்க்கா, ரெண்டு வாய்க்காத்தான் பாயுது. மோட்ருக்கு அரமணிநேரம் கூட தண்ணி இல்ல. கெணத்துல எத்தினி போரு போட்டும் என்னா புண்ணியம். எல்லாத்திலியும் கரிமண்ணுதான் கெடைச்சிது. அந்தக் கரிமண்ணு படுமோசம். மேல ஊர்றதக்கூட இழுத்துக்குது. அதனால போட்ட போரையே மண்ணு கொட்டித் தூக்கறதாப் பூடுது. கெடைக்கற கரிமண்ணு ஒரேயடியா கரியாக் கெடைச்சாலும் பரவாயில்ல. நெய்வேலிக்காரங்கிட்ட உட்டுட்டு எங்கனாச்சும் தலமேலத் துணியப் போட்டுக்கிட்டுப் பூடலாம். தெனைக்கும் தண்ணி இல்லாம மாசுலு வச்சு செத்து செத்துப் பொழைக்கறதவிட, ஒரேயடியா செத்துடறது மேலு. பின்ன என்னா, எம்மாம் பாடுபட்டுப் பாத்தாலும் கடைசியில கடங்குடிதான். மீந்துதுங்கற கத இல்ல.

கண்ணுலாம் எரியிற மாதிரி இருக்குது. மாமமரத்து நெழலு; கெணத்துல ரெண்டு வாளித் தண்ணி மொண்டுக்கிட்டு கீழ உழுந்தா போதும், போற எடந்தெரியாமப் போவலாம். என்னாப்

படிப்பகம்

www.padippakam.com



பண்றது. தூங்கிட்டா கத கந்தல்தான். அய்யனாரு கொளத்துல தண்ணி குடிச்சிட்டுப் பின்பக்கமா வந்து பொசுக்குப் பொசுக்குனு நொழஞ்சிடும். அப்பறம் சனகாடு பொணகாடுதான். தோண்டி யில இருக்கற தண்ணிய சாய்ச்சி மூஞ்சியக் கழுவறன். ராத்திரி சுத்தமா தூக்கம் இல்ல. மோசமா வந்துப்போச்சி மாடுவோ. நெலக்காலு மேல நின்னு, ஒக்காந்து, கெடந்து, விடியறவரைக்கும் வாதனையாப் பூட்டுது. எவங் கட்றான் மாட்ட. கேட்டுட்டாப் போதும்: “நீ சித்தர மாசத்துலலாம் பயிறு வச்சிருப்ப, அதுக் குலாம் நாங்க காவ இருக்கணுமா? காலாற மாடு வேசநாளுல நிக் காம எப்பதான் நிக்கும்?” வாய் மீண்டு வர முடியாது. ஒன்னு ரெண்டு வர்றதும் நின்னு மேய்க்கறது இல்ல. எங்கனாச்சும் உட் டுட்டு முந்திரிக்கொட்ட பொறுக்கப் பூடுது. பகல்லியும் ராவிலியும் காவ. இதுல அந்தியிலும் காலயிலும் ஒழிஞ்ச நேரத்துல தோப் புக்குப் போயி முந்திரிக்கொட்ட பொறுக்கிட்டு, பெலா மரத்துக்கு போயிட்டு வரணும். நாய்ப் பொழப்புதான். நெலச்சி நின்னது கெடயாது வாழ்க்கையில.

அதுக்குள்ள ரெண்டு கன்னுக்குட்டிவோ தெக்கேர்ந்து வந்துது. “இந்தா... இந்தா... ஒய் ஒய்”னு அதட்டனதும் அய்யனாரு கொளத்தப் பக்கம் திரும்பிச்சி. சரி போவுட்டும். போனாலும் தண்ணி குடிச்சிட்டு இங்கதான் வரும். அப்பறமா அடிச்சிக் கெழக்க உட்டுடும். பாவம் கன்னுக்குட்டிவுளா இருக்குது, தண் ணிக் குடிக்குட்டும் போயி.

பசி வவுத்தக் கிள்ளுது. காலயில குடிச்சது. ஓடற ஓட்டத்துல எங்க தாங்கும். மாமரத்துக் கெளையில தூக்குவாளி தொங்குது. காலயில கரைச்சிக் குடிச்சது போவ மீதி கம்மங்கூழு இருக் கும். ஏந்திரிச்சி வாளிய எடுத்து தொறந்தன். குப்புன்னு புளிச்ச வாட அடிக்குது. அதோட கூழ்ல பூரா செந்தல எறும்பு மெதக் குது. கீழ வச்சாதான ஏறுதுன்னு கெளையில மாட்னன். அங் கியும் ஏறியிருக்கு. போறப்போக்கப் பாத்தா ஏட்டையே கெளப்பி டும் போல்ருக்கு. பசி தாங்குல. மாஞ் சருவு ஒன்ன எடுத்து ஒரு ஒரு எறும்பா எடுத்தன். எடுத்துட்டு, கடிச்சிக்கறதுக்கு ஒரு மொளாக் கிள்ளியாறும்னுட்டு பாத்தியில போயி எறங்கனன். மேற்க அய்யனாரு கோயிலப் பக்கம் சரசரன்னு எரச்ச கேக்குது. நிமுந்து பாத்தா ஒரே செவப்புப் புழுதியா இருக்குது வெளி பூரா. எம்மாம் ஒசரத்துக்குப் போவுது ஆலமரத்து சருவு! சுத்திச் சுத்தி அடிச்சிக்கிட்டு வருது சூரக் காத்து. மண் மேகமா மர மேகமா! நானும் பாத்துருக்கன் எம்மாம் காத்தையோ. இம்மாம் பெரிசா வந்ததே இல்ல. பயங்கரமா சொயிண்டு வருது மண்ணைப் பெரட் டிக்கிட்டு.

படிப்பகம்

www.padippakam.com



சின்ன வயசிலலாம் சூரக்காத்தக் கண்டா பயமா இருக்கும். 'காத்து சாட்ட'தான் அது, அப்பிடி சுத்திக்கிட்டு வருதும்பாங்க. நடுவுல மாட்டிக்கிட்டா அவ்வளவுதான், காத்துசாட்டப் புடிச்சிக்கும் பாங்க. மீறித் தைரியமா, அண்ணாக்கவுத்தலாம் அவுத்துப் போட்டுட்டு பொட்டுத் துணி ஒடம்புலெ இல்லாம, அம்மணமா அந்தக் காத்து நடுவுல போயி நின்னு, அதுல சுத்தற சருவு ஒன்னப் புடிச்சி ஒடிச்சா, அதுல ரத்தம் வரும்பாங்க. அதாம் பேயி ரத்தமாம். கேக்கக்குள்ளியே அப்ப கொல நடுங்கும். அப்பிடி சொல்லுவாங்களே தவுர கிட்ட நெருங்கனதா யாரும் இல்ல. நானே கூட அதுலாம் பொய்ங்கிறவன் போயி சருவு ஒடிச்சிப் பாத்ததில்ல. சின்ன வயசில பயம். இப்ப அம்மணமாப் போயி ஒடிச்சிப் பாத்து அதுலாம் ஒன்னும் இல்லன்னு மூஞ்சியில அடிக்கற மாதிரி சொல்றதுக்குக் கூச்சம். இந்தச் சிக்காலலதான் இன்னம் இந்த சூரக் காத்து மேல இருக்கற பயம் தொடந்துக்கிட்டு இருக்கறது.

அய்யனாரு கோயிலு ஆலமரத்துச் சருவ வாரி செம்புலிங்கத் தாத்தாக் கொல்லையில எறச்சிட்டு, குருவங்குப்பத்தாங்க வூட்டு பன மரத்த சொயிட்டுது. படபடன்னு அடிச்சிக்குது பனமட்ட. காய்ஞ்ச பனமட்ட ஒன்னு புடி வுட்டுப்போச்சிப் போல்ருக்கு, காத்துக்கு புழுங்குதுன்னு விசிறிக்கிட்டு வருது அந்தரத்துல. மேற்க சுத்திக்கிட்டு வந்தது பட்டுன்னு மொளாக் கொல்லியப் பக்கம் திரும்பனதும் எனக்கு ஆட்டம் கண்டு போச்சி. பூவும் பிஞ்சும், நொழுஞ்சிதுனா தலமயிரப் புடிச்சி ஆட்றாப்ல ஆட்டி, பொன அடிச்சி,பயங்கர வேகத்துல சுத்திக்கிட்டு வந்துடும். மொளாக்கொல்லிக்கிட்ட வந்து லேசா வடக்கே திரும்பினதுந்தான் எனக்கு ஏறன வெஷமெல்லாம் எறங்குச்சி. இருந்தாலும் களத்துல நொழுஞ்சிட்டுது. காய்ஞ்சிக்கிட்டு இருந்த மொளாய வாரிச் சொயிட்டி விசுறுச்சி. நெல்ல வேள களத்தச்சுத்தி தொவர மௌாறு போட்ருந்த தால தப்பிச்சுது. மொளாய சூரவுட்டுட்டு மாமரத்துப் பக்கம் போனதும்தான் எனக்கு கூழ் ஞாபகம் வந்துது.

கண்ணுமூடி தொறக்கறதங்காட்டியும் ஓடி, வாளிய மூடறதாங்காட்டியும் வேல வுட்டுட்டுது. கூழ் பூரா தூசியும் துப்புமாக் கெடக்குது. அறியா புள்ளிவோ கப்பல் மாதிரி பெரிய மாஞ்சருவு ஒன்னு மெதக்குது. இந்தத் தூசிதுப்ப பாத்தப்பறம் மோசமா பசிக்குது. பாத்தா ஒன்னுங் கத நடக்காது. வெரலால தூசுத்துப்பத் தள்ளிச் சாய்ச்சிட்டு, வரப்புல ஒக்காந்து முட்டிமேல சாய்ச்சி வச்சிக்கிட்டு ஒரு பச்சமொளாய கடிச்சி சுத்தமா முழுங்கனன். கப கபன்னு எரியுது வவுறு. நெருப்பு மேல தண்ணி பாயற மாதிரி முட்டிமேல வச்ச வாளியை வாயில வச்சி ஒரே இழுப்பா இழுத்து,

படிப்பகம்

www.padippakam.com



நிமுந்தன். சுருங்கன வவுறு விரிஞ்சதும், மடங்கன எடத்துல வேர்வ உப்பு கோடுகோடாத் தெரியுது. இந்தப்புடி போதும்; இன்னங் கொறப் பொழுதுக்கு மாடு ஓட்டத் தாங்கும். வாயத் துண்டால தொடச்கிக்கிட்டு நிமுந்தா, எதுர்ல விசுவநாதன் பெலாங்கன்னு தல மட்டும் கொடை சுத்தற மாதிரி அந்தரத்துல சுத்துது.

பாவம். எம்மாங் கஷ்டப்பட்டு வச்சி, கழி நட்டு, முள்ளு வச்சி பின்னியிருந்தான். தலய மட்டும் தனியா திருவி எடுத்துக்கிட்டுப் பூட்டுது. சாயந்திரம் வந்து பாத்தான்னா வாயிலியும் வவுத்திலியும் குத்திப்பான். அவங் கன்னுக்குப் பக்கத்துலதான் 'பெரியவூட்டு மாமரம்' ஒட்டு ரகம். சும்மா புடிபுடின்னு புடிச்சிருக்கு. கிட்ட நெறுங்கனும காத்து! ஊரு ஆளுவோ மாதிரிதான் காத்தும் இருக்குமாட்ருக்கு. இல்லாதவன், வாய்க்கி செத்தவன், இவனுவுளப் பாத்துதான் மெரட்டுவானுவோ; கூரையைப் பிரிப்பானுவோ; தாலி கட்ன மாதிரி பொண்டாட்டிங்க கையப் புடிச்சி இழுப்பானுவோ. இருக்கறவன், ஆளு பட உள்ளவனக் கண்டா பாம்பு படத்தைப் போட்டுட்டுப் போற மாதிரி கமுக்கமாப் பூடுவானுவோ. பாவம் விசுவநாதன். தல கூடன கன்னு பூட்டுது. இனி அது மாதிரி வச்சி உண்டாக்க ரெண்டு மூனு வருஷம் ஆவும்.

இதுக்கு மின்னாடிலாம் சூரக்காத்து வந்துருக்கு. கோழி சேக்கரிக்கறாப்ல வரும். சும்மா அப்பிடி இப்பிடி கண்ணாம்பு சுத்தற மாதிரி சுத்திட்டுப் பூடும். என்னாத்துக்கு அறிகுறியோ இம்மாங் கொடுமப் பண்ணுது. யோசனப் பண்ணிக்கிட்டு இருக்கும்போதே காத்து நேரா நண்டு வூட்டுக் கெணத்துப் பக்கம் போச்சி. எவனோ துணி காய வச்சிருக்காம் போல்ருக்கு. அப்பிடியே சுருட்டி கெணத்தக்குமேல ரெண்டு சுத்து சுத்தி கெணத்துல அமுத்திட்டுது துணிய.

இப்பிடிதான் நாலஞ்சி வருஷத்துக்கு மின்னால கேசவன் ஊரு ஏரில துணி தொவைச்சி கரமேல காயப்போட்ருக்கான். இந்த மாதிரிதான் சூரக்காத்து வந்துட்டுதாம். துணி தொவைச்சிக்கிட்டு இருந்தவன் ஓடியாந்து துணிவுள சுருட்டறதாங்காட்டியும் நொழஞ்சிட்டுது. எந்தத் துணியப் புடிப்பான்; சுருட்டுவான். அது அது மண்ணப் பூசிக்கிச்சி. ரெண்டு மூன பக்கத்து ஓடயில கொண்டு போயி முள்ளுல வச்சி அமுத்திட்டுது. ஆனா ஒரு வேட்டிய மட்டும் உடுலியாம். அந்தரத்துல பறக்குதாம். 'அய்யோ வேட்டி, அய்யோ வேட்டி'ன்னு கத்தறானாம் கேசவன். கோயில்ல ஒக்காந்திருந்தவங்க எல்லாம் எனுமோ ஏதோன்னுட்டு வெளிய ஓடியாந்து பாத்தா கத்திக்கிட்டியே கேசவன் ஓடறானாம். கதயில வர்ற மாயக்கம்பளம் மாதிரி பறந்து போவுதாம் வேட்டி. யாராலதான்

படிப்பகம்

www.padippakam.com



என்னா செய்யமுடியும். காத்துக்கு காதா இருக்கு போட்டுடுன்னா போடறதுக்கு. கேசவன் கத்திக்கிட்டியே ஓடறான். அவந் தொவைக்கறது எல்லாம் ரெட்டிவூட்டுத் துணிமணிதாம். "என்னா சொல்வாங்களோ, வேட்டி போனதுக்கு." பாக்கறவங்களுக்கு சிரிப்பாவும் இருக்கு; கேசவனப் பாத்தா பாவமாவும் இருக்காம்.

அதும் பிறகு கொளஞ்சி சைக்கிள எடுத்துக்கிட்டு ரோட்டு மேலயே போயி, வேட்டிய அடி நடத்தறானாம். அங்க இங்க இருக்கற சன மெல்லாம் வேட்டிய வேடிக்க பாக்குதுவோ. தண்ணியில உட்டு அலசவும் புழியவும் ஒதறுவுமாப் போவுதாம் மேல. கடைசியில இருளக்குறிச்சி ஏரிக்கரையில இருக்கற இலுப்ப மரத்துல சிக்கி நின்னிச்சாம். ஏறி எடுத்தாந்து பாத்தா வெள்ளவேளேர்னு தொவைச்ச வேட்டி சேவேர்னு இருக்குதாம் புழுதி அண்டி.

அதுமாதிரிதான் இப்ப துணிய எடுத்து கெணத்துக்குள்ளப் போட் டுட்டுப் பூட்டுது. கெணத்துல ஆளுவ இருக்கறானுவுளா இல்லி யான்னு தெரியில. அதுக்குள்ள காத்து கெழக்காலப் பக்கமா நவுந்து ஏரிக்கரைக்கும் இங்காண்ட இருக்கற ஒரு பெரிய முந்திரி மரத்துல நொழஞ்சி சரசரன்னு சருவ அள்ளிக் கெடாசுது அந்தரத் துல. உள்ள கொட்டப் பொறுக்கிக்கிட்டு இருந்த ரெண்டு பேரு எனுமோ ஏதோன்னு வெளிய ஓடியாறாங்க. ஆடி மாசத்துல பறக் கற ஈசலப் புடிக்கறதுக்கு வட்டம் போடற குருவிவுளாட்டம் தெரி யுது, அந்தரத்துல இந்த முந்திரிச் சருவுலாம் சுத்தறது.

மரமட்ட அதிகமா இல்லாததால இங்கேர்ந்து பாக்கப் பாக்க எனுமோ மாதிரி இருக்கு. சன நடமாட்டமில்லாம் ஏரிக்கும் அங் காண்ட முந்திரியிலதான் அதிகமா இருக்கும். நானு திரும்பி மொளாக் கொல்லியப் பாத்தன். சூரக்காத்தப் பாத்துக்கிட்டு இருக் கற நேரத்துல, இங்க மொளாக்கொல்லிய சூரவுட்டுடப் போவுது. ஒன்னியும் காணம். மறுபடியும் கெழக்கத் திரும்பனன்.

முந்திரியப் பதம் பாத்துட்டு, காத்து லேசா வடக்க காட்னாப்ல கெழக்க நவுந்துது, ஏரிமோட்டப் பக்கம். அப்பிடியே கீழ எறக் கத்துல இருக்கற நொச்சி செடியலாம் ஒரு சொயிட்டு சொயிட்டி மாவரைச்சிட்டு ஏரிக்கர மேல ஏறும். ஏரி மோடு படு உதிரப் பொட்ட. நடப்பாட்டையில வேற மாவு மாதிரி கெடக்கும் பொட்ட மண்ணு. காத்து சுத்த செவப்பா மாறும். காத்து ஏரி மோட்டு எறக்கத்த நெருங்கிக்கிட்டு இருக்கும்போதே, உச்சிமோட்ல அங் காண்டேர்ந்து ஒரு வெறுவு கத்த ஏறறது தெரிஞ்சதும் எனக்குப் பக்குன்னு பூட்டுது. "எவனோ மாட்டிக்கிட்டான். அங்காண்ட எறக்கத்துலேர்ந்து ஏரிமோட்ல எறங்கவும், இங்காண்டேர்ந்து

படிப்பகம்

www.padippakam.com



காத்து நொய்மண்ண மூஞ்சிக்கு நேரா சொயிட்டி அடிக்கவும் கண்ணும் தொறக்கமுடியாது: கத்தயையும் புடிக்க முடியாது. கொடுமதான்."

இப்பிடி சொல்லிக்கிட்டு இருக்கும் போதே, ஆளு இல்ல பொம்பள சனமாட்ருக்கு, ஏரிமோட்ல ஏறவும், அதுக்கு மேல சூரக் காத்து எதுக்கொண்டு போவவும் சரியா இருந்துது. காத்தப் பாத்துட்டு தெவைச்சி நின்னு, கத்தய கெட்டியா இருக்கிப் புடிக்குது. இருந் தாலும் காத்து மோசம். நடுச்சொழல்ல மாட்டிக்கிச்சாச்சு பொம் பள, அப்பிடியே ஒரு சுத்து சுத்தி ஒசரத் தூக்கிச்சி. என்னாப் பண்ணுவா பாவம். வெறுவுக் கத்தயத் தூக்குவாளா, முட்டிக்கு மேல ஏறன பொடவயப் புடிப்பாளா. வெறுவ வுட்டுட்டு பொடவய புடிச்சி கீழ அமுத்தனா. கத்த வெறுவு அங்காண்ட தாக்குப் பள் ளத்துக்குப் பூட்டுது

சும்மாடு நழுவி, கொண்ட அவுத்துக்கிட்டு காத்துல பறக்குது. இடுப்புல இருக்கறது அவுத்துக்கும் போல்ருக்கு. முந்தானிய காத்து இழுக்குது. காட்லேர்ந்து ஒடிச்சித் தூக்கியாந்த வெறுவு, அதோட காத்து சுத்தித் தூக்னப்ப சனம் இருந்திருந்தா எம்மாம் அசிங்கம். எலவுட்ட மரமாட்டம் நின்னவ, எனுமோ மண்ண வாரி உடறாப்பல காத்து போன பக்கமா கைய நீட்டி ஆட்றா.

இங்கேர்ந்து பாக்கறத்துக்கு, ஏரிமோட்டுமேல கைய ஆட்றதுதான் தெரியுது. என்னாப் பேசறான்னு, காதுல வுழுல. ஆனா "சாண் டக் குடிச்சவங் காத்த, காடு ஏலம் உட்டு கொட்ட பொறுக்கத் தான் யாரும் கூப்புடுலன்னு, நாலு வெறுவு ஒடிச்சாந்துனாச்சும் வித்து வவுத்தக் கழுவலாம்னு பாக்கறன் இந்த மொட்ட வெயிலுல. இதுகூட ஒனக்குப் பொறுக்காம ஏம்பாவத்துல காயறுத்துட்டு என்னப் பங்கப்படுத்திட்டுப் போற..." இப்பிடிதான் பேசிக்கிட்டு நிக்கிறான்னு மட்டும் நெனச்சிக்கிட்டு, ஏந்திரிச்சி ஏரிமோட்டப் பக்கம் போனன். "போயி அந்த வெறுவக் கத்தயத் தூக்கி வுட் டுட்டு வரலாம், பாவம்." ●

(புதுப் பூவும் பிறந்த குழந்தையும் புனைவுகளற்று, பூச்சுகளற்று மூச்சு முட்ட முட்ட மணக்கும் கண்மணியின் எழுத்தைப் போல. மூக்கில் நீர் கோத்தவர்களும் 'தாய்மொழி'யைத் தவிர்க்கிறவர்க ளும் செண்ட் பூசிக்கொண்டால் போயிற்று. கரையில் நிற்பவ னுக்கு குளம் குளிரும். குதித்துவிட்டால் குளிரை ஊடறுத்து நீரின் இதம் சுகமளிக்கும் 'தாய்மொழியைப் போல. —ஆ-ர்.)

படிப்பகம்

www.padippakam.com



# யூமா. வாஸுகி கவிதைகள்

## 1. சுய உருவப் படம்

குறை! குறைதான் அது
சுற்றி வருகிறது குறை
உங்கள் முகவரிக்கு வரும் கடிதங்களை
தபால்காரரிடமிருந்து பிடுங்கிக் கிழித்தெறியாது
சாந்தமானது நாகரிகமானது ஆனாலும் அது குறை
சுற்றி வருகிறது
உங்கள் கவிதைப் புத்தகங்களை
அள்ளித் தெருவில் எறியாது
குறை வன்மையறியாதது
உங்கள் பூஜையறை விக்ரகங்கள்
பின்னப்படாதிருப்பதற்கு உத்தரவாதம்
உங்கள் புணர்ச்சியில் லயங்கூடி வரும்போது
உறுப்புகளுக்கு நடுவில் தடுப்புண்டாக்காது
நேயம் மிகக்கொண்ட குறை
உங்கள் உறவுகளின் கண்ணிகளை
கடித்துத் துண்டாக்காது
நல்லதனம் நிரம்பியது
உங்கள் பயிர் நிலத்திற்கு தீயூட்டாது
சங்கீதத்தின் மீது பரிவுள்ளது —ஜன்னலுக்கு
வெளிப்புறத்தில் நின்று கேட்குமேயல்லாது
உடைத்துப்போடாது உங்கள் இசைக்கருவிகளை
ஆனாலும் அது குறை. சுற்றி வருகிறது
வியாபார ஸ்தலங்களின் நித்ய அலுவல்களை
மதிக்கும் குணமுடையது. கொள்ளையிடாது
உங்கள் உடையலங்காரங்களையெல்லாம்
அதுவும் மகிழ்வுடனே அழகு பார்க்கும்
நிர்வாணமாக்கி கிழித்து சேற்றில் புரட்டாது
அது கொஞ்சம் ரசனையுடையது
உங்கள் ஓவியங்களின் மீது
ஆங்காரமாய்க் காறி உமிழாது
சமூக நலனில் தன் பங்கையும் உணரும் குறை

படிப்பகம்

www.padippakam.com



கல்வித்தலங்களை தரைமட்டமாக்காது
சூறை சுற்றி வருகிறது
அச்சமற்றிருங்கள். இயல்பாயிருங்கள்
அது உங்களை ஒன்றும் செய்யாது
தாடியுடைய சூறையொன்று
முழு வயிறும் பற்றிப் பசி எரிய
வாகனங்களுக்கிடை புகுந்து
எங்கோ போகிறது வேகவேகமாய்.

## 2. நடுவில் சில கேள்விகள்

புத்தக வாக்கியங்களிடையில்
பட்டென வந்தமரும் கரப்பான்பூச்சி
பேரோசையுடன் பாலத்தில் ஓடத்தொடங்கும் ரயில்
வெளிச்ச மணைந்து மின் விசிறி
கீச்சிடலற்ற நொடி
பொருட்களையெல்லாம் வண்டியேற்றிய பின்
குடியிருந்த வீட்டின் துப்புரவு
கொடி அறுந்து மண்பிடித்த ஈர உடைகள்
நெடுஞ்சாலை வாகனங்களுக்கிடையில் ஒன்று
சக்கரங்கள் தேய நிற்கும் ஒலி
கடைத்தெருக் கும்பலுக்குள்
தென்பட்டு மறைந்துபோன பழைய அறிமுகம்
எல்லாவற்றின் பின்னுள்ள
திகைப்புக் கணங்களில்
ஏளனக் குரலொன்று கேள்வியிடுகிறது
என்னவென்பதாய்
நானும் பதிலுக்கு இதுவரை
என்னவென்பதாய் இருந்திருக்கிறேன்
முதுகொடிந்து பொறுக்கிய சொற்ப விதைகளையும்
உடைத்துச் சோதிக்க உத்தரவிடும் அது
மதுக்கோப்பைகள் இன்னும்
சத்தமாக உரசிக் கொள்ளட்டும்
எந்நேரமும் அலாரம் ஒலிக்கும்படி

படிப்பகம்

www.padippakam.com



ஒரு கடிகாரம் தயாராகட்டும்
பாட்டென்றில்லை— உரத்த குரலில்
கத்தவும் செய்யலாம்
இதனிடை திடம் பிளந்து
பாழ்நிறுவும் வினா வரின்— பதிலுக்கு
கொஞ்சம் அவகாசம் வேண்டும்
இறுதியும் நிகழ்வது வரை.

3.

தான் ம்பங்கித் தீராத காதற்பூசனை
இரவுக் கருவாளைப் பட்டையுரித்து நுகரும்
மனமேறியமர்ந்த கண்கள்
பஞ்சம் பிழைக்கப் பாய்கின்றன
என் மூளைச் சாறருந்தி தெருவோடு போகின்ற
அய்யோ என் பெருந்திருப் பெண்ணே
உன் வதனம் திரும்பியொரு படையலிடு
போதமுற்றி உன் நிழலோடு
புரண்டு போகிறதென் சித்தம்
சுருதிக் கட்டைகளின் மீதுன்
பருவங்கூம்பிக் கட்டவிழும்
யௌவனத் துளியொன்று சொட்டியதிர்கின்ற
ஓசையில்
மிரண்டொடுங்குகின்றன ஊழியலைகள்
பகலிரவாய் எழுதிய பெண்ணின்
புறவரிப் படத்திற்கு— கற்பிதச் சூடுண்டு
முத்தங்கொண்ட நாணத்தில் துவளும் தலையணை
போலச்செய்து இறுகும் பாறையில்
உன் உடல் பதிய
ஒளிப்பரல்கள் சிதறும் பாறையுடைந்து
அட . . .
தயையொடு சம்பவி — அவாவுறு — முறுவலி
புணர்ச்சி விழை
பிரபஞ்சத் தாண்டவத்தில்

படிப்பகம்

www.padippakam.com



என் துணையாளாய் சகாயம் செய்
காமத்தாலான புலித்தோல் மீதென்
நிஷ்டையும் நித்திரையும்
தாடி விழுதுகள் ஒவ்வொன்றிலும்
தொட்டில் கட்டியாடுகின்ற பெண்கள்
தான் மயங்கித் தீராது.

## 4. ஊற்றடைத்தல்

நள்ளிரவில் விளக்கணைய
ஆடுகளமாகுமென் படுக்கை
ஜதை ஜதையாய்க் காலடிகள்
போதைச் சித்தத்தில் நடக்கும் ஒலி
நடையின் லயம் கலையும்
பொருந்தாச் சேர்க்கையில்
மோதும் எதிர் நின்று
மோதிப் பிரிந்த இடைவெளி
தெளிவதற்கு — பின்னும்
முடிவுக்குப்போல வரும் வாக்கியத்திலிருந்து
கலைந்து பிறக்கும் காலடிகள்
பாதங்களின் வன்மையிறங்கும் மிருதுவில்
முட்கரடுகளில்
அடித்தோல் கிழியும்
ரத்தம் பரஸ்பரம்
பக்கங்கள் சுருண்ட அலையுடைந்து
எழுத்துகள் பதுங்குமொரு
துப்பாக்கிக் குழலில்
விடிகிறது — நாளையிரவு
விசையழுத்தி
ஓசைகளைக் கொட்டவரும்
விரல் முடங்க — அறைக்குள்
நுழையாதிருக்க வேண்டும் புத்தகங்கள்.

படிப்பகம்

www.padippakam.com



## 5. சவால்

மழையில் நனைந்து நடுங்கி
என் வீட்டுக்கதவை இரவில் தட்டிய வெற்றி
தலை மறைத்துச் செல்ல
ஒரு குடை கேட்டு இறைஞ்சி நின்ற போது
நான் என் கேடயத்தைக் கொடுத்தேன்
வேறெங்கும் செல்லப் பிரியப்படாமல்
வாசலருகிலேயே கிடக்கிறது அதுமுதல்
கானக வழியிடையில் காலில்முள்தைத்துக் கடவுள்
துடித்துக் கிடந்தான்
ஊன்றிக் கொண்டு போகச் சொல்லி
என் உடைவாளைக் கொடுத்தேன்
அவன் இலக்கை மாற்றிக்கொண்டு
எனக்குப் பின்னேதான் வந்துகொண்டிருக்கிறான்
நதியில் நீந்திய தேவதையின் ஆடைகளை
வெள்ளம் உருவிப்போனபின் — பலகாலம்
பழகிய சிலந்திகளால் மானம் மறைத்து
மலைக் குகையில் கிடந்தாள்
என் உடுப்புகளை அவிழ்த்துக் கொடுத்த பிறகு
தலைக்குயரே மிதக்கிறாள் — நான்
செல்ல வேண்டிய பாதையைத் தெரிவு செய்ய
வலிமையின் குழந்தைகள் செய்த
விளையாட்டுப் படகை
வெள்ளோட்டம் பார்க்கக்
கொஞ்சம் ரத்தம் கொடுத்தேன்
என் மூச்சில்புகுந்து உடலில் தங்கின குழந்தைகள்
நான் வாளற்றவன் — காப்பற்றவன்
உடையும் உதிரமும் அற்றவன் — விதியே
உன்னைப் புதைக்க வேண்டிய
இடத்தைத் தெரிவு செய்து
சமருக்குத் தயாராகி வா!

படிப்பகம்

www.padippakam.com



## ப்ரியம் கவிதைகள்

1.
இந்தப்
பள்ளியின் கணக்கு வாத்தியார் பெருமை
மாளாது சொல்லி. கணக்கில் புலி.
10ஆம், 12ஆம் வகுப்பு லாக்ருதமும், அல்ஜீப்ராவும்
அற்புதமாய் விளக்குவார் மாணவர்கட்கு.
அவரிடம் பயின்ற மாணவர்கள்
அரசுத் தேர்வில் தோற்பதேயில்லையென அறிய, அறிய
தம் மக்களைச் சேர்த்தனர் பெற்றோர்கள் பல கனவுகளோடு.
மாணவர்களின் வருகை
வருடத்திற்கிருமுறையாக ... டியூஷன் சொல்லிக்
கொடுத்தவர் டுடோரியல் வைத்தார்.
கார், பங்களா வாங்கி, பின்
கான்வென்ட்டை நிறுவினார். வாத்தியார்
வேலையைக் கைவிட்டு
பிரின்சிபால் ஆனார்.

அந்தக்
கான்வென்டின் பிரின்சிபால் ரொம்ப மோசம்.
ஒரு இடத்திற்கு டொனேஷன் கேட்கிறார்
வாய் கூசாமல்.
பழைய வாழ்க்கையை நினைத்துப் பார்த்தாரா!
கணக்கில் என்ன புலி.
லாக்ருதமும் அல்ஜீப்ராவும் இவருடைய
கண்டுபிடிப்பா? வருடத்திற்கிருமுறை
போட்ட அதே கணக்குகளைத் திரும்பத் திரும்ப
போட்டுக் காண்பிப்பது என்ன அறிவாளித்தனமா?
கணக்கை வைத்து கான்வென்டை எழுப்பினார்.
எம். எல். ஏ., மந்திரி பழக்கமெல்லாம்
இப்போதுதான்.
சைக்கிள்கூட இல்லாமல் நடந்து போன
காலத்தை நினைக்கவில்லை அந்தக்
கணக்கு வாத்தியார்!

படிப்பகம்

www.padippakam.com



2.

கண்ணுக்குப் புலப்படா நிழல்களில்
உருவாகி
குடும்பங்களில், நிறுவனங்களில்
சிறைச்சாலைகளில்
(பள்ளிகளிலும்)
பின்புறமாய்
தெரியா மொழிகளின் பெயர்ப்பாய்
அலங்காரமாய் முழங்கிடும்.

குரல் வரிசைக்கிடையிடையே
பின் பாதி நிலம் சரிய
ஊசிகளில்
அறிவிக்கும் இரகசியமாக
தம்மை- தமது பராக்கிரமங்களை.

மெல்ல ஊறும்.
குழப்ப மனங்களை கவ்வியமர்த்தி
வாகனமாக்கும்.
தெருவில் முழங்கும்.
ஆளுமையானதொரு பாவம்
காட்டும்.

வீசியெறிந்த காலணிகளில்
மலம் ஒற்றி
தூக்கியாடி, நனவிலியாகி
பின்னேகி புது வேதம் சொல்லும்
கபாலம் கடந்து
சுவர் ஏறி உருவங் கொள்ளும்.

இனி,
செதுக்கும் உளி.
சட்டமாகும்.
சட்டத்தில் ஆகும்.
புறமாய்த் திரியும் வெளிச்சத்தில்
மேலுமொன்றாய்.

படிப்பகம்

www.padippakam.com



## நாசரின் பயணம்

உயர்ந்திருந்தது மரம்
ஒரு காலத்தில்
கிளை பரப்பி
இலை துளிர்த்து
பூ பிதுக்கி
வேர் விரித்து

வந்தமர்ந்தன பறவைகள்—
நிழல் சுகம் தேட
களைப்பைத் தீர்க்க
இருந்து எச்சமிட
அடை காக்க
பழம் தின்ன

நிமிர்ந்த திணவு
நறுக்கத் தூண்டியது—
காய்
பூ
இலை
கிளை
விழுது
கூர் மிஞ்சிப் போக
விழுந்து தொலைத்தது
ஆணி வேரிலும்

இருக்கிறது
பெயர் — 'பட்ட மரம்'
காத்திருக்கிறது
காற்றின் வரவுக்காய்
மண் சேர்ந்து
மக்கிப் போக.

படிப்பகம்

www.padippakam.com

# சாம்பிக் கனலும் சாம்பல்

● அன்பார்ந்த தோழர் கவிதாசரண் அவர்களுக்கு, வணக்கம். தங்கள் கடிதம் கிடைத்தது. குழந்தைகளுக்கு தேர்வுகள் நடந்தவண்ணம் உள்ளன. திருப்புமுனைத் தேர்வுகள். எனவே பதில் தர தாமதம். உங்கள் கடிதத்தில் ஓரிடம் என்னை வெகுவாக நெருடியது. கவிதாசரணோடு எனது தொடர்பு என்பது நான் கொடுத்த கவிதை வெளியிடப்படுவதை ஒட்டிதான் அமைகிறது என்பதுபோல எழுதியிருந்தீர்கள். இவ்வளவுதானா நீங்கள்? கவிதாசரண் நம் இதழ். அதில் ஒரு படைப்பு வெளியாகத் தகுதியிருந்தால்தான் அதைத் தங்களிடம் தருவேன். அதைத் தந்த பின் அதன் தரம் பார்க்கும் தரம் தங்களுக்கு மட்டும்தான் சொந்தம் என்று நினைப்பீர்களே யானால் அப்புறம் என்ன சொல்வது? கூட்டு உழைப்பு, கூட்டுப் பொறுப்பு என்பதெல்லாம் ஏட்டளவில்கூட இல்லை என்பதே நாம் காணும் நடைமுறை உண்மை. தன் முனைப்பு– தங்களை மட்டுமல்ல, யாரிடமெல்லாம் இது படர்கிறதோ அவர்களை எல்லாம் வரலாற்றில் அடையாளம் இல்லாமல் ஆக்கியிருக்கிறது. தங்களுக்கு நான் கடைசியாக ஏற்படுத்திக் கொடுத்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளாமல் விட்டுவிட்டீர்கள். ஆசிரியர் குழு என்ற அமைப்பை ஞானியைப் போலவே தாங்களும் அவமதித்தது என்னை அதிர்ச்சியுறச் செய்தது. ஆனால் ஒற்றை ஆளாக இருந்து கொண்டு 1½ லட்சம் செலவு செய்திருக்கிறேன் என்று அதிர்ச்சியுறச் செய்கிறீர்கள். உண்மையில் உங்கள் அர்ப்பணிப்புக்குத் தலை வணங்குகிறேன். விதையிலிருந்து தோன்றிய மரமல்ல நீங்கள். ஒரு கொம்பிலிருந்து முளைத்த மரம். சிறுபத்திரிகை இயக்கத்தில் கண்ணதாசன் தாக்கத்தில் வந்து சேர்ந்த "தனிப் பெரும்" மனிதர் நீங்கள். உங்களிடத்தில் 'தான்' என்கிற முனைப்பு இருப்பதில் வியப்பில்லை. ஆனானப்பட்ட ஞானியே இதில் அடிசறுக்கி விட்டார். இனி நான் யாரை எதிர்பார்த்து என்ன? 'உங்களை உங்கள் பாதையில் செல்லவிட்டு ஓரத்தில் ஒதுங்கிக் கொள்ளலாம். ஏதோ முடிந்தால் உதவி செய்யலாம்' என்று ஜெயந்தன் அன்று கூறியபோது நான் பெரிதும் வருத்தம் உற்றேன். தங்களுக்குத் தெளிவில்லை என்பதற்கு ஒரே சான்று– இதழ் இலட்சிய வரிகளில் "தமிழின் கலாச்சார – பண்பாட்டு மதிப்பீடுகளை" என்று எழுதி இருக்கிறீர்களே. எதற்கு ஒரு பொருளுக்கு இரண்டு சொற்கள்? கோபப்படாதீர்கள். சுட்டிக் காட்டினால் திருத்திக் கொள்பவனே தோழன். அசோகமித்திரனை நார்நாராகக் கிழிப்பதை விட்டு அவனுக்கென்ன வாழ்த்தும் போற்றுதலும்? எந்தத் தமிழினப்

படிப்பகம்

www.padippakam.com



பண்பாட்டு மதிப்பீட்டைத் தனது இலக்கியத்தில் தேடல் ஆக்கியுள்ளான் அ. மி.? இந்து வெறியன் இராமகோபாலனின் சம்பந்திக்கு நீங்களும் சாமரம் வீசுகிறீர்கள். வெட்கக் கேடு.

**கனல் மைந்தன், கோவை-2.**

★ அக்கினி புத்திரனின் வீச்சு 'அருவா வீச்சு' மாதிரி. வீசினால் வெட்டிச் சாய்க்கத்தான். 'சுட்டசட்டி சட்டுவம் கறிச்சுவை அறியுமோ' என்று சும்மாவா சொன்னான்!

இவர் வீச்சுக்கு இரையான விஷயங்களைப் பார்ப்போம்.

1. 'கலாச்சாரம் - பண்பாடு இரண்டும் ஒரு பொருள் குறித்த சொற்கள் என்கிறார். பிரபலங்களிடமிருந்து கற்றுக்கொள்ள இது மாதிரியான விஷயங்கள் இருக்கத்தான் செய்யும். கற்றுக் கொள்கிறேன். அவரே ஒரு அகராதி. அவர் சொன்ன பிறகு ஐயம் வரக்கூடாது. ஆனாலும் வருகிறது. பண்பாட்டுக்கும் கலாச்சாரத்துக்கும் வேறுபாடு உண்டு என்பது என் புரிதல். 'பொறிக்கும் புலனுக்குமுள்ள வேறுபாடு; உளப்பாட்டுக்கும் வெளிப்பாட்டுக்கும் உள்ள வேறுபாடு. ஒன்றிலிருந்து இன்னொன்று எனும் அளவில் அவை உறவுள்ளவைதான் எனினும், இருட்டுப் பாதையில் அச்சம் மிகுந்தவன் சத்தம் போட்டு நடப்பதும் மனத்திட்பம் உள்ளவன் மௌனமாய்ப் போவதும் போல அவற்றுக்குள் முரண் முக வெளிப்பாடும் உண்டு— அதிலும் அடையாள மறுப்புக்காட்படும் மக்களிடம்' என்பது என் நம்பிக்கை. 'பண்பாடு தமிழ்ச் சொல்; கலாச்சாரம் வட சொல்; இரண்டுக்கும் ஆங்கிலத்தில் ஒரே சொல்தான்' என்று எளிய சமன்பாட்டில் மொழி மரபுப் பொருள் விரிவைச் சுருக்கிவிடல் பிழைப்புவாதிக்கு உகந்ததாய் இருக்கலாம். இலக்கியவாதிக்கு சரியாகுமா? என்று என்னுள் ஒரு நெருடல். விவரமானவர்கள் மேலும் விளக்கினால் தெளிவு பெறுகிறேன்; திருத்திக் கொள்கிறேன். இந்தத் தெளிவின்மைதான் என் மொழி வாழ்வின் சகல துக்கங்களுக்கும் தோல்விகளுக்கும் காரணம் என அக்கினி புத்திரனைத் தவிர வேறு யாரால் அறியக் கூடும்! அது ஞானம். ஞானியின் 'குருவை மிஞ்சிய' சீடரல்லவா? கேட்கவா வேண்டும்!

2. நான் 'விதையிலிருந்து தோன்றிய மரமல்ல; கொம்பிலிருந்து முளைத்த மரம்' என்கிறார். இவ்வரியைக்கூட சாமானியர்களானால் 'விதையிலிருந்து முளைத்த மரமல்ல; கொம்பிலிருந்து தோன்றிய மரம்' என்றுதான் சொல்லியிருப்பார்கள். அக்கினிபுத்திரன் சாமானியரா என்ன! இந்தக் கடிதத்தின் தொடக்கத்தில் என்னவோ 'திருப்புமுனைத் தேர்வு' என்கிறார். அவர் சொல்ல

படிப்பகம்

www.padippakam.com



வந்தது திருப்புத்தேர்வு அல்லது மீள்பார்வைத் தேர்வு (Revision Test) என்று நினைக்கிறேன்.

அவர் ஒரு தமிழ் வித்தகர். அவருக்குத் தெரியாத பொருளா, தெளிவா! போகட்டும். அவர் துவரையை நட்டால் அவரையாய் முளைக்கும் சுத்த சுயம்புவாக இருக்கட்டும். நான் நட்டு வைத்த போத்தில் தளிர்த்துக் கிளைத்த மரமாக இருந்துவிட்டுப் போகிறேன். இப்படி இருப்பதில் இன்னொரு சிறப்பு: ஒட்டு மரமாய் வளரலாம்; உயர்ந்தபட்ச சுவைாய்க் கனியலாம். பாவம் அக்கினி புத்திரன். ஏமாந்து போவார் என்று நினைக்கத்தான் நெஞ்சு விம்மி வெடிக்கிறது.

3. நான் கண்ணதாசன் தாக்கத்தில் வந்த "தனிப்பெரும்" மனிதர் என்கிறார். வயசான காலத்தில் கழுத்து சுளுக்கிக் கொள்ளக் கூடும் என்றாலும், அவரின் "தனிப்பெரும்" அடைமொழிக்குத் தரையைத் தொடும்படி தலையை வணக்க வேண்டியது தான். மேற்கோள் இட்டுக் துப்புவது சிற்றிதழ் இலக்கிய மரபென்றாலும் நான் புகழ்ச்சியாகவே எடுத்துக்கொள்கிறேனே. அடுத்து 'கண்ணதாசன் தாக்கத்தில் வந்தவர்' என்கிறாரே, அதுதான் உதைக்கிறது. இதழியல் வடிவமைப்பில் 'கண்ணதாசன்' இதழ் வரலாறு படைத்தது. அந்த வரலாற்றைப் படைத்த அமுதோனும் இராம. கண்ணப்பனும் எனக்குத் தெரிந்தவர்களாய் இருந்தார்கள். அப்போது என்னிடம் கொஞ்சம் பணமும் இருந்தது. இதழ் நடத்த என் பெயரிலேயே பதிவுரிமையும் கிடைத்தது. பன்னிரண்டு இதழ்கள் வடிவமைப்பில் 'கண்ணதாசன்' போலவே குறைந்த பக்கங்களில் கொண்டுவந்தேன். அடுத்து பாபர் மசூதி இடிப்பு நிகழ்ந்ததும் அந்த அழகு மயக்கத்திலிருந்து ஓட்டை உடைத்துக் கொண்டு வெளிவரும் கோழிக்குஞ்சு மாதிரி மெல்ல மெல்ல வெளி வந்து விட்டேன். கண்ணதாசன் சினிமாப் பாடல்களால் எல்லோரும் பாதிக்கப்பட்டது போல் நானும் பாதிக்கப்பட்டதுண்டு. ஆனால் இலக்கிய–சமூக தளத்தில் அவர் என்னை பாதித்ததில்லை என் ஏழாம் வகுப்பில் "ஐயகோ சாகின்றாள் அவளைக் காப்பீர்" என்னும் பாரதிதாசனின் ஒற்றை வரியை எழுதி வைத்துக்கொண்டு எண்சீர் விருத்தம் எழுதக் கற்றேன். அதற்கு ஓராண்டுக்கு முன்பாக "சோற்றுக்கில்லாதவன் சாதிக்கிளைத்தவன், வேற்றுமை நீதியும் இதுதானா?" என்று தொடங்கும் ஒரு பாடலை எழுதி காமராசரும் கக்கனும் கலந்து கொண்ட ஒரு கூட்டத்தில் மேடையேறிப் பாடினேன். கிராமத்து வேளாண் கூலிகளோடு தலைமறைவு இயக்கம் கொண்டிருந்த உறவின் தாக்கத்தால் விளைந்த பாடல் அது. பின்னர் என் இன்டர்மீடியட் படிப்பு முடிந்த கையோடு என் ஊரில் சங்கம் வைத்து இயங்கிக்கொண்டிருந்த 'அரிசனங்க

படிப்பகம்

www.padippakam.com



ளுக்கும்' (அப்போது அதுதான் கௌரவமான பெயராக வலம் வந்தது) சாதி இந்துக்களுக்கும் இடையே வளர்ந்த பிரச்சினை பற்றி அன்றைய கலெக்டர் ஆர். எஸ். மலையப்பனுக்குக் கவிதையில் விண்ணப்பம் எழுத, அவர் காணாததைக் கண்டதுபோல் என் கவிதையைச் சிலாகித்து மூன்றாம் நாளே என் ஊருக்கு வந்து பிரச்சினையைத் தீர்த்துச் செல்ல, அடுத்த இரண்டு மாதத்தில் எங்கள் வீடு கொளுத்தப்பட்டது. (அதே கலெக்டரிடம் ஒரு பரிந்துரை கடிதம் பெற்றுக் கொண்டு பட்டப்படிப்பில் சேர) அப்போது சென்னை வந்தவன்தான். (சொல்லத் தொடங்கினால் எனக்கும் ஒரு அசலான வரலாறு அமையும் போல் தெரிகிறது. ஆனால் இந்த பீற்றல் வேலையில் பொருந்திவிடாமல் என்னளவில் இராமலிங்கர் சொன்ன 'தனித்திரு, விழித்திரு, பசித்திரு'வை என் போக்கில் அர்த்தப்படுத்திக் கொண்டு இருக்கிறேன்.)

எழுத்தில் என்னைப் பாதித்தவர்கள் சரத்சந்திரர், இவான் துர்கனேவ், ('அன்று நான் அற்பமாய் எண்ணினேன்; இன்றதை ஆராதனை செய்கின்றேன். ஆராதனை செய்த அற்பத்தை அற்பமென்றறிந்தின்(று) ஒதுக்குகின்றேன்' என்னும் என் கவிதை வரிகள் துர்கனேவ் எனக்களித்த பரிசு), புஷ்கின் (ஆனந்தவிகடனின் எனக்குப் பிடித்த புத்தகம் பகுதியில் அறுபதுகளில் புஷ்கினின் 'இவ்ஜினி ஒனிஜின்' காவியம் பற்றி எழுதி அது பெரிதாய்ப் புகழப்பட்ட காலம் உண்டு), பெர்னாட்ஷா ஆகியோர். நான் இதுவரை கண்ணதாசன் பற்றி ஒரு வரி எழுதியதில்லை. கண்ணதாசன் மாதிரியும் எழுதியதில்லை. எனக்குள்ள பலம் (பலவீனமும்கூட) என் மொழியும் அதன் தொனியுந்தான். ஆனாலும் அக்னிபுத்திரன் போன்ற ஆய்வுக் கொழுந்துகள் சிலர் 'நான் கண்ணதாசன் தாக்கத்தில் வந்தவன்' என்று கையடித்துச் சொல்கின்றனரே எப்படி? இவர்கள் ஆய்வுக்கும் ஆடு மேய்க்கிறவன் தான் பார்த்த அயலானைப் பற்றி அடையாளம் சொல்வதற்கும் அடிப்படையில் என்ன வேறுபாடு?

4. அப்புறம் அவர் எனக்கு ஏற்படுத்திக் கொடுத்த 'வாய்ப்பு' என்பது. இது ஏதோ இதழ் நலம் கருதிப் பெருந்தொகைக்கான அறக்கட்டளை நிறுவிக் கொடுக்க இவர் தன் பரிவாரங்களோடு களமிறங்கிய கதை என்று எண்ணிவிடாதீர்கள். 'கவிதாசரணுக்கு' ஆசிரியர் குழு போடுவது பற்றிய யோசனைதான் அது. இதழுக்கான என் உழைப்பு, இழப்பு, பொறுப்பு ஆகியவற்றில் ஆசிரியர் குழு என்ன பங்காற்றும் என்பதை அவர் ஒரு பொருட்டாகவே எடுத்துக்கொள்ளவில்லை என்றாலும், நான் அதை நிராகரிக்கவோ அவமதிக்கவோ இல்லை. ஜெயந்தன் சாட்சி. ஆனால் இப்போ

படிப்பகம்

www.padippakam.com



தென்றால், "என்ன நண்பரே, என் இதழை ஒழித்துக் கட்டுவதில் உங்களுக்கென்ன அத்தனை ஆத்திரம்?" என்று கேட்கவே செய்வேன். ஆசிரியர் குழுவில் இவரைப் போட்டுவிட்டு நான் (அல்லது பிறர்) விரும்பி ஒரு கவிதையைப் போட்டுவிட முடியுமா? யாருக்காவது ஒரு வாழ்த்து தெரிவித்துவிட முடியுமா? குறைந்த பட்சம் வாயைத்தான் திறக்க முடியுமா? நான் இதழ் நடத்துவது என்னை, என் ஆளுமையை, என் தன்னுரிமையை, என் தன்முனைப்பையும் சேர்த்தே இவரிடம் அடகு வைத்துவிட்டு ஊமையாகித் தலையாட்டவா? பிறரை அனுசரித்துப் போவது எனக்குப் பழக்கப்பட்ட பயிற்சிதான். அது அக்கினிபுத்திரனிடம் அடங்கிப்போகக் கற்கிற விஷயமன்று. இவரை எடை போடுவதில் ஞானி ஆனானப்பட்டவராகத்தான் இருந்திருக்கிறார் என்று சொன்னால் இவருக்கு அவமதிப்பாகத் தோன்றுமோ என்னவோ. ஞானியின் இன்னொரு நடப்பியல் பரிமாணத்தை அறிய நமக்கொரு ஆறுதல்.

அக்கினிபுத்திரன் தனது கவிதைத் தொகுப்பைப் போடும் எண்ணத்தில் இந்திய தேசிய விலங்கான 'புலி'யின் படம் போட்ட அட்டையை அச்சடித்துவிட்டார். திடீரென்று ஏனோ புத்தகம் போடுவதை நிறுத்திவிட்டார். அதே நேரத்தில் விடுதலைப் புலிகள் இயக்கம் இந்தியாவில் தடை செய்யப்பட்டது ஒரு தற்செயல் நிகழ்ச்சியாகத்தான் இருக்கக்கூடும். அந்த அட்டை இப்போது என் வீட்டில்தான் தூங்குகிறது. 'ஒரு வழியாக கவிதைத் தொகுப்பைக் கொண்டுவர முயலுங்கள்' என்று நான் எழுதியதற்குப் பதில்தான் இது. சாதாரணமாக நண்பர்களைப் பற்றிக் குறைபேசுவதில் சுகப்படுகிறவர் எவ்வித முகாந்திரமோ முன்னறிவிப்போ இல்லாமல் வெறு வானத்தின் 'இடி'பாடு போலக் 'கவிதாசரண்' மேல் அறம் பாடியிருக்கிறார். (அவர் ஒரு கவிதை அனுப்பியிருந்தார்—யரோ நண்பருடையதாம். அதை வெளியிடவில்லை. தாமதம்தான். 'அது வெளியிடாதவரைக்கும் நீங்கள் அடுத்து எழுதமாட்டீர்கள் அல்லவா' என்று ஒற்றை வரிதான் எழுதியிருந்தேன். அதை சாக்காகக் கொண்டு இந்த அணுயுகத்திலும் நண்பர், ராஜராஜசோழன் காலத்து ரதகஜதுரக பாதாதிகளை நம்மேல் ஏவிவிட்டார்.)

தகரக் கூரையில் விழும் நாலைந்து தூறல்தான் என்றாலும் ஏதோ வானத்தையே பொத்துக்கொண்டு வந்திறங்கிய ஊழிப் பெரு வெள்ளம் மாதிரி இரைச்சலிடுமே— படைப்புலகத்திற்கு அக்கினி புத்திரனின் பங்கு அவ்வளவுதான் என்று யாராவது சொல்லித்தான் ஆக வேண்டும் இல்லையா?

உலகத்தில் தவிர்க்க முடியாதவர்கள் என்று யாரும் இல்லைதான். ஆனால் இந்தியச் சமூகத்தில் பார்ப்பனர்கள் இன்னமும்

படிப்பகம்

www.padippakam.com



தவிர்க்க முடியாதவர்களாய்த்தான் துருத்திக்கொண்டு நிற்கின்றனர். இந்தத் துருத்தல் இருக்கிற வரைக்கும் அவர்களைப் பற்றிய விமர்சனமும், பிறரை மீட்டுருவாக்கும் வேலைத்திட்டமும் இருந்தே தீரவேண்டும் என்பதை நம்பிச் செயல்படுகிறவன் நான். அதற்காக அசோகமித்திரனும் அவரைச் சேர்ந்தவர்களும் எழுத்தாளர்களே இல்லை என்று நகைத்து எனக்கு நானே காறியுமிழ்ந்து கொள்ளத் தயாராயில்லை. வேண்டுமானல் அக்கினிபுத்திரன் அதைச் செய்து கொள்ளட்டும். தடுக்க நான் யார்?

அசோகமித்திரனை 'ஒற்றை விளி'யில் குறித்தது இக்கடிதத்தில் மட்டுமல்ல. கவிதாசரண் இலக்கிய வட்டம் நடத்திய ஜெயந்தன் நூல்களுக்கான விமர்சனக் கூட்டத்திலும்தான். (விமர்சனம் உருப்படியாய் இல்லை என்பதால் தொகுத்துத் தருவதைத் தவிர்த்திருக்கிறோம்.) தொடர்பில்லாமல் பேசினார். பின்னர், பத்துப் பதினைந்து நாட்கள் கழித்து என்னை சந்தித்த போது, "கவிதாசரண் இலக்கிய வட்டத்தில் நான் குடித்துவிட்டு வந்து பேசினேனாம். அறிவுமதியிடம் சொல்யிருக்கிறார்கள்," என்று சொன்னார். அறிவுமதி யார் சொன்னது என்பதைக் கடைசிவரை கூற மறுத்தார். நான் இந்த உறுதியைச் சொல்ல முடியும். அக்கினி புத்திரன் நிச்சயமாகக் குடிக்கவில்லை. குடிகாரரும் இல்லை. அவருடைய குண தோஷங்களைக் குடியின் பேரில் தோள் மாற்றுவது மிக மோசமான அராஜகம்.

ஒருமுறை 'கவிதாசரண்' என்னும் பெயரைத் தான்தோன்றித்தனமாக நையாண்டி செய்து அதை தமிழ்ப்படுத்துவதாகக் கொச்சைப்படுத்தி எழுதியிருந்தார். நான் மறுமொழியாக "அக்கினிபுத்திரன், இனி உங்களைத் தீமகன் என்று அழைக்கலாமா?" என்று கேட்டிருந்தேன். 'இவன் சொல்லி நாம் என்ன கேட்பது' என்னும் வீராப்புடன் அர்த்தசாஸ்திரப்படி அதற்கு சடங்கு சாங்கியமெல்லாம் பண்ணி, 'கனல் மைந்தன்' ஆக்கிக் காப்புக்கட்டிக் கொண்டுவிட்டார். இதிலென்ன கூத்தென்றால் புதுசாய்ப் பெயர் வைத்துக்கொள்வது என்றான பின் அவருக்கொரு புதிய தமிழ்ப் பெயர் கிடைக்கவில்லை, பாருங்கள். இதுதான் 'கலியுகம்' – அல்ல கனல் யுகம்.

—ஆ-ர்.

படிப்பகம்

www.padippakam.com

# பின் நவீனத்துவமும் நானும்

—அ மார்க்ஸ்

[பின் நவீனத்துவச் சிந்தனைகளை நாங்கள் அறிமுகப் படுத்தி வருவதையொட்டி பல முனைகளிலிருந்து எங்கள் மீது தாக்குதல்கள் தொடுக்கப்படுகின்றன. எங்கள் மீது அக்கறையுள்ள சில நல்லெண்ணம் மிக்க நண்பர்களும் சில கேள்விகளை முன் வைக்கின்றனர். அவைகளைத் தொகுத்து அவற்றின் மீதான எங்கள் கருத்துகளை உங்கள் முன் வைப்பதற்கு இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்கிறேன். —அ. மா.]

**★ நீங்கள் மட்டும் பின் நவீனத்துவம் பேசாமல் இருந்திருப்பீர்களே யானால் இப்படி எல்லோராலும் தாக்கப்படுகிற நிலை உங்களுக்கு ஏற்பட்டிருக்காது...**

● எல்லோரும் எங்களைத் தாக்குகிறார்கள் என்று நீங்கள் சொல்வதை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது. நிறுவனமாய் இயங்கும் சில கட்சிகள், தொழில் ரீதியாய் பொறாமையுள்ள சில தனி நபர்கள் எங்களை நேரடியாகவும் மறைமுகமாகவும் தாக்குகிற அதே நேரத்தில் ஏராளமான இளைஞர்கள் எங்கள் கருத்துக்களை வரவேற்கிறார்கள். இவர்கள் நிறுவனமயப்பட்டு இல்லாததின் விளைவாக இவர்களது கருத்துக்கள் பெரிய அளவில் வெளித் தெரிய வில்லை. அவ்வளவுதான். இந்த ஆண்டு தொடக்கத்தில் வெளி வந்த நூற்களில் அதிகம் விற்பனையாகிறவற்றில் எங்களது நூற்கள் சிறப்பிடம் வகிக்கின்றன. குறிப்பாக என் 'பின் நவீனத்துவம் – இலக்கியம், அரசியல்'' என்னும் நூல். நூல் விற்பனையின் அடிப்படையில் மட்டும் இதைச் சொல்கிறேன் என நினைக்காதீர்கள். எங்களுக்கு வரக்கூடிய கடிதங்கள், தமிழக அளவில் பின் நவீனத்துவம் தொடர்பாக நடத்தப்படும் கருத்தரங்குகள், மேற் கொள்ளப்படும் விவாதங்கள் என நிறைய சொல்லலாம். ம.க.இ.க. போன்ற அமைப்புகள் எங்கள் மீது விழுந்து குதறுவதன் காரணமும்கூட இதுவேதான். அவர்களின் அமைப்புக்கு இளைஞர்களின் வரத்து குறைந்துவிட்டது. ஏற்கனவே வந்தவர்களும்கூட வழக்கம் போல மந்தைகளாக மேய்ந்துவரத் தயாராயில்லை. ஆங்காங்கு கேள்விகள் எழுப்புகின்றனர். சமீபத்தில் திருச்சியைச் சேர்ந்த சுமார் பத்துக்கும் மேற்பட்ட ம.க.இ. க. இளைஞர்கள் 'பெண்ணியம்' தொடர்பான சில கேள்விகளை அமைப்புக்குள்

படிப்பகம்

www.padippakam.com



எழுப்பியுள்ளனர். நேர்மையான விவாதத்திற்கு அமைப்பு தயாராக இல்லாத நிலையை ஒட்டி அவர்கள் அமைப்பை விட்டு வெளியேறியும் உள்ளனர். சோசலிச கட்டுமானம் குறித்து நாங்கள் கடந்த பத்தாண்டுகளில் எழுப்பியுள்ள ஆழமான விவாதங்களுக்கு எந்த அமைப்பிலிருந்தும் இதுவரை நேர்மையான பதிலேதும் வந்ததில்லை. இப்போதுகூட அவதூறு பேசுவது, இவன் என்ன கிறிஸ்தவன் நமது மரபைக் கேள்விக்குள்ளாக்குவது என்ற ரீதியில்தான் ம.க.இ.க. உள்ளிட்ட அமைப்புகளின் தாக்குதல்கள் உள்ளனவே யொழிய யாரொருவரும் எங்களது கருத்துக்களை நேர்மையாக மறுத்ததில்லை என்கிற உண்மை மீது உங்கள் கவனத்தை ஈர்க்க விரும்புகின்றேன். தமிழ்த் தேசிய அமைப்புகள் சில எங்கள் மீது காழ்ப்பைக் கக்குவதின் பின்னணியும் இதே போன்றதுதான். தமிழ்த் தேசியம் என்கிற பெயரில் பார்ப்பன – வேளாளச் சிந்தனைகளையும், பண்பாட்டையும், அரசியலையும் எங்கள் மீது சுமத்துகிறீர்களே என தலித் இளைஞர்கள் கேட்கத் தொடங்கியதை யொட்டி அவர்களுக்கும் எங்கள் மீது ஆத்திரம் வந்திருக்கிறது. இத்தகைய அமைப்புகளின் அதிகாரிகளும் அவர்கள் வசமுள்ள பத்திரிகைகளும் எங்களைத் தாக்கியபோதும்கூட பெரும்பாலான இளைஞர்களின் ஆதரவு எங்களுக்கிருக்கிறது என்பதுதான் உண்மை.

பின் நவீனத்துவம் பேசுவதால்தான் எங்கள் மீது தாக்குதல்கள் குவிகின்றன என்பதையும் நான் மறுக்கிறேன். நாங்கள் பின் நவீனத்துவம் மட்டுமே பேசிக் கொண்டிருக்கவில்லை. நாங்கள் பேசுகிற விஷயங்களில் சுமார் பத்து சத அளவே பின் நவீனத்துவம் குறித்தவையாக இருக்கலாம். மற்றபடி நாங்கள் மிகப் பெரிய அளவில் தலித்தியம் பேசுகிறோம். தலித் அரசியல் குறித்து முதன்முதலில் ஒரு ஆவணம் வெளியிட்டது நாங்கள்தான். தலித் அரசியல் பண்பாடு ஆகியன குறித்து தமிழில் மிக முக்கியமான பல விவாதங்களுக்கு நாங்களே அடித்தளமாக இருந்திருக்கிறோம். நிறப்பிரிகையின் சார்பாக தலித் இலக்கிய மலரை வெளியிட்டோம். வரலாறெழுதியலில் அடித்தள மக்கள் ஆய்வு குறித்து விரிவான விவாதங்களுக்கு நாங்கள் காரணமாகியிருக்கிறோம். பெண்ணியம் குறித்தும் புலம்பெயர்ந்த தமிழர்கள் பற்றியும் நாங்கள் பேசுகிறோம். இப்படி நிறைய சொல்லலாம். எங்கள் மீதான எதிர்ப்பு என்பது இப்படி எங்களது ஒட்டு மொத்தமான செயல்பாடுகள் மீதான எதிர்ப்பு என்றுதான் பார்க்க வேண்டுமே யொழிய, பின் நவீனத்துவம் பேசியதால்தான் இந்த எதிர்ப்பு என்பது எளிமைப் படுத்திப் புரிந்து கொள்வதாகும். ஒன்றை நான் இங்கு அடிக் கோடிட்டுச் சொல்ல விரும்புகிறேன். பின் நவீனத்துவத்தை எதிர்ப்

படிப்பகம்

www.padippakam.com



பவர்கள் எல்லோரும் நேரடியாகவோ மறைமுகமாகவோ தலித்தியத்தை எதிர்ப்பவர்களாகவே உள்ளனர். பின் நவீனத்துவத்தை எதிர்த்து 'தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி' ஒரு சிறு நூல் வெளியிட்டுள்ளதே, அந்நூல் வெளியிடப்பட்ட அதே நிகழ்ச்சியில் இன்னொரு நூலும் வெளியிடப்பட்டது. அது தலித் அரசியலை மறுத்து அக்கட்சியின் மூத்த அதிகாரிகளில் ஒருவரான ராஜேந்திர சோழன் எழுதிய நூல். இன்று தலித் அரசியலையும் பண்பாட்டையும் மறுப்பதில் முனைப்புடன் நிற்பவர்கள் அவர்கள்தான் என்பதை நான் விளக்க வேண்டியதில்லை. ஒன்றை நீங்கள் கவனிக்க வேண்டும். தலித்துகள் இன்று தங்கள் தனித்துவத்தை வற்புறுத்துகின்றனர். தாங்கள் தனியாகத் திரள்வதை வலியுறுத்துகின்றனர். பெருங்கதையாடலாய் உருவெடுத்துள்ள மார்க்சியம் அல்லது தமிழ்த் தேசியம் இதனை ஏற்றுக் கொள்ளாது. பெருங்கதையாடல்களை மறுக்கும் பின் நவீனத்துவம் மட்டுமே தலித்துகளின் தனித்துவத்தைப் பரிவுடன் ஏற்றுக் கொள்ளும். எனவேதான் பின் நவீனத்துவன் மீதும் எங்கள் மீதும் இவர்களின் ஆத்திரம்.

★ த.தே.பொ.க. மற்றும் ம.க.இ.க. மட்டுமா உங்களை எதிர்க்கின்றனர்? சில பொதுவானவர்களும் கூடத்தான் எதிர்க்கின்றனர்.

● யார் அந்தப் பொதுவானவர்கள்? பெயர்களைச் சொல்லுங்கள் அவர்கள் பொதுவானவர்களா என்று பார்த்துவிடலாம். நானே சில பெயர்களைச் சொல்லுகிறேன். நீங்கள் மற்ற பெயர்களை இத்துடன் இணைத்துப் பொருத்திப் பார்த்துக் கொள்ளுங்கள். அவ்வப்போது பின் நவீனத்துவத்தைக் கிண்டலடிப்பவர்களில் ஒருவர் 'பிரபல' எழுத்தாளர் சுஜாதா. அப்புறம் இந்த இதழ் கணையாழியில் பின் நவீனத்துவத்தை எதிர்த்து ஒரு காரசார அசட்டுக் கட்டுரை வந்துள்ளதாய்ச் சொன்னார்கள். நான் இன்னும் பார்க்கவில்லை. இவர்களும் இவர்களைப் போன்று பின் நவீனத்துவத்தைக் கடுமையாக எதிர்ப்பவர்களும் பார்ப்பனர்களாகவும் பார்ப்பனக் கருத்தியலை உயர்த்திப் பிடிப்பவர்களாகவும் இருப்பது கண்கூடு. ம.க.இ.க., த.தே.பொ.க. போன்ற அமைப்புகளிலும் கூட இவர்கள்தான் பின் நவீனத்துவத்தை எதிர்ப்பதில் கூடுதல் ஆர்வமுடையவர்களாக இருக்கின்றனர் என்பதையும் நீங்கள் கவனிக்க வேண்டும்.

★ பின் நவீனத்துவத்தை எதிர்ப்பவர்கள் எல்லோரும் பார்ப்பனர்கள் என்றா சொல்கிறீர்கள்?

● அப்படி நான் சொல்லவில்லை. பார்ப்பனர்கள் இதில் முன்னணியில் இருப்பதன் பொருத்தப்பாட்டின் மீது உங்கள் கவனத்தை

படிப்பகம்

www.padippakam.com



ஈர்த்தேன். பொதுவாக அதிகாரத்திலுள்ள பலரும் பார்ப்பன மனப் பாங்கு உடையவர்களாக மாறி விடுகின்றனர். பார்ப்பன மனப் பாங்கு என்றால் என்ன என்பது குறித்து நாம் சிறிது கவனமாய் இருக்க வேண்டும். சுருக்கமாய்ச் சொன்னால் ஒதுங்குவதும் ஒதுக்குவதும் பார்ப்பன மனபாங்கு எனலாம். எல்லாவற்றையும் தரம் 'பிரித்து' ஒதுக்கி அவற்றுக்கிடையே கலப்பு இல்லாமல் பார்த்துக் கொள்கிறது பார்ப்பனீயம். தூய்மை, தரம் என்பது அதன் தாரக மந்திரம். ஏற்றத் தாழ்வுகளுடன் கூடிய ஒருமை என்பதை அது வலியுறுத்தும். பன்மைத்துவத்தை அதனால் சகித்துக்கொள்ள முடியாது. ஏக பாரதம், அகில இந்தியம், ஒற்றைத் தமிழ்க் கலாச்சாரம் என்றெல்லாம் அது முழங்கும். பன்மைத்துவத்தைப் போலவே பன்மைத் தன்மைக்கு அடிப்படையாக உள்ள பல்வேறு தனித்துவங்களை அதனால் எள்ளளவும் ஏற்றுக்கொள்ள முடியாது. தமது தனித்துவங்களை வலியுறுத்துபவர்கள் தமக்கு வெளியே யுள்ள ஏதொன்றின் வரையறை செய்யும் அதிகாரத்தையும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். ஆனால் பார்ப்பனீயமோ எல்லாவற்றிற்கும் அளவுகோலாக, படித்தரமாக, ஆதாரமாக (Authority & Origin) வேதத்தை முன் வைக்கும். வேதம், இந்திய மரபு, இந்து மதம் என அதற்கு பல பெயர்களைச் சொல்லும். வேதத்தை 'தாட்பூட்' என வாய்ச்சவடால் அடித்து எதிர்க்கும் பலர், வேதத்திற்குப் பதிலாக ஏதொன்றையாவது அதனிடத்தில் வைத்து அதனை 'அதாரிடி'யாக, எல்லாவற்றையும் அளக்கும் படித்தரமாக வைத்து வணங்குவதையும் நாம் பார்ப்பன மனப்பாங்கு என்கிறோம். இத்தகைய பெருங்கதையாடல்களை, ஆதாரங்களின் வன்முறைக்குச் சாவுமணி அடிக்கிறது பின் நவீனத்துவம். இதனை எப்படி பார்ப்பன மனப்பாங்கால் சகித்துக் கொள்ள முடியும்? சுருக்கமாகச் சொல்வதானால் பின் நவீனத்துவம் என்பது பார்ப்பன மனப் பாங்கால் – மேலைச் சூழலில் பாசிச மனப்பாங்கால் – சகித்துக் கொள்ள முடியாத ஒன்று. பார்ப்பன மனப்பாங்கு இங்கே பின் நவீனத்துவத்தைக் கரித்துக் கொட்டுகிறது.

★ **பின் நவீனத்துவம் ஏகாதிபத்தியச் சரக்கு என்றல்லவா சொல்லப் படுகிறது?**

● இது இன்னும் பெரிய வேடிக்கை. அய்ரோப்பாவில் தோன்றிய அனைத்தும் ஏகாதிபத்திய சரக்குதான் என்றால் எதுவும் அதிலிருந்து தப்ப முடியாது, மார்க்சியம், தேசீயம் உட்பட! பின் நவீனத்துவச் சிந்தனையாளர்கள் அய்ரோப்பாவில் பிறந்தவர்கள் என்பதால் மட்டுமே அது ஏகாதிபத்தியத்தின் ஒட்டு மொத்தமான தத்துவம் என்று சொல்லிவிட இயலாது. அங்கும் இது ஒரு எதிர்த்

படிப்பகம்

www.padippakam.com



தத்துவமாக, கலகக் குரலாக ஒலித்து வருகிறது. சார்த்தருக்குக் கூட நோபல் பரிசு வழங்கப்பட்டது. ஆனால் பின் நவீனத்துவச் சிந்தனையாளர்கள் எவருக்கும் இதுவரை நோபல் பரிசோ, அரசாங்க விருதுகளோ வழங்கப்பட்டதில்லை. அதிகபட்சமாக அவர்கள் அனுபவித்து வரும் சொகுசு பல்கலைக் கழகப் பேராசிரியர் பதவிகள் மட்டுமே! பின் நவீனத்துவச் சிந்னையாளர்கள் பலரும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு, மூன்றாம் உலக மக்களுக்கு, அகதிகளுக்கு, கருப்பர்களுக்கு, பெண்களுக்கு ஆதரவாகக் குரல் எழுப்புபவர்கள். ஃபூக்கோ, ல்யோதார்த் உள்ளிட்ட பலரும் இடதுசாரிப் பாரம்பரியமுடையவர்கள். இன்றைய உலகின் மிகப்பெரிய சிந்தனையாளராகக் கருதப்படும் தெரிதா உள்ளிட்ட யாரும் மார்க்சியத்தின் பங்களிப்பை மறுத்தவர்களில்லை. ''மற்ற''தன் இருப்பைக் கூவிப் பறைசாற்றுவதென்பதே இவர்களின் பரந்த மனித நேயச் சிந்தனைக்கு ஓர் எடுத்துக்காட்டு. மற்றதை ஏற்றுக் கொள்ளாத, தனக்குக் கீழானதாகவே உள்வாங்கிப் பழக்கப்பட்ட பார்ப்பனிய மனப்பாங்கால் இதனை எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்?

இன்னொரு வேடிக்கை பாருங்கள். இன்று பின் நவீனத்துவத்தை வெளிநாட்டு சரக்கு என்கிற பலரும் ஒரு காலத்தில் பிராய்டிசம், எக்சிஸ்டென்சியலிசம், சர்ரியலிசம்... என்றெல்லாம் புத்தகங்கள் எழுதிக் கொண்டிருந்தவர்கள்தான். அன்று இவர்களைப் பார்த்து கட்சி அதிகாரிகள் ஏகாதிபத்தியவாதிகள் என்றார்கள். இன்று அதையெல்லாம் மறந்துவிட்டு இவர்கள் நம்மைப் பார்த்து அதே குற்றச்சாட்டை சொல்லுகிறார்கள். இதில் இன்னும் பெரிய வேடிக்கை என்னவென்றால் ஏகாதிபத்திய நிறுவனங்களுடன் தொடர்புகள் வைத்துக்கொண்டு, பெருமளவில் நிதி உதவி வாங்கிக் கொண்டு, தங்கள் நிதி வரத்துகள் பற்றிய எந்தச் செய்திகளையும் வெளியே தெரிவிக்காமல் 'இயக்கம்' நடத்திக் கொண்டிருக்கிற சில அறிவு ஜீவிகளும்கூட இத்தகைய குற்றச்சாட்டுகளை எங்கள் மீது அள்ளி வீசுவது என்பதுதான்!

**★ பின் நவீனத்துவமும் மார்க்சியமும் ஒன்று என்கிறீர்களா?**

அய்யோ, அப்படி எல்லாம் நான் சொல்லவில்லை. நவீனத்துவத்தின் உலக அமைப்பாகத் (World System of Modernism) தோன்றிய முதலாளியத்தை விமர்சித்து எழுந்த மார்க்சியம் தன்னை நவீனத்துவச் சட்டகங்களுக்குள்ளேயே முடக்கிக் கொண்டது. தொழிற்சாலை என்பதைத் தொழிலாளிகளைச் சுரண்டுகிற நிறுவனமாக மட்டுமே கண்டது. பள்ளிக்கூடம், சிறைச்சாலை, மருத்துவமனை, காவல் நிலையம் என்கிற நவீனத்துவ நிறுவனங்களுள் ஒன்றாக இருந்து அதன் எல்லைக்குள் அகப்பட்டவர்களை ஒழுங்கு

படிப்பகம்

www.padippakam.com



செய்யும் நிறுவனமாக(Normalising Institution)அது எவ்வாறு செயல் படுகிறது என்பதைக் காண மறந்தது. மார்க்சுக்கு முந்திய பொருளியல் "மதிப்பு விதியை" முதன்மைப்படுத்தியதெனில் மார்க்சியப் பொருளியல் "மதிப்பின் பண்ட விதியை" முதன்மைப்படுத்தியது. அதாவது மதிப்பின் பண்டத் தன்மையை வலியுறுத்தியதோடு நின்றது. மதிப்பு விதியின் தன்னிச்சைத் தன்மையை அல்லது "மதிப்பின் அமைப்பியல் விதி"யை (Structural law of Value) காணத் தவறியது. உற்பத்தியை மையமாக வைத்து மார்க்சியம் முதலாளியத்தை விமர்சித்தது. ஆனால் முதலாளியம் என்பது உற்பத்தியை மையமாக வைத்துச் செயல்படுவதைக் காட்டிலும் மறு உற்பத்தியே முதலாளியத்தின் அடையாளமாக இருக்கிறது என்கிறது பின் நவீனத்துவம். உற்பத்தியின் குறிக்கோள் / நோக்கம் அழிக்கப்பட்டு உற்பத்திக்காகவே உற்பத்தி செய்யும் ஒரு காலகட்டமாக முதலாளியம் உள்ளதை மார்க்சியம் கண்டு கொள்ளவில்லை. இது "போலச்" செய்தலின் (Simulation) காலம். "குறி" என்பதிலிருந்து "சமிக்ஞை" (Code) என்கிற நிலையை எட்டியாகிவிட்டது. "குறி" என்பதில் குறிக்கும் அது சுட்டும் பொருளுக்கும்(Reference) இடையில் ஒரு தீர்மானகரமான உறவு செயல்படுகிறது. ஆனால் "சமிக்ஞை" என்னும் போது ஒரு குறிக்கும் இன்னொரு குறிக்கும் இடையிலான தன்னிச்சையான உறவுதான் முக்கியம் பெறுகிறதேயொழிய சுட்டும் பொருள் என்பது இங்கே அழிகிறது. பயன் மதிப்பு × பரிமாற்ற மதிப்பு; உழைப்புச் சக்தி × மூலதனம்; குறிப்பான் × குறியீடு; நல்லது × கெட்டது; பயனுள்ளது × பயனற்றது; இடது×வலது, இயற்கை×கலாச்சாரம் என்கிற இயங்கியல் முரண்களெல்லாம் காலாவதியாகிப் போனதை எல்லாம் மார்க்சியம் கண்டு கொள்ளத் திராணியற்றுப் போனது என்பதை எல்லாம் பின் நவீனத்துவம் இன்று கோடிட்டுக் காட்டுகிறது.

**★ நமது சூழலில் அதாவது ஒரு மூன்றாம் உலகச் சூழலில் இதெல்லாம் எந்த அளவுக்குப் பொருத்தம்... ?**

● முதல் உலகம், மூன்றாம் உலகம், தரகு முதலாளி, தேசிய முதலாளி என்கிற முரண் எதிர்வுகளெல்லாம் தகர்ந்து போய் உலக முதலாளிய அமைப்பு கொடிகட்டிப் பறக்கும் காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் நாம். உலக வர்த்தக அமைப்பிற்குள் இன்று நாமெல்லாம் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளோம். இந்தியாவிலுள்ள நாற்பது மில்லியன் வீடுகளுக்குள் இன்று எம். டி. வி. நுழைந்துள்ளது. சீனத்தில் 17 மில்லியன் வீடுகளில் எம்.டி.வி. பார்க்கிறார்களாம். பண்பாடு, தொழிற்நுட்பம், நிதி, மூலதனம், கல்விமுறை... என எல்லா அம்சங்களிலும் எல்லாவற்றையும் ஊடுருவ விட்டுவிட்டு

படிப்பகம்

www.padippakam.com



இவற்றை எல்லாம் எதிர்கொள்ளக் கூடிய சிந்தனை முறையை மட்டும் கைக்கொள்ள மாட்டோம் என ஒதுங்கிக் கொண்டால் யாருக்கு இழப்பு? ஒன்றை நான் இங்கே மீண்டும் ஒருமுறை வலியுறுத்த விரும்புகிறேன். நமக்கு வளமான தத்துவ மரபு மத்திய காலத்திற்குப் பிறகு கிடையாது. நல்லதோ கெட்டதோ, சரியோ தவறோ, நாம் நவீனத்துவத்திற்கும் பின் நவீனத்துவத்திற்கும் ஆட்படுத்தப்பட்டுவிட்டோம். நவீன தத்துவங்களை மட்டும் புறக்கணித்தால் எப்படி? பெரியார் வேண்டிக் கொண்டது போல உங்களிடம் வேண்டிக் கொள்கிறேன்: தயவுசெய்து சிந்தியுங்கள்; திறந்த மனத்தோடு சிந்தியுங்கள்.

**★ என்ன இருந்தாலும் எல்லா விதமான அமைப்பாக்கத்தையும் நீங்கள் எதிர்க்கிறீர்களே?**

● இது ஒரு அபத்தமான குற்றச்சாட்டு. இதற்கு எத்தனையோ முறை பதில் சொல்லியாகிவிட்டது. இருந்த போதிலும் மீண்டும் சொல்கின்றேன். நாங்கள் எந்த அமைப்பாக்க முயற்சிக்கும் எதிரிகள் அல்ல. தலித்துகள், பெண்கள், மனித உரிமை அமைப்புகள் முதலான அமைப்பாக்க முயற்சிகளோடு நாங்கள் எங்களை ஈடுபடுத்திக் கொண்டிருப்பது நீங்கள் அறியாததல்ல. ஈழத் தமிழர் பிரச்சினையிலோ புலம் பெயர்தவர்களின் பிரச்சினையிலோ நாங்கள் கூட்டமைப்புகளிலும் பங்கு பெறுகிறோம். நாங்கள் முன்பு நக்ஸல்பாரி அமைப்புகளிலிருந்து செயல்பட்டோம். இப்போது அவற்றிலிருந்து விலகிநிற்கிறோம் என்பதற்காக, நாங்கள் அமைப்பாக்கத்திற்கு எதிரானவர்கள் என்றால் இங்கே தமிழ்ச் சூழலில் யாரொருவரும் தேறமாட்டார்கள் என்பதை நீங்கள் யோசிக்க வேண்டும். இங்கே எங்களைத் திட்டித் தீர்க்கிற எல்லோரும் ஏதோ ஒரு அமைப்பை உடைத்து வெளியே வந்தவர்கள்தாம். கடந்த பத்தாண்டுகளில் இங்கே அமைப்புகளின் எண்ணிக்கை பெருகித்தான் இருக்கிறதேயொழிய குறையவில்லை. இருந்தபோதிலும் உங்களை மட்டும் ஏன் அமைப்பாக்கத்தின் எதிரி என்கிறார்கள் என நீங்கள் கேட்கலாம். ஏனெனில் நாங்கள் மட்டுமே அமைப்பாக்கத்தில் பொதிந்து கிடக்கும் வன்முறை பற்றிப் பேசுகிறோம். வன்முறையும் அதிகாரமுமற்ற அமைப்பாக்கம் பற்றிச் சிந்திக்க வேண்டும் என்கிறோம்.

**★ அமைப்பாக்கத்தின் வன்முறை என்று எதைச் சொல்கிறீர்கள்?**

● ரொம்பவும் ஆழ்மான சிந்தனைப் பின்னணியில் தெரிதா இது குறித்துப் பேசுகிறார். சுருக்கிச் சொல்லுதலில் மிகை எளிமைப்படுத்தலுக்கு இட்டுச் சென்றுவிடும் ஆபத்து தவிர்க்க இயலாது. அறிவுச் சோம்பேறித்தனம் மிகுந்த தமிழ்ச் சூழலில் நாம் அப்ப

படிப்பகம்

www.padippakam.com



டிச் சொல்லியும் ஆக வேண்டியிருக்கிறது. தெரிதா முன் வைக்கும் முன்னிற்றல் அல்லது நிகழின் இயங்காவியல், பிரதி, தடம் (Trace), நிறுவப்பட்ட தடம் (Instituted Trace), Aporia, Arch - writing முதலான கருத்தாக்கங்களை விளங்கிக் கொள்வதற்கு நம் தோழர் கள் முயற்சிக்க வேண்டும். மிகக் கொடூரமான வன்முறை மக்கள் மீது சகல தரப்புகளிலிருந்தும் பிரயோகிக்கப் படுவதை நாள் தோறும் நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இத்தகைய வன் முறைகளிலிருந்து நாம் விடுதலை பெறுவதுதான் நோக்கமெனில் சிரமம் பாராது இவற்றைப் புரிந்துகொள்ள நாம் முயற்சித்துத்தான் ஆக வேண்டும். எதையும் படிக்க மாட்டேன், அது புரியவில்லை, இது ஏகாதிபத்திய தத்துவம் என்று நொள்ளை சொல்வது மட்டும் தான் என் வேலை என இருந்தால் நம் தலையில் நாமே மண்ணை வாரிப் போட்டுக் கொள்ள வேண்டியதுதான்.

மொழியின், குறி ( Sign )யின் தன்னிச்சைத் தன்மையை சசூர் உலகத்துக்கு அறிவித்தார். சொல்லுக்கும் (Signifier) அது சுட்டும் பொருளுக்குமான ( Signified ) உறவு இயற்கையான உற வல்ல, அது நிறுவப்பட்ட உறவு (Instituted). நிறுவனம் (Institution) என்கிற கருத்தாக்கத்திலிருந்து நாம் நேரடியாகப் புரிந்து கொள்வது என்னவெனில் எந்த நிறுவனமும் நிறுவப்பட்டதுதானே யொழிய அது இயற்கையானது அல்ல என்பதுதான்.

சசூரை தெரிதா விமர்சிக்கும் புள்ளி முக்கியமானது. தனது மொழியியல் கோட்பாட்டை ஒரு 'விஞ்ஞானமாக' நிறுவும் நோக் கில் தனது மொழியியல் 'விஞ்ஞானத்தின்' ஆய்வுப் பொருளாக 'சொல்' (word)-லை எடுத்துக் கொள்கிறார். 'சொல்'லை ஆய் வுப் பொருளாக எடுத்துக் கொள்வதை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால் அந்த ஆய்வுப் பொருளை இயற்கையான ஒன் றாக கருதும்போதுதான் பிரச்சினை ஏற்படுகிறது. நிறுவப்பட்ட ஒன்றை இயற்கை என நம்புவதில்தான் நிறுவனங்களின் வன் முறை அடங்கியுள்ளது.

இதனை இன்னும் கொஞ்சம் விளக்குவோம். மேலைச் சிந்த னைப் பாரம்பரியத்தில் எழுத்தைக் காட்டிலும் பேச்சுக்கு முதன்மை அளிக்கும் பண்பு பிளேட்டோ தொடங்கி சசூர் வரை ஏன் இன்று வரை நம் மத்தியில் நிலவி வருவதை தெரிதா கட்டுடைத் துள்ள பாங்கை நாம் பலமுறை சுட்டிக்காட்டியுள்ளோம். எழுத்து இரண்டாம் பட்சமானது, பேச்சு முதன்மையானது. ஏனெனில் பேச்சொலி என்பது நம் முன் நிகழ்கிறது... இவ்வாறு சொல்லிக் கொண்டே போகும்போது எழுத்து கட்டமைக்கப்பட்டது. பேச்சு இயற்கையானது என்கிற பொருள் வந்துவிடுகிறதல்லவா! சசூர் எதை கட்டமைக்கப்பட்டதுதான், இயற்கையானது அல்ல எனச்

படிப்பகம்

www.padippakam.com



சொல்ல வந்தாரோ அதையே அதாவது 'குறி'யையே (பேச்சொலியும் அது சுட்டும் பொருளும் இணைந்த) கட்டமைக்கப்பட்டது அல்ல இயற்கையானதுதான் எனச் சொல்ல நேர்ந்த அபத்தத்தை தெரிதா அட்டகாசமாய்க் கட்டுடைக்கிறார்.

நிறுவனங்களின் வன்முறைக்கும் இதற்கும் என்ன தொடர்பு என்கிறீர்களா? சொல்கிறேன். சசூர் குறித்த தெரிதாவின் கட்டுடைப்பில் மூன்று அம்சங்கள் கவனிக்கத் தக்கன.

1. நிறுவனங்கள் என்பவை நிறுவப்பட்டவை; கட்டமைக்கப் பட்டவை, இயற்கையானவை அல்ல. இது குறி, சாதி, தேசியம், மூலதனம், வர்க்கம், கட்சி... எல்லாவற்றிற்கும் பொருந்தும்.
2. பேச்சொலி (Phoneme), நிகழ் / முன்நிற்றல் (Presence) என்பதற்கு முன்னுரிமை அளிப்பதன் மூலம் காலம் (Time) நிகழாக உறைய வைக்கப்படுகிறது. இது காலத்தின் இயங்கு தன்மையை மறுதலிக்கிறது. காலம் என்பதே இயக்கம்தான். காலத்தின் இயக்கத்தை மறுப்பது என்பது காலத்தையே மறுப்பதுதான் (disavowal of Time). இது என்றென்றைக்குமான ( Eternal ) X தற்காலிகமான (Temporal), காலம் கடந்த (Transcedental) X அனுபவம் சார்ந்த (Empirical) என்கிற முரண்களை உருவாக்கி "என்றென்றைக்குமான", "காலம் கடந்த" கருத்தாக்கங்களை முன் வைப்பதில் முடிகிறது.
3. 'குறி' என்கிற சசூரியக் கருத்தாக்கத்தின் இன்னொரு முக்கிய அம்சம் சொல். அது சுட்டும் பொருளை முழுமையாகக் கையகப்படுத்த முடியாது என்பதுதான். அதாவது மிச்சம்(Remainder) இல்லாது எதையும் கைப்பற்றி வரையறுப்பது என்பது சாத்தியமில்லை.

மேற்கண்ட சிந்னைகளிலிருந்து நாம் இப்போது நிறுவனங்களின் வன்முறைக்கு வருவோம். எந்த நிறுவனமும் தான் நிறுவப்பட்ட ஒன்று எனப் பிரக்ஞை கொண்டிருப்பதில்லை. நிறுவப்பட்ட ஒன்று தன்னை இயற்கையானது என நம்புவதில்தான் நிறுவனங்களின் வன்முறை அமைந்துள்ளது. அகில இந்தியம், இந்துத்துவம் என்பவை எல்லாம் நிறுவப்பட்டவைகள், இயற்கையானவையல்ல என்பதை நாம் ஏற்றுக் கொள்வோம். பாரதீய ஜனதாவின் வன்முறை என்பது இந்துத்துவத்தை இயற்கையானது எனச் சொல்வதில், நம்புவதில் அடங்கியுள்ளது. 'இந்து' என்ற வரையறைக்குள் அது இசுலாமிய, கிறிஸ்தவரைத் தவிர மற்ற எல்லாரையும் மிச்சமின்றி (Remainderless grasp) உள்ளடக்குவதாக உரிமை கொண்டாடுகிறது. "இந்து" மதத்தை மறுத்துவந்த சம

படிப்பகம்

www.padippakam.com



ணம், புத்தம் தவிர இந்து மதத்தால் தீண்டத்தகாதவர்களாகக் கருதப்பட்ட தலித்களையும் அது தனது வரையறைக்குள் உள்ளடக்குவதாக உரிமை கொண்டாடியது / கொண்டாடுகிறது. ஆனால் அம்பேத்கரும் இன்றைய தலித் இயக்கத்தினரும் நாங்கள் இந்துக்களில்லை, நாங்கள் மிச்சங்கள் என்கின்றனர். மிச்சமில்லாமல் இந்து வரையறுக்கப்படும் போது அது தலித்கள் மீதான வன்முறையாக அமைந்துவிடுகிறது. மிச்சமில்லாமல் தான் உள்ளடக்குவதாக ஏதொன்றும் உரிமை கொண்டாடும் போது அது மொத்தத்துவக் கதையாடலாக மாறுகிறது. 'வர்க்கம்' என்கிற கருத்தாக்கத்திற்குள் தலித்கள், பெண்கள், இனங்கள் எல்லோரும் உள்ளடக்கம். வர்க்க விடுதலை என்பது தலித் / பெண் / இன விடுதலைகளை எல்லாம் உள்ளடக்கும் எனச் சொல்லி இடதுசாரி அமைப்புகள் மிச்சங்களின் குரல்களை அடக்குகின்றன. காலத்தை மறுத்தல் என்பது சூழல் / காலம் எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்ட எல்லாக் காலத்திற்குமான, எல்லாச் சூழலுக்குமான பெருங்கதையாடலாகத் தன்னை முன்னிலைப்படுத்திக்கொள்ள உதவுகிறது.

இந்துத்துவம், வர்க்கம் என்கிற எடுத்துக்காட்டுகளின் அடிப்படையில் இங்கே பேசியவற்றை தமிழ்த் தேசியம் என்பதில் பொருத்தும்போது நமது தமிழ்த் தேசிய நண்பர்கள் கோபிக்கிறார்கள். இது சரிதானா என்பதை நாம் யோசிக்க வேண்டும்.

**★ அப்படியானால் நீங்கள் பேசுகிற தலித்தியத்திற்கும் இது பொருந்தும்தானே?**

● நிச்சயமாக. நான் மறுக்கவில்லை. இந்தப் பிரச்சினை ஏற்கனவே பல தளங்களில் விவாதிக்கப்பட்டிருக்கிறது. நடைமுறையிலும் இது வெளிப்படத்தான் செய்கிறது. மேலைச் சூழலில் பெண்ணிய இயக்கங்கள் இப் பிரச்சினையைச் சந்தித்துள்ளன. "பெண்" என்கிற வரையறைகூட நிறுவப்பட்ட ஒன்றுதான். இதற்குள் எல்லாப் பெண்களும் சம நிலையில் உள்ளடக்கப்படுவதில்லை. வெள்ளைப் பெண்களின் பிரச்சினைகளும், கருப்புப் பெண்களின் பிரச்சினைகளும், இசுலாமியப் பெண்களின் பிரச்சினைகளும், லெஸ்பியன் பெண்களின் பிரச்சினைகளும் ஒன்றல்ல. நமது சூழலில் பார்ப்பனப் பெண்களின் பிரச்சினைகளும், தலித் பெண்களின் பிரச்சினைகளும் ஒன்றல்ல. "பெண்கள்" என்கிற கருத்தாக்கத்தில் எல்லாப் பெண்களையும் மிச்சமின்றி அடக்கிவிட முடியும். எனவே சாதி வாரி இட ஒதுக்கீடு இல்லாமல் பெண்களுக்கு 30 சத ஒதுக்கீடு கொடுத்தால் போதும் என இங்கே பாரதீய ஜனதா, இடதுகம்யூனிஸ்டு போன்றவை முழங்கவில்லையா? சாதி வாரி இட ஒதுக்கீடு இல்லாமல் பெண்களுக்கு முப்பது சதம்

படிப்பகம்

www.padippakam.com



ஒதுக்கீடு என்றால் அது தலித் மற்றும் பிற்படுத்தப்பட்ட பெண்களின் மீதான வன்முறை இல்லையா?

தலித் இயக்கங்களுக்கும் இது பொருந்தும். தலித்துகளுக்குள்ளும் எங்களது நிலை இன்னும் மோசமானது என்கின்றனர் அருந்ததியர். தேவேந்திரர்கள் தங்களைப் பிற தலித்களிடமிருந்து சில அம்சங்களில் வேறுப்படுத்திக் காட்டிக் கொள்கிறார்கள். இருளர்கள் முதலான பழங்குடியினர் எந்த அமைப்பு பலமும் இல்லாமல் மிக மிக மோசமாக சமூகத்தாலும், போலீசாலும், அரசாலும் தாக்கப்படுகின்றனர். எனவே தலித் இயக்கம் ஒன்று போதும், பழங்குடி இருளர்கள் தனியாகத் திரள வேண்டாம் எனச் சொல்வது அவர்கள் மீதான வன்முறையாகத்தான் இருக்க முடியும்.

இதன் பொருள் தலித் என்கிற அடையாளம் தேவையில்லை என்பதல்ல. நிச்சயமாகத் தேவை. பெண்கள் என்கிற அளவில் பெண்களுக்குப் பொதுப் பிரச்சினைகள் உள்ளன. இந்த ஆணாதிக்க சமுதாயத்திற்கெதிராகப் 'பெண்கள்' என்கிற உயிரியல் அடையாளத்தின் கீழ் பெண்கள் எல்லோரும் திரளுவதும் அவசியம்தான். ஆனால் அதே சமயத்தில் தலித் பெண்கள் தனியாகத் திரள வேண்டியதில்லை எனச் சொல்வதை ஏற்கமுடியாது. இந்தச் சாதி ஆதிக்க சமூகத்தில் சாதியத்திற்கும் தீண்டாமைக்கும் எதிராக தலித்கள் அனைவரும் ஒன்றாக இணைய வேண்டியதுதான். ஆனால் தலித் என்கிற அடையாளமே போதும், பழங்குடி இருளர் அல்லது அருந்ததியர் என்கிற அடையாளம் வேண்டாம் என்பது வன்முறையான ஒரு குரலாகவே இருக்கும்.

இந்தியன், இந்து, தமிழன், பெண், தலித், வர்க்கம் என்கிற எந்த அடையாளமும் இறுக்கமானதல்ல. மிச்சமில்லாமல் வறையறுக்கக் கூடியதல்ல. அடையாளம் என்பதென்ன? அடையாளம் எவ்வாறு உறுதி செய்யப்படுகிறது? Repetition – மீண்டும் மீண்டும் நிகழ்த்துதல் என்பதன் மூலம்தான் அடையாளம் உருவாகிறது. ஆனால் எந்த நிகழ்வும் இரண்டாம் முறை நிகழும் போது அது முதல் நிகழ்வின் அப்பட்டமான 'காப்பி'யாக இருப்பதில்லை. வித்தியாசம் வந்துவிடுகிறது. நான் முதலில் எழுதின 'அ'வும் இப்போது எழுதுகிற 'அ'வும் ஒன்றல்ல. அச்சில் எழுதும் போதும் அப்படித்தான். முதல்'அ'வும் அடுத்த 'அ'வும் ஒரே மாதிரியானதல்ல. மை வேறுபாடு, தேய்மானம், காகிதத்தின் தன்மை... என எத்தனை வேறுபாடுகள்! எனவே முழுமையான 'அடையாளம்' எப்படிச் சாத்தியம்?

அடையாள அரசியலின் வன்முறையை இன்று உலகம் அனுபவித்துவிட்டது. இது வேறுபாடுகளின் காலம்! இதை நாம் உணர்வது அவசியம். ●

படிப்பகம்

www.padippakam.com

# 'உதிரி'ச் சிந்தனை

**அ. மார்க்ஸ் எழுதி 'அதிகம் விற்பனையாகிற' ''பின் நவீனத்துவம்–இலக்கியம், அரசியல்'' என்னும் நூலிலிருந்து:**

எள்ளளவும் சமரசமே இல்லாமல் இந்த ஆபத்தை நாம் சுட்டிக்காட்டுவதன் விளைவாக நம்மை இவர்கள் பெரும் எதிரிகளாகக் கருதுகின்றனர். சகல முனைகளிலிருந்தும் தாக்குகின்றனர். நாம் பேசுகிற தலித்தியக் கோட்பாடுகளையும், பின் நவீனத்துவச் சிந்தனைகளையும் இணைத்துத் தாக்குகின்றனர். இந்த வகையில் இவர்கள் நம்மைத் தாக்குகிற பிற பார்ப்பனீய சக்திகளுடன் இணைந்து நிற்பதைக் கூர்ந்து கவனித்தால் விளங்கிக்கொள்ள முடியும். தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சியின் ''கண்ணோட்டம்'' மற்றும் வேளாளக் குரலை ஒலிக்கும் ''கவிதாசரண்'' போன்ற இதழ்கள் நம்மைத் தாக்குவதற்கும், சுந்தரராமசாமி ஜெயமோகன் போன்றோர் நம்மைத் தாக்குவதற்கும் அடிப்படை முற்றிலும் ஒன்றாக இருப்பதைத் தோழர்கள் கவனிக்க வேண்டும். ''கவிதாசரண்''– சமீபத்திய இதழ்களைப் பாருங்கள். பார்ப்பனியத்தை எதிர்ப்பதைப் போலவும் தலித் முயற்சிகளை ஆதரிப்பது போலவும் காட்டிக் கொண்டபோதிலும் அம்பேத்கரைச் சமரசம் செய்து கொண்டவர் எனச் சொல்லி, அவரது பவுத்தமத மாற்றத்தைக் கண்டிப்பதையும், பறையர்களின் இன்றைய பழக்க வழக்கங்கள் இழிந்தவைதான், அவர்களின் இறுதி இலக்கு மேற்சாதிப் பழக்க வழக்கங்களை நோக்கி நகர்வதே என அடித்துச் சொல்வதையும், பின் நவீனத்துவச் சிந்தனைகளை அசட்டுத் தனமாகக் கேலி செய்வதையும் காண முடியும். பவுத்த மரபை இடது சாரியினரும், அயோத்திதாசர், அம்பேத்கர் முதலான ஒடுக்கப்பட்ட அறிஞர்களும் முற்போக்கானதாகக் கருதி வந்ததையும், தமிழ்ச் சைவம் அதனைத் தொடர்ந்து எதிர்த்து வந்ததையும் கவிதாசரணின் கருத்துக்களுடன் தோழர்கள் இணைத்துப் பார்க்க வேண்டும்.

... ... வழக்கமான சிறுபத்திரிகை மரபிலிருந்து விலகி பார்ப்பன எதிர்ப்பை முன்னிலைப் படுத்தும் வகையில் கவிதாசரணின் இடத்தையும் மரியாதையோடு நினைவு கூர்கிறேன்.

●

**இக்குற்றப் புலனாய்வுக்கு ஆதாரமாய் அவர் பயன்படுத்திய ''சுரணை'' என்னும் கட்டுரையின் தொடர்புள்ள சில பகுதிகள்:**

நிறப்பிரிகையாளர்களும் ஏனைய தலித்தியவாதிகளும் அம்பேத்கரிடமிருந்து உத்வேகம் பெற்றவர்கள். தெரிந்தோ, தெரியா

படிப்பகம்

www.padippakam.com



மலோ அம்பேத்கரை 'இந்திய அரசியல் சட்டச் சிற்பி' என்றழைத்து தலித் மக்கள் பெருமிதம் கொள்கின்றனர். உண்மையில், இது அந்த மேதைக்குப் பெருமை சேர்க்கிற விஷயமே அல்ல. பிறர் திணித்த கருத்துகளுக்கெல்லாம் இவர் சாட்சியாகத் தம்மை சமரசப்படுத்திக் கொள்ள வேண்டிய இக்கட்டில்தான் அவர் அரசியல் வரைவு குழுவின் தலைவராக இருந்தார். இன்னொன்று: தலித் மக்களுக்கு மதம் இல்லை என்று அடித்துச் சொன்னவர் அம்பேத்கர். அப்படி மதமற்றவர்களைக் கடைசியில் கொண்டுபோய் புத்த மதத்தில் சேர்த்து (புத்தம் என்னதான் உன்னதமாயினும்) மதத் தளை பூட்டிவிட்டார். இவ்விரண்டு காரியங்களிலும் அம்பேத்கர் செய்து கொண்டது கருத்தியல் சமரசம்தான். அவரது போராட்ட வாழ்க்கையில் இவையிரண்டும் தவிர்த்திருக்க வேண்டிய சருக்கல்கள். ஒருவேளை அவர் செயல்களுக்கு ஆழமான வேறு காரணங்கள் இருந்திருக்கலாம். போர்க்களத்தில் பகைத்திறம் முறியடிக்க தன் திறனைக்காட்டிலும் தந்திரமே போதுமானதாயிருக்கலாம். அம்பேத்கர் அப்படியானதோர் உத்தியைக் கையாண்டிருக்கலாம்.

.........

தலித்தியவாதிகள் 'தலித்' மக்களை 'உள்ளபடியே' வைத்துக்கொண்டு குறியற்ற அல்லது பிறரால் குறி படுத்திய கலகப் பரிமாணங்களைக் கொண்டே, 'இதுதான் தலித் விடுதலை' என்று காட்ட முயல்கிறார்களோ என்று எனக்கோர் ஐயம்.

தலித்துகள் இன்றைய சிறுமைகளிலிருந்து மீண்டு, எந்த நிலையை எய்த வேண்டுமென்று இவர்கள் எதிர்பார்க்கிறார்கள்? தலித்துகளின் கலாச்சாரம்-பண்பாடு என்று இவர்கள் முன் வைப்பதெல்லாம் உண்மையில் தலித்துகளுடையவைதாமா?

.........

'தலித்' என்பவன் மாடு தின்கிறவன்; மலம் அள்ளுகிறவன்; பறையடிக்கிறவன்; படிக்காதவன்; சாராயம் குடிக்கிறவன்; கூசப் பேசுகிறவன்; கானாப்பாட்டு பாடுகிறவன்; அழுக்கானவன்; கற்பு உயிரினும் மேலானது என்று கதைக்காதவன்.

சொல்கிறார்கள் இப்படியெல்லாம். இருக்கட்டும்.

ஆனால், இவையாவும் அவன் சுயேச்சையாகக் கட்டமைத்துக் கொண்ட வாழ்க்கை முறைகளா என்ன? காலங்காலமாய் அவன் மேல் சுமத்தப்பட்ட அடிமைத்தனம், அறியாமை, மிடிமை, மனித மறுப்பு ஆகியவற்றால் வலிந்து பழகிக் கொண்ட வாழ்க்கைமுறைகள். இதன் மேல் கட்டமைக்கப்பட்ட பண்பாடு, கலாச்சாரம் என்பதெல்லாம் மூலத்தில் அவனுடையதாக இருப்பது எப்படி? தலித்துகளின் மீட்சி என்பது இதன் புறக்காரணிகளிலிருந்து அவர்களை மீட்பதுதான். அதைவிட்டு, தலித்துகளின் இந்த அவலங்களையே

படிப்பகம்

www.padippakam.com



உன்னதப்படுத்தி, அதற்குப் புறம்பானதையெல்லாம் அசிங்கப்படுத்திவிட்டால் அவர்கள் உயர்ந்து விடுவார்களா? தலித்தியவாதிகளின் விமர்சனங்கள் சமீப காலத்தில் இந்தப் போக்கில்தான் கிளை பரப்பிக் கொண்டிருக்கின்றன. தலித்துகள் பார்வையில் தூய்மையாய் இருப்பது, புறச்சூழல் ஓம்புவது, புலால் மறுப்பது, குடியைத் தவிர்ப்பது என்பதெல்லாம் வெறுக்கத்தக்க, நகைப்பிற்கிடமான, அருவருப்பான கழிசடைப் பழக்கங்கள் என்று கட்டமைப்பது தலித்துகளை முற்ற முழுக்கத் தனிமைப்படுத்தி, அவர்களைச் சுற்றி தலித் அல்லாதோரைப் பகைவேலியாக நெருக்கிக் கட்டுவதைத் தவிர வேறென்னவாம்? முக்குலத்தோர், நாய்க்கமார்கள், சாணார்கள் போன்றவர்கள் —வாழ்முறையிலும், வறுமையிலும் தலித்துகளோடு வர்க்கப்படுகிறவர்கள்தாம். ஆனால், மேல் சாதிக் கவசம் அவர்களுக்கு அணிவிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கவசத்தின் பின்னால் அரசு, அதிகாரம், காவல்துறை, நீதித்துறை, பதவி, பண பலம் யாவும் படைபலங்களாக அணிவகுத்து நிற்கின்றன. தலித்துகளின் தனிமைப்படல் இவர்களிடம் அடிபட்டுச் சாவதற்காகவா?

.........

தலித் என்பவன் மேல் நோக்கிய மனித குல நகர்வில் அவன் மேலேறி நின்ற பீடத்திலிருந்து (அவ்வாறு) கீழே தள்ளப்பட்டு அழுத்தப்பட்டவன்தான். ஆகவே அவன் விடுதலை என்பது ஓர் உச்ச இலக்கை நோக்கிய மேல் நகர்வாகத்தான் இருக்க முடியும். இப்போதைக்கு (எப்போதைக்கும்தான்) அந்த உச்ச இலக்கில் உட்கார்ந்திருப்பவன் பிராமணன்தான். ஆகவே பிராமணனே அவன் எட்டவேண்டிய இலக்காகிறான்.

இந்திய சமுதாயத்தில் மனித வாழ்க்கையின் உச்சமான வாழ்வியல் என்பது பிராமணனுடையதுதான் என்று பிராமணனும் சரி, பிறரும் சரி நம்புகிறார்கள். இந்த நம்பிக்கையின் ஆணிவேர், சமூக கட்டுமானத்தின் கருத்தியல் பிரம்மாவாக பிராமணன் தன்னை முன்னெடுத்துச் சென்று, இன்னமும் அதைத் தக்க வைத்துக் கொண்டிருப்பதுதானே தவிர அவனுடைய புற வாழ்க்கைக் கூறுகள் அல்ல. பிராமண புறக் கூறுகள் உழைக்கும் மக்களைப் பொறுத்தவரை 'வேலையில்லாததன் வேலை' தானே தவிர, பிரமிக்கவோ, போற்றவோ, பின்பற்றவோ ஒன்றுமில்லை.

பிராமணன் போட்டுக் கொண்டு வந்தது பூணூல் மட்டுமே. இங்கே ஏற்றுக் கொண்டு பழகியது புலால் மறுப்பு. ஏற்கனவே இந்தப் புலால் மறுப்பை மேன்மையின் சின்னமாக மென்று கொண்டிருந்தவன் வெள்ளாளன். அந்த வெள்ளாளனைவிடவும் ஒரு படி மேலே நிற்க பிராமணன் வைத்திருக்கும் ஆயுதம்தான்

படிப்பகம்

www.padippakam.com



சமஸ்கிருதம். சமஸ்கிருதத்தை பிராமணன் 'வழிபாட்டு மொழி' யாக உயர்த்திப்பிடித்ததும் வெள்ளாளனும் சும்மா இருக்கவில்லை. பிராமணனுக்கு எதிராக 'உழுபடை' மொழியான தமிழை வழிபடு மொழியாக வளர்த்தெடுத்தான். இது தமிழின் பிற துறை வளர்ச்சியை முடக்கிப் போடத்தான் பயன்பட்டது. இந்த 'சமயமொழி' யைத்தான் தமிழவன் 'வெள்ளாளத் தமிழ்' என்று வகைப்படுத்தினார் எனின், அதை நியாயமான மதிப்பீடாக ஏற்றுக்கொள்ள வேண்டும்தான். 'தலித் தமிழ்' இன்னும் மண் சார்ந்ததாகவும் மனித நாவில் உயிர் வளர்த்ததாகவும் வாழ்கிறது. சமஸ்கிருதத்தை விலக்கிவிட்டால், பிராமணனுக்கும் வெள்ளாளனுக்கும் மனோபாவத்தில் வேறுபாடே இல்லை என்னும் அளவுக்கு, பிராமண வர்ணாசிரமக் கூறுகள் யாவும் வெள்ளாளனின் சாதிக் கூறுகளாக மறு வார்ப்பு பெற்று, தலித்துகளின் அவலங்களுக்குப் புதிய பரிமானங்களை வளர்த்தெடுத்தன.

.........

சுத்தம் பார்த்தவனும் புலால் மறுத்தவனும் தலித்துகளை சிறுமைப்படுத்தியதில் முதன்மையானவர்கள் என்பது மறுப்பில்லாத உண்மை. அதற்காக அழுக்கை நேசிக்காதவன், மாடு தின்னாதவன், மலம் அள்ளாதவன், சாராயம் குடிக்காதவன் எவனும் தலித்தே அல்லன் என்கிற புதிய மதிப்பீட்டை தலித்திய மதிப்பீடாகத் தூக்கிப் பிடிப்பது தலித்துகளைக் கரை சேர்க்கவா, அல்லது பயன்படுத்திக் கொள்ளவா? இந்த மதிப்பீட்டையே அதன் போக்கிலேயே நீட்டினால், 'கல்வி கற்கிறவன் தலித்தே அல்ல' என்று நியாயப்படுத்துவதற்கு எவ்வளவு நேரம் பிடிக்கும்?

குடி கெடுக்கிறவன், கொலை செய்கிறவன், கூட்டிக் கொடுக்கிறவன், பொய் சொல்கிறவன், புறம் பேசுகிறவன், பிச்சையெடுக்கிறவன், வக்கிரம் படைத்தவன், வஞ்சகம் பண்ணுகிறவன், சோரம் போகிறவன், மாமா வேலை செய்கிறவன், குஷ்டம் பிடித்தவன், கும்பிட்டு வாழ்கிறவன், உருவிப் பிழைக்கிறவன், ஊரை ஏமாற்றுகிறவன், புல்லுருவியாய் உறிஞ்சி வாழ்கிறவன், நக்கிப் பிழைக்கிறவன்— ஒவ்வொருத்தனும் தன்னை ஒரு தலித்தைவிட உயர்ந்தவனாகவே எண்ணுகிறான்; தலித்தோடு தன்னை ஒப்பிட்டு பார்ப்பதை சகிக்க முடியாத இழிவாகவே கருதுகிறான்.

'தலித் விடுதலை' என்பது இந்த மனோபாவத்தை வேரறுக்கும் ஆயிரங்காலத்துப் போரல்லவா?

மனிதப் பாகுபாடுகளைக் கட்டமைக்கும் இந்த மனோபாவத்தின் வயதும் வலிமையும் கொஞ்சநஞ்சமல்ல. இதைப் போதிக்கும் சாஸ்திரங்கள், சடங்குகள், வேதங்கள், வியாக்கியானங்கள் அனைத்தையும் தலைகீழாய்ப் புரட்டிப் போட்டு, இவையெல்லாவற்றையும்

படிப்பகம்

www.padippakam.com



பயிர் செய்து பராமரிக்கும் பார்ப்பனியக் கருத்தியலை வேரடி மண்ணோடு களைந்து, சமூகக் கருத்தியலை உழைக்கும் தலித்தினக் கரங்கள் வகுக்கும்போது சாதிகள் அழிந்திருக்கும். 'தலித் விடுதலை' என்பது தலித் என்னும் பெயரிலிருந்தும்தான்.

●

கட்டுரை பற்றி மார்க்ஸ் எழுதிய கடிதத்தின் ஒரு பகுதி:

தலித் உளவியல் மற்றும் தந்திரோபாயங்களை நாம் மிகவும் ஆழமாகக் கவனிக்க வேண்டும். காலங்காலமாக எல்லாவற்றிலும் ஒதுக்கப்பட்ட ஒரு நிலையில் எல்லாவற்றிலும் உரிமை கோரி, வாய்ப்பு கிடைத்த போது இடங்களைக் கைப்பற்றி, சாத்தியமானதை சாதிக்க முயல்வது என்பதை அறிஞர் அம்பேத்கர் தொடங்கி இன்று மாயாவதி வரை நாம் காணமுடியும். அம்பேத்கர் அவர்கள் காங்கிரசை எதிர்த்து வந்தார். பின்பு காங்கிரஸ் அமைச்சரவையிலேயே பங்கேற்று தலித் மக்களுக்கான பல்வேறு நல நடவடிக்கைகளைச் சாத்தியமாக்க முயன்றார். இந்து சட்டத் தொகுப்பில் பிரச்சினை வந்தபோது அமைச்சு பதவியைத் தூக்கி எறிந்துவிட்டு வந்தார். அரசியல் நிர்ணய சபை பற்றிப் பேச்சு வந்தபோது அதனை எதிர்த்தார். சபை அமைக்கப்பட்ட போது விருப்பிப் பங்கேற்றார். சிலவற்றை அரசியல் சட்டத்தின் மூலம் சாதித்தார். பினனர் அரசியல் சட்டத்தை எரிக்கும் முதல் ஆளாக நான்தான் இருப்பேன் எனப் பிரகடனமும் செய்தார். இரட்டை வாக்குரிமைக்காகப் போராடினார். காந்தி உண்ணாவிரதமிருந்து அழுத்தம் கொடுத்த போது மசிந்தார். பின்பு இறுதிக் காலத்தில் மீண்டும் இரட்டை வாக்குரிமைக் கோரிக்கையை முன்வைத்தார். பதவிக்காக அவர் சமரசம் செய்து கொண்டு தொங்கிக் கொண்டிருந்ததில்லை. இன்று மாயாவதி அரசு பாரதீய ஜனதா ஆதரவில் ஆட்சியைப் பிடித்திருப்பதை நாம் விமர்சித்தாலும் இந்தப் பின்னணியிலிருந்து நாம் அதைப் பார்த்தாக வேண்டியிருக்கிறது.

●

நம் கருத்து: "இது கவிதாசரணுக்கெதிரான மோசமான வன்முறை."

பின் நவீனத்துவச் சிந்தையாளர்கள் பற்றி பிறமொழி மூலமே அட்டகாசமாய்ப் புரிந்து கொள்ளும் மார்க்சுக்கு அவர் சொந்த மொழியில் எழுதும் கவிதாசரணை நேர்படப் புரிந்து கொள்ள முடியாமல் போனது துரதிர்ஷ்டம்தான். காரணம் அவரைப் பிடித்தாட்டும் சாதியும், சாதி சார்ந்த கற்பிதமும்தான்.

படிப்பகம்

www.padippakam.com



கவிதாசரணை அம்பேத்கரின் எதிர் விமர்சகனாகவும், தலித்துகளின் எதிரியாகவும் மார்க்ஸ் காட்ட முயலும்போது அவரது 'அறிவின் வன்முறையை' என்னால் அடையாளம் கண்டு கொள்ள முடிகிறது. தலித் உளவியல் மற்றும் அம்பேத்கர் செயல் பற்றி அவர் எடுத்து வைக்கும் ஆழமான பார்வையை — 'அம்பேத்கர் பொருளாசை பிடித்தவர், சுயநலம் மிக்கவர், அதிகார வேட்கை கொண்டவர்; அவர் மத மாற்றம் சந்தர்ப்பவாத அரசியல் நடவடிக்கை' என்று தூற்றும் அருண் ஷோரி என்னும் வீணரின் பார்வைத் தளத்தில் வைத்து, அம்பேத்கருக்கும் தலித் மக்களுக்கும் எதிரான விமர்சனமாக விரித்துரைக்கலாம் என்றாலும், அது ஒரு வக்கிர புத்தியின் வன்முறைாகவே முடியும் என்பதில் தெளிவாகவே இருக்கிறேன். மார்க்சிடமும் அந்தத் தெளிவை எதிர்பார்ப்பது தப்பில்லை. காரணம், அண்மைக் காலங்களில் பின்நவீனத்துவத்தின் உரையாசிரியராகவும் போதகராகவும் தன்னை முன்னிறுத்தி, தன் செயல்பாடுகளை 'வகுப்பறை களப்பணி'யாகச் சுருக்கிக் கொண்டாற் போன்ற தோற்றத்திற்காட்பட்டாலும் இன்னமும் அவரை ஒரு சுய சிந்தனையாளராகவும் வீரியம் மிக்க பன்முகக் களப்பணியாளராகவுமே நான் மதிப்பிடுகிறேன்.

'கோடு' அமைப்பின் கீழ் 'தமிழன் – ஒரு சித்திரம்' என்னும் தலைப்பில் பேச வந்த மார்க்ஸ் தன் இறுதிக்கட்ட உரையினூடே "குமரி மாவட்டத்தில் நாடார்கள் மலம் அள்ளுகிறார்கள், தெரியுமா?" என்று உணர்ச்சி பொங்கக் கேட்டார். இதில் இரண்டு விஷயங்கள் உள்ளன. ஒன்று மலம் அள்ளுவது தலித்துகளின் பணி என்பது. மற்றொன்று நாடார்கள் தலித்துகள் அல்லர் என்பது. முதல் விஷயத்தை நான் முற்றாக மறுக்கிறேன், தலித் விடுதலைக்கு அதுதான் தடம் என்பதால். இரண்டாவது விஷயத்தை மார்க்ஸ் நம்புகிறார். அதுதான் உண்மையும் கூட. சென்னை மட்டுமல்ல, மும்பை பருப்புச் சந்தையையும் சேர்த்தே தம் சுண்டு விரலில் ஆட்டிவைக்கும் வல்லமை படைத்தவர்களாக நாடார் பெருமக்கள் முன்னேறிவிட்டதோடு, பிற்பட்ட சாதியாகவும் இன்று அறியப்படுகின்றனர். 'சாணார்' என்னும் பெயருங்கூட இப்போது பிற்பட்ட சாதியாகத்தான் பட்டியலிடப்படுகிறது. ஆனால் இந்த நூற்றாண்டின் முப்பதுகள் நாற்பதுகள் வரை தென் திருவாங்கூரிலும் குமரியிலும் அவர்கள் தலித்துகளைவிடவும் கீழாகத்தான் சுரண்டப்பட்டனர். ஜி. அரவிந்தன் எடுத்த 'சிதம்பரம்' என்னும் மலையாளப் படத்தில் தென்பாண்டித் தமிழன் ஒரு தலித்தாகத் தான் சித்தரிக்கப்படுகிறான். பெரியாரின் சுயமரியாதை இயக்க உணவுக் கூடங்களில் தீண்டத்தகாதவர்களாகக் கடைநிலையில் வைத்தெண்ணப்பட்ட நாடார்கள்தாம் சமையல்காரர்கள். பிற தாழ்த்தப்பட்டவர்கள் பரிமாறுகிறவர்கள். அப்படியொரு சாதி

படிப்பகம்

www.padippakam.com



மறுப்புப் புரட்சியை வெகு எளிதாகச் செய்து காட்டியதாகப் பெரியாரே சொல்கிறார். ஆக, நரடார்களின் தலித்திய விடுதலை சாத்தியப்பட்டது எப்படி? கடின உழைப்பால், வணிகச் செழிப்பால், சொந்த முயற்சியால். இன்று தென் மாவட்டங்களில் உள்ள பள்ளர் சாதி மக்கள் தங்களை தேவேந்திர குல வேளாளர் என்று அழைத்துக் கொள்வதோடு (ஆனால் பள்ளரின் சுருக்கமாகத் தங்களை இன்னமும் P L என்றுதான் குறிக்கின்றனர்.) "நாங்கள் தலித்துகள் அல்ல; அந்தப் பெயரால் எங்களை அழைக்காதீர்கள்" என்று எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள். பிற தாழ்த்தப்பட்டவர்களைப் போலவே சிரட்டையில் தேனீர் அருந்தவும், சவக்குழி வெட்டவும், 'தீட்டு' சொல்லி ஒதுக்கவும் சபிக்கப்பட்ட அவர்கள், இன்றொரு புது விழிப்பாய் கல்வியறிவும், பொருள் வசதியும், நிலவுடைமையும், வழி நடத்த 'ஒரு நல்ல தலைமையும்' பெற்ற கையோடு முதலில் 'தலித்' என்னும் பெயரை விலக்க (இதில் பிற தாழ்த்தப்பட்டவரை 'தலித்'தாக முத்திரை குத்துகிற பாதகம் நேர்ந்தாலும்) முடிவெடுத்து விட்டனர். ஒடுக்கப்பட்ட எல்லா சாதிகளையும் ஒன்று திரட்டும் போர்க் குணமிக்க ஒற்றைச் சொல்லாகத் தேர்வு செய்யப்பட்ட 'தலித்' என்னும் குறியீடு, இன்று தாழ்த்தப்பட்டவர்களைக் குறிக்கும் இன்னொரு இழிசொல்லாக சிறுத்துப் போய்விட்டதாக அவர்களுக்குப் பட்டுவிட்டது. விடுதலைப் போரில் விரைவில் அவர்களும் வெல்வார்கள் என்று நம்புவோமாக. ஒரு தலித் தன்னுடைய பழைய தடத்தையும் தளத்தையும் அழித்துக் கொண்டுதான் விடுதலை பெறமுடியும் எனில் இதில் யாருக்கென்ன நட்டம்? தலித் விடுதலைக்கான இந்த நடைமுறை சாத்தியப்பாடுகளோடு கவிதாசரண் கருத்தையும் இணைத்துப்பார்க்க வேண்டும்.

பின் நவீனத்துவத்தை நான் அசட்டுத்தனமாகக் கேலி செய்வதாகச் சொல்கிறார். நல்லவேளை 'அயோக்கியத்தனமாக' என்று சொல்லவில்லை. தனக்குப் பிடிக்காத ஒருவரை மட்டம் தட்டுவதில் அந்தச் சொல்லும் அவருக்குப் பிடித்தமான ஒன்று. அப்படி நான் கேலி செய்ததாக நினைவில்லை. ஆனால் என் சந்தேகங்களை வெளியிட்டிருக்கிறேன். பின் நவீனத்துவம் பற்றி அதன் முத்திரையோடு நான் ஏதாவது கற்றுக் கொண்டிருக்கிறேன் எனில் அது மார்க்சின் எழுத்து மூலமாகத்தான் இருக்கும். நான் இன்னும் சரியாகக் கற்கவில்லை எனில் அவர் இன்னும் சரியாகக் கற்பிக்கப் பயிலவில்லை என்றுதான் பொருள். மேலும் மார்க்ஸ் இன்னும் கற்றுக்கொள்ள அதில் மிச்சம் இருக்கிறதாகவே நான் நம்புகிறேன். இவர்கள் மொழி மாற்றியளித்த பின் நவீனத்துவக் கூறுகள் ஏதாவதொரு விதத்தில் விளிம்பியல் கருத்தாளர்களின் சிந்தனைப் போக்கை விசாலப்படுத்தியே உள்ளன. இந்தப் பெரு

படிப்பகம்

www.padippakam.com



மையை 'நிறப்பிரிகை'யாளர்களுக்கு குறிப்பாக மார்க்சுக்கு உரிய தாக்குவதில் எனக்கொன்றும் தயக்கமில்லை. அதே நேரத்தில், பின் நவீனத்துவ யுகத்தில் இவர்கள் மட்டுமே தமிழக முகவர்கள் என்பதாகவும், இவர்களுக்கெதிராக தமிழ்ச் சமுதாயமே திரண்டெழுந்து நட்சத்திர யுத்தம் நடத்திக்கொண்டிருப்பதாகவும், இவர்களுடைய ஒரேயொரு செயலை ஒரு தடவை விமர்சனம் செய்தவனைக்கூட இவர்களின் ஒட்டுமொத்த நடவடிக்கைகளையும் நூறு தடவை தாக்குகிறவனாகவும் (என் சொந்த அனுபவம்) கூக்குரல் எழுப்பி ஒரு பாவனை உலகில் சஞ்சரித்துக்கொண்டு, பகை முரண் நட்பு முரண் என்ற பாகுபாடே இல்லாமல்-இவர்களைச் சரியாகவும் சாதகமாகவும் மதிப்பிடத் தவறியவர்களையெல்லாம் அசடர்கள், அயோக்கியர்கள் என்று துவம்சம் செய்து தங்களின் நியாயமான சிறப்புகளைத் தாங்களே நீர்க்கச் செய்துவிடுவார்களோ என்ற அச்சமும் எனக்குண்டு.

புரிதல் தளத்தில் பின் நவீனத்துவக் கூறுகளை நட்புடன் பரிசீலிப்பதில் யாருக்கும் பிரச்சினை இருக்க முடியாது; கூடாது. ஆனால் செயல் தளத்தில் பன்மைத்துவத்தின் வரம்புகள் பற்றியே பிரச்சினை. அடக்குமுறைகளும், புறக்கணிப்புகளும், அடையாள மறுப்புகளும், அடிமைப் படுத்தலும் மலிந்த இந்தியச் சூழலில், சுய நலமும் அதைப் பேணும் சூழ்ச்சியும் சமூக மனிதனின் நிரந்தரமான பலவீனங்களாகிவிட்ட களத்தில், எதிரியுடனான ஒரு போராட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுப்பதில், முற்ற முழுக்க வன்முறையற்ற, அதிகாரம் தவிர்த்த, ஆதிக்கம் ஒழித்த கூட்டு முயற்சியையோ, இயக்கத்தையோ, அமைப்பையோ எப்படிக் கட்டமைப்பது என்று பின் நவீனத்துவம் வழி காட்டாத போது, (வழி காட்டுவது அதன் வேலையல்ல.) ஜனநாயகம் பற்றிய வெற்றுக் கனவுகளோடேனும் பகுத்தறிவு, தர்க்கம், தேசியம் என்னும் கட்டமைப்புகளோடுதான் தற்காலிகமாகவேனும் செயல்பட்டாக வேண்டியுள்ளது என்பதுதான் மார்க்சுக்கும் எனக்கும் (பிறருக்கும்கூட) உள்ள இடைவெளி. அவருடைய நூலின் முன்னுரையில் (முன்னுரையில் மட்டுமே) அந்த இடைவெளியை முற்றுமாக அழித்திருக்கிறார் என்பது மிகுந்த ஒத்திசைவான செய்தி.

நான் போடுகின்ற ஒவ்வொரு கையெழுத்தும் வேறுபாடுகள் நிறைந்ததுதான். ஆனால் ஒவ்வொரு மாத இடைவெளியிலும் முதல் தேதியில் வேறு வேறு நான்கள் போடும் வேறு வேறு கையெழுத்துகளை ஒற்றைப் பரிமாணமுள்ள நான் போடும் ஒற்றைப் பரிமாணமுள்ள கையெழுத்தாகக் கற்பிதம் செய்து எனக்கு ஊதியம் வழங்கப்படுகிறது என்னும் பன்மைத்துவ ஊடிழையில் தான் நாம் எப்போதும் வாழ்ந்து தொலைக்க வேண்டியுள்ளது. ●

படிப்பகம்

www.padippakam.com

# அனைத்திந்திய தேசியமும் திராவிட தேசியமும்

# உறவுகளும் முரண்களும்

## —தொ. பரமசிவன்—

கடந்த நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து நமது தமிழ்ச் சமூகத்தில் ஏற்பட்ட அசைவுகளைக் குறித்து தமிழ்நாட்டு, வெளிநாட்டு ஆய்வாளர்கள் சிலர் அண்மைக் காலத்தில் நிறைய எழுதியுள்ளனர். அவர்களுடைய எழுத்துக்கள் பெரும்பாலும் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியை அடிப்படையாகக் கொண்டு அமைகின்றன.

ஆர். சுந்தரலிங்கம் 1852-1891, டி. ஏ. வாஸ்புருக், 1870-1920 கிறிஸ்டோபர் பேக்கர் 1920-1937, யூஜின் இர்ஷிக் 1919-20, 1930கள் (இருநூல்கள்), ஈ. சா. விசுவநாதன் 1920-49, கே. நம்பி ஆரூரன் 1905-44 ஆகியோர் நூல்கள் இந்த வரிசையில் குறிப்பிடத்தக்கவை. இவை தவிர முரசொலி மாறன், எஸ். சரசுவதி, எஸ். வி. ராஜதுரை, வ கீதா, இரா. வேங்கடாசலபதி, கேசவன் ஆகியோரின் நூல்களும் ஆனந்தி, எம். எஸ். எஸ். பாண்டியன், அ. மார்க்ஸ், பொ. வேல்சாமி ஆகியோரின் கட்டுரைகளும் இத்துறையில் குறிப்பிடத் தகுந்த முயற்சிகளாகும். மிக நீண்ட காலப் பகுதியினை ஆய்வுப் பொருளாக எடுத்துக் கொண்டு, 'இந்தியத் தேசியமும் திராவிடத் தேசியமும்' என்ற நூலை குணா எழுதியுள்ளார்.

கடந்த நூற்றாண்டின் நடுப்பகுதி தொடங்கி பெரியாரின் இறுதிக் காலம் வரையுள்ள தமிழ் நாட்டுச் சமூக அரசியல் வரலாற்றை நான்கைந்து கால கட்டங்களாகப் பகுத்துப் பார்ப்பது, இந்தியத் தேசியத்தின் உருவாக்கம், வளர்ச்சி, வாழ்வு இவற்றோடு தமிழ்ச் சமூகம் கொண்ட உறவுகளையும், முரண்களையும் விளக்க ஓரளவு போதுமானதாக அமையும் என நம்பலாம்.

இக்காலப் பகுப்பைப் புரிந்துகொள்ளும் முன்தேவையாக ஆரியன்×தமிழன், ஆரியம்×திராவிடம், இந்து×தமிழர் ஆகிய எதிர்நிலைச் சொற்கள் எந்த எந்தப் பொருளில் காலந்தோறும் ஆளப்பட்டன என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

'ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்' என்று திருநாவுக்கரசர் தேவாரத்தில் வடமொழியாளர்×தமிழர் என்ற பொருளில் இது கையாளப்பட்டுள்ளது. 'ஆரியன்' என்று தமிழரல்லாத வடமொழியாளரைக் குறிப்பிடும் சொற்பயன்பாட்டில் இதுவே காலத்தால் மூத்ததாகும். 'பஞ்ச திராவிட' எனத் தென்னாட்டுப் பிராமணர்கள்

படிப்பகம்

www.padippakam.com



தங்களை அழைத்துக்கொண்ட போது 'திராவிடம்' என்ற சொல் தமிழ், தெலுங்கு, மலையாள, கன்னட, துளு நிலப்பகுதிகளைக் குறிக்கிறது. அழகியமணவாளப் பெருமாள் நாயனாரின் 'ஆச்சார்ய ஹிருதயம்' என்ற வைணவ தத்துவ நூலில் (14 ஆம் நூற்றாண்டு) ''வேதம் பஹீவிதம் இதில் ஆரியம் திராவிடம் என்கிற பிரிவு ருகாதி பேதம் போலே'' என்று 'திராவிடம்' என்ற சொல் தமிழ் மொழியைக் குறித்திருக்கிறது.[1] கடந்த நூற்றாண்டில் கால்டுவெல் 'திராவிடம்' என்ற சொல்லை மொழிக் குடும்பத்தைக் குறிக்கப் பயன்படுத்தினார். ஆனால் அவருக்கு முன்னர் 1847இல் 'திரா விட தீபிகை' என்ற பெயரோடு சென்னையில் ஒரு பத்திரிகை தொடங்கப் பெற்றுள்ளது. குறிப்பாக பின்னர் பஞ்சாபில் பிறந்த ஆரியசமாஜத்தின் செல்வாக்கு காரணமாக 'ஆரியன்' என்ற சொல் இந்திய நிலப் பகுதி மக்கள் அனைவரையும் குறிக்கும் சொல்லாக பார்ப்பனர்களால் பயன்படுத்தப்பட்டுள்ளது. ''பேரிமய வெற்புமுதல் பெண் குமரி ஈறாகும் ஆரியநாடு' என்பது 1906இல் பாரதி கவிதை.[2] பாரத தேவிக்கு நகரம் காசி. ஆறு கங்கை. மலை இமயம். வேதங்களே வெற்றிமுரசு. தாஜ்மஹாலும் எல்லோராவும் சரப சாஸ்திரியின் கையிலிருக்கும் புல்லாங்குழல் பாரதிக்கு 'ஆரிய சம்பத்து'. பாரதியின் குருவான திலகர் ஓர் ஆரிய சமாஜி. 1904இல் இந்தியச் சமூகத்தை (Aryan Nationality) என்று 'இந்து' ஆங்கில நாளிதழ் எழுதியது.[3]

'இந்து', 'இந்தியா' ஆகிய இரண்டு சொற்களும் ஆங்கிலேயரால் அறிமுகப்படுத்தப்பட்ட சொற்களாகும்.[7/8] 1930களில் 'இந்து' என்ற சொல் கிறித்தவர்களும் முசுலீம்களும் அல்லாத உள்நாட்டுக்காரர்களைக் குறிக்கும் சொல்லாகக் கருதப்பட்டது. Hindu Literary Society என்ற பெயரில் சென்னையில் தொடங்கப் பெற்ற கல்விச் சங்கம் இப்படித்தான் இந்தச் சொல்லை வழங்கியது. பார்ப்பனரல்லாதவர்கள் தமிழர்கள் இந்தச் சொல்லை ''வடமொழி

---

1. ஸ்ரீவசனபூஷனம் (மூலம் மட்டும்), சுதர்சனம் வெளியீடு, திருச்சி, 1977 சூர்ணை எண்: 40
2. பாரததேவி திருத்தசாங்கம், பாரதியார் பாடல்கள் Rengasamy Parthasarathi (Bd)
3. A Hundred Years of The Hindu (The epic story of Indian Nationalism) Kasturl & Sons Ltd. Madras-2 1981 P. 45

7/8 இன்றளவும் இந்திய அரசியல் சட்டத்தில் 'இந்து' என்ற சொல்லுக்கு நேரிடையாக அல்லாமல் எதிர்மறையான விளக்கமே தரப் பட்டுள்ளது.

படிப்பகம்

www.padippakam.com



வேதத்தை ஏற்றுக்கொண்ட மக்களைக் குறிக்கும்'' சொல்லாக அப்பொழுது கருதவில்லை. 1917 (ஜூன் 1ஆம் நாள்) வெளியிடப் பெற்ற திராவிடன் முதல் இதழ் 'பிராமணரல்லாத இதர இந்துக்களுடைய குறைகள்' என்றுதான் எழுதியது.[4]

1898க்குள் 'இந்து' என்ற சொல்லைத் தன் பெயரில் கொண்ட 15 தமிழ் இதழ்கள், பத்திரிகைகள் வெளிவந்துள்ளன.[5] இவற்றுள் பெரும்பாலானவை பார்ப்பனரல்லாதாராலேயே நடத்தப் பெற்று வந்துள்ளன. 1888 சனவரியில் இந்து ஜன சமிஸ்காரினி என்ற இதழ் ''அரசாங்க வேலைகளில் பிராமணர்கள் நிறைந்திருப்பதைச் சுட்டிக்காட்டி அவர்களுக்கு மக்கள்தொகை விகிதப்படியே அரசாங்க வேலைகள் கொடுக்கப்பட வேண்டும்'' என்று எழுதியிருக்கிறது.[6]

இதே காலப்பகுதியில் 'திராவிடம்' என்ற சொல்லை தன் பெயரில் கொண்ட இதழ்கள், பத்திரிகைகள் 13 வெளிவந்துள்ளன.[7] இவை எவற்றிலும் பார்ப்பனர் தொடர்புடையவராகக் காணப்படவில்லை. விதிவிலக்காக 'திராவிட பாகவதன்' –1914 டி. கே. சீனிவாசையங்கார்¾ (வைணவ மாத இதழ்), 'திராவிட நேசன்' 1891

---

4. நீதிக்கட்சி பவள விழா மலர், 1992, ப. 116இல் உள்ள திராவிடன் முதல் இதழ் முதல் பக்கப் படம்.

5. அ. மா. சாமி. 19ஆம் நூற்றாண்டுத் தமிழ் இதழ்கள், சென்னை–4 1972, ப. 297 1. இந்து சன சமஸ்காரினி 2. இந்து சனபூசனீ 3. இந்து சனபோதினி 4. இந்து சாதனம் (1889) 5. இந்து சாதனம் (1884) 6. இந்து சுமித்திரா 7. இந்து தேசாபிமானி 8. இந்து நேசன் (ஊட்டி) 9. இந்து நேசன் (பெங்களூர்) 10. இந்து நேசன் (பினாங்கு) 11. இந்து பூசனி 12. இந்து மத சீர்திருத்தி 13. இந்து மத பிரகாசிகை 14. இந்து மதாபிமானி (சென்னை) 15. இந்து மதாபிமானி (கும்பகோணம்)

6. அ.மா. சாமி, 19ஆம் நூற்றாண்டுத் தமிழ் இதழ்கள் ப. 131

7. அ.மா. சாமி மேலது... ப. 300
1. திராவிட கோகிலம் 2. திராவிட பாண்டியன் (1885) 3. திராவிட பாண்டியன் (1896) 4. திராவிட பானு 5. திராவிடப் பிரகாசிகை 6. திராவிட தீபிகை 7. திராவிட நேசன் 8. திராவிட மந்திரி 9. திராவிட மித்திரன் 10. திராவிட ரஞ்சனி 11. திராவிட வர்த்தினி 12. திராவிட வர்த்தமானி (1882) 13. திராவிட வர்த்தமானி (1884)

¾ 'திராவிடம்' என்ற சொல் தமிழ் தென்கலை வைணவப் பார்ப்பனர்களுக்கு உகந்த சொல்லாகும். பொதுவாக நாலாயிர திவ்விய பிர

படிப்பகம்

www.padippakam.com



தஞ்சை (சைவம்). மாறாக அயோத்திதாசப் பண்டிதர் தொடங்கிய திராவிடப் பாண்டியன் (1888) இதழ் 'திராவிட' என்ற சொல்லில் மொழிக் குடும்பம், நிலப்பகுதி ஆகியவற்றுக்கும் அப்பால் சமூக, அரசியல் தளத்தில் முன் வைத்திருக்கிறது. 'இந்து' என்ற சொல் இந்துத்துவக் கோட்பாடுகளுக்கு முன்னோடியாக மாற்றப்பட்டதை இக்கட்டுரையில் பின்னர் காணலாம். இவரே 1890இல் திராவிட மகாஜன சபையினையும் தோற்றுவிக்கிறார். 'தேசசிய காங்கிரஸ் அல்ல, பார்ப்பனக் காங்கிரஸ் என்று 1908இல் எழுதியவரும் இவர்தான்.

தமிழ் நாட்டு மக்களின் அமைப்பு ரீதியான முதல் அசைவுக்கு 1852இல் தொடங்கப்பட்ட சென்னை ஜன சங்கத்தினை (MNA) அடையாளமாகக் குறிப்பிடலாம். இதற்கு முன்னர் 1830களில் பச்சையப்பன் அறக்கட்டளை நிர்வாகிகள் தொடங்கிய இந்து கல்விச் சங்கம் (Hindu Literary Society), 1840களில் தொடங்கப் பெற்ற சதுர்வேதி சித்தாந்த சவை என்னும் அமைப்பு ஆகிய இரண்டினை அறிகிறோம்.[8] சதுர்வேத சித்தாந்தம் என்ற பெயரிலிருந்து இது நேரிடையாகவோ மறைமுகமாகவோ ஒரு பார்ப்பன அமைப்பாக இருந்திருக்க வேண்டும் என்று தெரிகிறது. 1845இல் திருநெல்வேலியில் கிறித்தவர்கள் மீது இந்துக்கள் நடத்திய தாக்கு

---

பந்தத்தையும் குறிப்பாக நம்மாழ்வார் பாடல்களையும் 'திராவிட வேதம்' என அவர்கள் அழைப்பார்கள். நம்மாழ்வாரின் திருவாய்மொழி 'திராவிடோபநிஷத்' என அவர்களால் அழைக்கப்பட்டது. இந்த வைணவ மரபின் தொடர்ச்சியாக 1914இல் டி.கே. சீனிவாச ஐயங்கார் என்பவர் 'திராவிட பாகவதம்' என்ற பெயரில் இதழ் ஒன்றை நடத்தியுள்ளார். வைணவ மரபிற்கு 'பாகவத மார்க்கம்' என்ற பெயரும் உண்டு.

'திராவிட நேசன்' என்ற பெயரில் 1891 தஞ்சையிலிருந்து சைவ மாத இதழ் ஒன்று வெளிவந்திருக்கிறது. 18ஆம் நூற்றாண்டில் வெளியிடப்பட்ட சிவஞான முனிவரின் பேருரையினை 'திராவிட மாபாடியம்' என்ற பெயரில் சைவர்கள் வழங்கியிருக்கிறார்கள். அந்த மரபின் தொடர்ச்சியிது. சங்கரர், மாத்வர், இராமானுசரின் மாபாடியங்களுக்கு எதிராக அமைந்த மாற்றுப் பெயர் அது.

8. R. Sundaralingam, Politics and National awakening in South India (1852– '91). The University of Arizona Press 1974. P. 42 & 143

படிப்பகம்

www.padippakam.com



தலுக்கு அரசு ஆவணங்கள் இந்தச் சபையினையே குற்றம் சாட்டு கின்றன என்று சுந்தரலிங்கம் குறிப்பிடுகிறார்.[9]

சென்னை ஜன சங்கம் சென்னையிலிருந்த செட்டிகள், நாயுடு, கோமுட்டிச் செட்டி ஆகியோரால் லெட்சுமிநரசு செட்டியால் தொடங்கப் பெற்றதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். ஆனால் இதில் திருநெல்வேலி சைவ வேளாளரும் வியாபாரியுமான ஜே. ஏ. அப்பாசாமிப்பிள்ளை போன்றோரும் பங்குபெற்றுள்ளனர். இரண் டாண்டுகளில் இச்சங்கத்தில் அரசியல் விவகாரங்களை முன் னெடுத்துப் போவதா, சமூக சீர்திருத்தத்துக்கு முன்னுரிமை தரு வதா என்பதில் கருத்து வேறுபாடு ஏற்பட்டு பிளவு ஏற்படுகிறது. இதிலிருந்து விலகிய சீனிவாசப்பிள்ளை 'இந்து முன்னேற்ற சங்கம்' (Hindu Progressive Development Society) என்ற அமைப்பைத் தொடங்குகிறார்.[10] சென்னை ஜனசபையின் 'கிரசண்ட்' இதழுக் குப் போட்டியாக உதய சூரியன் (Rising Sun) என்ற இதழைத் தொடங்குகின்றனர். 1853 முதல் 1863 வரை நடந்த இந்தப் பத்தி ரிகைக்கு வெங்கட்ராய நாயுடு என்பவர் ஆசிரியர்.[11] பின்னர் ஒரு நூற்றாண்டுக் காலம் இந்திய தேசிய இயக்கத்திற்கும் திராவிட இயக்கத்துக்குமான முரண்பாட்டின் வித்து இங்கேயே தொடங்கி விட்டதை வரலாற்று மாணவர்கள் எளிதாகவே கண்டு கொள்ள முடிகிறது.

இதன்பின் வங்காளத்தில் பிறந்த கேசவசந்திரசென் பிரம்ம சமாஜத்தின் பிரதிநிதியாக 1866இல் தமிழ் நாட்டில் சுற்றுப் பய ணம் செய்கிறார். 'பிரம்மம்' பற்றிய 'விசாரத்தை' அவருடன் தமிழ்நாட்டுப் பார்ப்பனர்கள் பகிர்ந்து கொண்டிருக்க வேண்டும். ஏனென்றால் அது அவர்கள் மரபு வழி ஆன்மீகத்தோடு தொடர் புடைய கோட்பாடாகும்.

அதன் பின்னர் 1881இல் கர்னல் ஆல்காட்டும் பிளாவட்ஸ்கி அம்மையாரும் 'பிரம்மஞான'க் கருத்துகளைப் பரப்பச் சென்னை வந்து, அங்கிருந்து திருநெல்வேலி, தூத்துக்குடி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் தங்கள் அமைப்புக்கான (Theosophical Society) கிளைகளைத் தொடங்கிவைக்கின்றனர்.[12] "மலைமீது கட்டப்பட்ட கோட்டையினைப் போல இந்திய நாகரிகம் வேதங்களின் மீதும்

---

9. R. Sundaralingam ,, p. 51
10. R.S. do p. 51
11. do p. 81
12. do p. 295

படிப்பகம்

www.padippakam.com



பிற தேசிய நூல்களின் மீதும் கால் கொண்டு நிற்கின்றது." (An Indian Civilization resting upon the Vedas and other National works is like a strong Castle built upon rocks) என்பது ஆல்காட் சென்னையில் வெளியிட்ட கருத்தாகும்.[13] "ஆரிய மதத்தையும் பிற மதங்களையும் படிப்பதும் (to study Aryan and other religion) பொருள் முதல் வாதத்தை வளரவிடாமல் தடுப்பதும், பிரம்ம ஞான சபையின் நோக்கங்களாகச் சொல்லப் பட்டன. 'தேசிய சமஸ்கிருத இயக்கத்தின்' (National Sanskrit Movement) பகுதியாக அடையாறு கீழ்த்திசை நூலகம் தொடங்கப்பட்டது.

திருநெல்வேலி நெல்லையப்பர் கோயிலில் கர்னல் ஆல்காட்டுக்கும் பிளாவட்ஸ்கி அம்மையாருக்கும் கோயில் சார்பாக வரவேற்பு தரப்பட்டது. ஆல்காட் 'அமெரிக்கப் பண்டியதர்' என்று பெயர் சூட்டப்பட்டார்.[14] சென்னையை அடுத்து திருநெல்வேலியிலும் தூத்துக்குடியிலும்தான் பழமையான கிளைகள் அச்சபைக்கு ஏற்பட்டன. இவர்களுக்கு முன் மனுநீதியை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த வில்லியம் ஜோன்ஸ், வடமொழி வல்லநரான மோனியர் வில்லியம்ஸ் ஆகியோர் பெயர்கள் பலமுறை பேசப்பட்டன. முதல் முறையாக "இந்தியா வேதப் பெருமை உடைய நாடு, இந்திய மதம் என்பது ஆரிய மதம், வடமொழி உயர்வானது" ஆகிய கருத்துக்கள் 'இந்திய தேசியம்' என்பதன் அடிப்படைகளாக உருவாக்கப்பட்டன.

தமிழ் நாட்டில் இவர்களுக்குக் கிடைத்த வரவேற்பினால் ൧882 இறுதியில் (டிசம்பர்) பிரம்மஞான சபையின் தலைமையகம் பம்பாயிலிருந்து சென்னைக்கு மாற்றப்பட்டது.[15] (மீண்டும் ൧882இல் ஆறு வாரத் தமிழகச் சுற்றுப் பயணம் செய்தார்.) சபையின் கொள்கைகளைப் பரப்ப மதுரை, திருச்சி, குண்டூர், பெல்லாரி ஆகிய இடங்களில் சமஸ்கிருதப் பள்ளிகள் தொடங்கப்பட்டன. இதன் சார்பு நிறுவனமாக 10 – 21 வயது வரை உள்ள இளைஞர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக (League of Honour) ஆரிய உயர் மதிப்புக் கழகம் என்ற அமைப்பும் தொடங்கப் பட்டது.[16] ൧884இல் சென்னையில், பச்சையப்பன் கல்லூரியில் ஆசிரியராக இருந்த சிவசங்கர பாந்தியா (Sivasankara Pandiah) என்ற குஜ

13. do p. 295
14. do p. 298
15. do p. 296
16. do p. 298

படிப்பகம்

www.padippakam.com



ராத்திப் பார்ப்பனர் 'இந்து மீட்சிக் கழகம்' (Hindu Revivalistic Society) என்ற அமைப்பையும் 1887இல் (Hindu Tract Society) "இந்து சிறுநூல் வெளியீட்டுக் கழகம்" என்ற அமைப்பையும் தொடங்கினார்.[17]

சிவசங்கர பாந்தியாவைப் பற்றி இங்கு சற்று விரிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும். சென்னை பச்சையப்பன் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றிய இவர் ஒரு குஜராத்திப் பார்ப்பனர். இந்து பத்திரிகை குடும்பத்தைச் சேர்ந்த ஜி. சுப்ரமணிய ஐயருக்கும் தெலுங்குப் பார்ப்பனரான அனந்தாச்சார்லுவுக்கும் நெருங்கிய நண்பர். அதன் விளைவாக இந்து தியாலஜிகல் கல்லூரி ஒன்றைத் தொடங்க முயன்று, திருவல்லிக்கேணி இந்து தியாலஜிகல் உயர் நிலைப் பள்ளியைத் தொடங்கி அதன் தலைமையாசிரியரானார். சென்னை கிறித்தவக் கல்லூரியில் இந்து–கிறிஸ்வதப் பூசலுக்குக் காரணமானார் என்று பச்சையப்பன் கல்லூரியிலிருந்து வெளியேற்றப்பட்டவர். 'கிறிஸ்தவக் கல்லூரி சச்சரவில் இவருக்குத் துணை நின்றவர் 'அனந்தாச்சார்லு.[18]

சிவசங்கர பாந்தியா தொடங்கிய இந்து சிறுநூல் வெளியீட்டுக் கழகத்தின் வெளியீடுகளிலிருந்து மேலும் சில செய்திகளைத் தெரிந்து கொள்ள முடிகிறது. 1887இல் சென்னையில் இருந்து வெளிவந்த 'ஆரிய ஜன பரிபாலனி' என்ற இதழும், சிதம்பரத்திலிருந்து சீனிவாச சாஸ்திரி என்பவரை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த 'பிரம்ம வித்யா' பத்திரிகையும் கிறித்தவர்களோடு திட்டமிட்ட ஒரு போராட்டத்தைத் தொடங்கி இருக்கின்றன. 'வேதாந்த விசாரணை சபை' என்ற பெயரிலும் இவர்கள் சில துண்டறிக்கைகளை வெளியிட்டிருக்கின்றனர்.

ஐரோப்பிய வடமொழி அறிஞரான மோனியர் வில்லியம்சும் Monier Williams) 1797இல் மனுநீதியை மொழிபெயர்த்த சர் வில்லியம் ஜோன்சும் (Sir William Jones) இந்த இந்துவாதிகளால் புகழப்படுகின்றனர். "21 பாஷைகளில் வல்லவரான சர் வில்லியம் ஜோன்ஸ்" என்பதாக இந்தப் பத்திரிகைகளில் குறிப்பிடப்படுகிறது. இந்து ஜெயபேரிகை என்ற பெயரில் 4 நூல்கள் இந்த சபையினரால் வெளியிடப்பட்டிருக்கின்றன. ஆரிய பெண்களுக்குக் கல்வி, கிறிஸ்தவர் மத திரியேகசுத்துவ ஆபாசம், பைபிளும் உலக சிருஷ்டியின் ஆபாசமும், 'பாதிரிமார் ஸ்கூல்களில் பெண்கள் படிக்கலாமா என்பன இவர்கள் வெளியிட்ட சிலநூல்களின் தலைப்புகள்.[19]

---

17. do p. 307
18. do p. 305-309
19. கிறிஸ்து மத கண்டனத் திரட்டு (18 நூல்களின் தொகுப்பு) முதல்

படிப்பகம்

www.padippakam.com



யாழ்ப்பாணம் நல்லூர் ஆறுமுக நாவலரின் மாணவரான காசிவாசி செந்தி நாதய்யர் என்ற சைவரும் சபையினரின் பிடியில் அகப்பட்டு இருக்கிறார். விவிலியச் சூத்திதம், விவிலியச் சூத்சித கண்டன திக்காரம் ஆகிய இரு நூல்களும் அவரால் எழுதப்பட்டு அக்கழகத்தவரால் வெளியிடப்பட்டிருக்கின்றன. 'இயேசு கிறிஸ்துவும் கடவுளா?' என்ற சிறுநூல் 15 ஆயிரம் பிரிதிகள் விற்பனையாகி மறுபதிப்புச் செய்யப்பட்டிருக்கிறது. ஆரிய மதம், சூரிய தேசம், ஆரிய மதாபிமானி என்ற சொல்லாடல்கள் மிகச்சரளமாக பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆர். எஸ். எஸ். என்னும் மதவாத அமைப்புக்கு முன்னோடி அமைப்பினைப் போல் செயல்பட்ட இந்தக் கழகம், "இந்துத்துவம்" என்ற கோட்பாட்டையே இந்திய தேசியம் என்ற பெயரில் தமிழ்நாட்டில் வெற்றிகரமாகப் பரப்பியிருக்கிறது. இந்தக் கழகத்தின் வெளியீடுகளுக்கு எதிராக நெல்லை மாவட்ட பிராட்டஸ்டண்டு கிறித்துவர்கள், 'உண்மை தேடுவார் கழகம்' (Truth Seekers Society) என்ற பெயரிலும் அரக்கோணத்தில் இருந்து எஸ். பி. எஸ். என்ற அமைப்பின் பெயரிலும் சில நூல்களை வெளியிட்டனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்த கத்தோலிக்க கிறிஸ்தவத் திருச்சபையாரும் இதே காலத்தில் அங்குள்ள சைவர்களோடு ஒரு தத்துவச் சண்டையினை நிகழ்த்தியிருக்கிறார்கள். யாழ்ப்பாணத்துச் சைவ-கிறித்துவ கருத்து மோதல் இருதரப்பாலும் கல்வித்துறையின் நாகரிக வரம்புகளுக்குள்ளேயே நடத்தப்பட்டிருக்கிறது. 'இந்து சாதனம்', 'ஞானசித்தி' என்ற சைவ இதழ்களிலும், 'சத்யவேத பாதுகாவலன்' என்ற கிறித்துவ இதழிலும் இந்தக் கருத்துப் போராட்டம் நிகழ்ந்திருக்கிறது.

ஜி. சுப்பிரமணிய ஐயரும் அனந்தாச்சார்லுவும் சென்னை மகாஜன சபையினைத் தொடங்கியவர்கள் (1884). அதன் சார்பாளர்களாக புனேயில் நடந்த முதல் காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொண்டவர்கள்.[20] இவர்கள் இருவரையும் சேர்த்து முதல்

---

பாகம் மதராஸ் ரிப்பன் அச்சியதிந்ர சாலை 1915. (1883 முதல் வெளிவந்த சிறு நூல்கள் மறுபதிப்புச் செயயப்பட்டு இத்திரட்டு நூலாகத் தொகுக்கப்பட்டுள்ளன.)

20. கோபாலமேனன் நூலை மேற்கோள் காட்டி முரசொலி மாறன் (திராவிட இயக்க வரலாறு ப. 67) தரும் தகவல் சரியானதன்று. நம் பெருமாள் செட்டியார் என்பவருக்குப் பதிலாக சிங்கார வேலு முதலியாரும் மற்றுமிரு பார்ப்பனரும் சேர்க்கப்பட்டனர். R.S., Op. Cit., p. 247

படிப்பகம்

www.padippakam.com



காங்கிரஸ் மாநாட்டில் சென்னை மகாஜன சபைப் பிரதிநிதியாகக் கலந்து கொண்ட 8 பேரில் 6 பேர் பார்ப்பனர். அனந்தாச்சார்லு 'ராவ் பகதூர்' பட்டம் பெற்றவர். 1890 கல்கத்தா காங்கிரஸ் மாநாட்டில் கௌரவிக்கப்பட்டவர். இந்து பத்திரிகையின் இயக்குநர்களில் ஒருவர்.[21] சென்னை கிறித்தவக் கல்லூரியில் மதமாற்றம் தொடர்பாக நடந்த கலவரத்தில் நீக்கப்பட்ட இந்து மாணவர்களை மீண்டும் கல்லூரியில் சேர்க்கப் பேச்சு வார்த்தை நடத்தியவர்.

சுருக்கமாகச் சொல்வதானால் தமிழ்நாட்டில் காங்கிரஸ் இயக்கத்தின் தோற்றுவாய் என்பது வேதப் பெருமை, வடமொழி உயர்வு, பார்ப்பனர்கள், பார்ப்பனர்களின் இந்துப் பத்திரிகை ஆகிய அடிப்படைகளிலேயே அமைந்தது.

இதற்கு எதிரடையான நிகழ்வுகளும் இதே காலத்தில் நிகழ்ந்தன. ஆல்காட்டும், பிளாவட்ஸ்கி அம்மையாரும் திருநெல்வேலியில் பார்ப்பனர்களிடம் பெற்ற ஆதரவு, சைவ வேளாளர்களை எதிரிடையாகச் செயல்பட வைத்தது. 1883இல் தூத்துக்குடிச் சைவ சபையும் 1886இல் பாளையங்கோட்டைச் சைவ சபையும் தொடங்கப் பெற்றன. பிரம்மசமாஜியாக இருந்த மனோன்மணியம் சுந்தரம்பிள்ளை திருவனந்தபுரம் சைவ சபையைத் தொடங்கக் காரணமானவர்களில் ஒருவரானார். 'திராவிடம்' என்ற சொல்லோடு, 'வடமொழி செத்த மொழி, தமிழ் வாழும் மொழி' என்ற கருத்தையும் முன்வைத்தார்.

தமிழின் மேன்மையை எடுத்துச் சொல்லவும் சைவத்தின் சிறப்பினைப் பேசவும் சி.வை. தாமோதரம் பிள்ளை, கனகசபைப் பிள்ளை, ஜே. எம். நல்லுசாமிப் பிள்ளை, பின்னர் ஞானியார் அடிகள், மறைமலை அடிகள் என 'இந்திய தேசியத்துக்கு' வெளியில் தமிழ் அறிவாளிகள் கூட்டம் ஒன்று தோன்றவும் வளரவும் அவரது முயற்சிகள் ஊற்றுக்காலாய் அமைந்தன.

1887 வரை தமிழ்நாட்டில் முசுலீம்கள் காங்கிரஸ் இயக்கத்தின் மீது நம்பிக்கை கொள்ளவில்லை. 1887இல் சென்னை காங்கிரஸ் மாநாட்டு வரவேற்புக் குழுத் தலைவர் ரெங்கைய நாயுடு (இவர் இந்து பத்திரிகை நிறுவனத் தலைவராகவும் சில காலம் இருந்தவர்) முசுலீம்கள் காங்கிரசுக்கு வெளியில் நிற்பதைக் குறிப்பிட்டு வருந்துகிறார்.[22]

---

21. A Hundred years THE HINDU, p. 97 & 154
22. R.S. Op. Cit., p. 287

படிப்பகம்

www.padippakam.com



பார்ப்பனர், சைவ வேளாளர், இசுலாமியரை அடுத்து தாழ்த்தப்பட்ட வகுப்பினர் இக்கால கட்டத்தில் உயிர்ப்பும் விழிப்பும் உடைய சக்தியாக உருவாயினர்.

1885இல் அயோத்திதாசப் பண்டிதர் 'திராவிடம்' என்ற சொல்லை சமூக அரசியல் தளத்தில் வலிமையாக முன் வைத்துப் 'பார்ப்பனரல்லாதார்' என்ற அடையாளத்தை உருவாக்கினார். திராவிட பாண்டியன் இதழாசிரியர் ரெ. ஜான் ரத்தினம். 'பறையர் மகாஜன சபை' என்ற அமைப்பும் 1891 இல் உருவாயிற்று.[23] பண்டிதரின் மைத்துனர் ரெட்டைமலை சீனிவாசன் 'பறையன்' என்ற பெயரில் 1893இல் இதழ் ஒன்றைத் தொடங்கினார். இவரே பின்னர் டி. எம். நாயருக்கும், அம்பேத்கருக்கும் உதவியாக நின்றவர். 'தாழ்த்தப்பட்ட மக்களின் விடுதலை தேசிய இயக்கத்திற்கு வெளியே உள்ளது' எனக் கருத்துரைத்தவர். சென்னை சட்ட சபையில் உறுப்பினராக இருந்து, தாழ்த்தப்பட்ட மக்கள் பொதுச் சாலைகளில் நடப்பதற்கான உரிமையினைப் பெற்று, தன் மனைவியின் கல்லறைக் கல்வெட்டிலும் அதனை இடம் பெறச் செய்தவர்.

இவ்வாறு இருபதாம் நூற்றாண்டின் தொடக்கம் வரை, 'இந்தியத் தேசியம்' என்பது தமிழ்நாட்டில் பெருவாரியான மக்களையும், பார்ப்பனரல்லாத அறிவாளிகளையும் தன்னுள் ஈர்த்துக் கொள்ள இயலாமல் தடுமாறி நிற்பதைப் பார்க்கிறோம்.

இந்தியத் தேசியம் என அடையாளம் காட்டப்பட்ட மொழி, நிலம், பண்பாடு ஆகியவை தமக்குரியவை அல்ல என எண்ணும் போக்கும், பார்ப்பனர் மீதான நம்பிக்கையின்மையும் தமிழ் நாட்டுப் பார்ப்பனரல்லாத மக்களிடத்திலே படிந்திருந்ததே அதற்குக் காரணமாகும். ஆனால் இந்திய தேசியத்திற்கு மாற்றான ஒரு கருத்தியலை வடித்தெடுப்பதற்கு இருபதாம் நூற்றாண்டின் தொடக்கப் பகுதிவரை அவர்கள் காத்திருக்க வேண்டியதாயிற்று.

— கட்டுரையின் நிறைவுப் பகுதி அடுத்த இதழில் —

23. எக்ஸ்ரே. ந.அ. கருணாகரன், தென்னிந்திய நல உரிமைச் சங்கமும் அதன் நாளிதழ்களும் (நீதிக் கட்சி பவள விழா மலர், 1992). சென்னை ப.115– 119.

படிப்பகம்

www.padippakam.com



# தென்திசை முளைத்த செஞ்சுடர்

**பணிவான போக்கு முடிந்து எதிர்ப்புணர்ச்சி தொடங்கு மிடத்தை அதிகாரத்தில் உள்ளவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். அப்படிப்பட்ட மனிதர்களைக் கொண்ட அரசாங்கம் ஒன்றே எங்களுக்கு அமைய வேண்டும்.**

**— டாக்டர் அம்பேத்கர்**

தமிழகத்தின் தென்மாவட்டங்களில்— குறிப்பாக இராஜபாளையம் வட்டத்தில் 'சாதிக்கலவரம்' உச்சத்தில் இருந்தபோது, இருப்பு கொள்ள முடியாத பதற்றத்தோடு எங்களில் சிலர் கலவரம் பற்றிய பாதிப்புகளையறிய ஒட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமியைத் தொடர்பு கொண்டோம். அவரோடு நாங்கள் பேசிக்கொண்டிருக்கும்போதே, மங்காபுரத்தில் தேவேந்திரகுல வேளாளரின் 250 வீடுகள் தீவைத்துக் கொளுத்தப்படுவதும், கால்நடைகள் வெட்டிக் கொல்லப்படுவதும், மக்கள் திக்கற்று தவிப்பதும் பற்றிய பதற்றமான தகவல்கள் தொலைபேசி மூலம் தொடர்ந்து வந்து கொண்டிருந்தன. (தகவல் உண்மை என்பதை மறுநாள் செய்தித்தாள்கள் உறுதிப்படுத்தின.) இந்நிலையில் பாதிக்கப்பட்ட ஊர்களை நாங்கள் பார்வையிட்டு, அமைதிக்கான சாத்தியப்பாடுகளை அறிந்து வரத் தீர்மானித்தோம். வன்கொடுமைக்காட்படும் மக்களின் பிரதிநிதியாக டாக்டர் கிருஷ்ணசாமியை நாங்கள் தொடர்பு கொண்ட அளவிலேயே 'இது அரசுக்கெதிரானதாகக் கணிக்கப்படும் செயல்' என்னும் கருத்தில் கலைஞரை நேசிக்கும் ஒரு கவிஞர் எங்கள் குழுவில் பங்கேற்க மறுத்து விட்டார். கலைஞர் அரசின் நியாயமான 'சலுகை'யைப் பெற்ற ஒரு படைப்பாளி பங்கேற்பதாகச் சொல்லிப் பின்னர் தவிர்த்துவிட்டார். தமிழ்நாட்டு அரசியல் களத்தில் இப்படியொரு சமூக உணர்வு கட்டமைக்கப்பட்டுள்ளமைக்கு அவர்களால் வேறு என்னதான் செய்துவிட முடியும்!

ஜூன் 15, 16 ஆகிய இரு நாள்களில் எங்கள் குழு[1] பாதிக்கப்பட்ட ஊர்களுக்குச் சென்று இரு

1. குழுவினர்: எஸ்.வி. ராஜதுரை, இன்குலாப், அ. மார்க்ஸ், கவிதாசரண், சரசுவதி, வீ. அரசு, ராணி

www.padippakam.com



தரப்பு மக்களையும் சந்தித்தது. பரிந்துரைகள் அடங்கிய ஓர் அறிக்கையைத் தயார் செய்து அரசுக்கும் தகவல் ஒலிப்பரப்பு சாதனங்களுக்கும் அனுப்பி வைத்தது. மதுரையிலும் சென்னையிலும் செய்தியாளர் கூட்டம் கூட்டி விவரங்களை வெளியிட்டது. செய்தித்தாள்களும் அவற்றை வெளியிட்டு ஒத்துழைப்பு நல்கின.

இந்தப் பயணத்தில் என்னைப் பாதித்த, என் கண்ணிலும் கருத்திலும் இன்னும் அதிர்வலைகளை எழுப்பிக் கொண்டிருக்கும் காட்சிகளும் பேச்சுகளும் எனக்கு முக்கியமாகப் படுகின்றன.

கூரைகள் எரிந்து கருகிப்போன சுவர்களும், ஓடுகள் உடைக்கப்பட்டுச் சிதைந்த வீடுகளும், தீயில் உருக்குலைந்து கிடந்த சைக்கிள்களும், மாட்டுவண்டிகளும், அடுப்பிலிருந்து வடித்து இறக்காத சோற்றுப் பானைகளும், சிதறிக்கிடந்த பண்ட பாத்திரங்களுமாக எல்லாம் 'கிடந்தது கிடந்தபடி' சாம்பல் நிரம்பிய சந்து சாலைகளை மாலைகளாய் அணிந்து விரிந்த அந்த இருப்பிடங்களைப் பார்க்கப் பார்க்க அவை ஏதோ நிகழ் காலத்துக்குச் சம்பந்தமற்றவை போலவும், அகழ்வாய்வில் கண்டெடுக்கப்பட்ட இறந்த கால எச்சம் போலவும் உறைந்து கிடந்தன. அங்கங்கே அப்போதும் புகைந்து கொண்டிருந்த வைக்கோல் படப்புகளும் குப்பைகளும்தாம் அவை இன்னும் நிணநீர் ஒழுகிக் கொண்டிருக்கும் பச்சைப் புண்கள்தான் என்பதை உணர்வுள்ளவனின் செவிப்பறை கிழியும்படியான மௌனத்தில் மொழிந்தன.

மங்காபுரத்தில் ஒரு பதினேழு வயது மறவர்குல மாணவி சொன்ன சொல்: "இந்தப் பள்ளப் பயலுவள அடங்கியிருக்கச் சொல்லுங்க. இல்லன்னா அடக்கிப்புடுவம். இவனுவுளுக்கு இவ்வளவு திமிரு இருந்தா எங்களுக்கு எவ்வளவு இருக்கும்?"

எங்கள் அறிக்கையின் பரிந்துரைகளில் ஒன்று: "பள்ளிகளில் / கல்லூரிகளில் AIDS க்கு எதிரான விழிப்புணர்வுக்காக ஏராளமான காலமும் பொருளும் செலவிடப்படுகிறது. நமது சமூகத்தில் புரையோடிப்போயுள்ள சாதியம், தீண்டாமை முதலியன குறித்து பள்ளி / கல்லூரி மட்டங்களில் விழிப்புணர் செயல்பாடுகள் மேற்கொள்வது அவசியம்."

செந்தட்டியார்புரம் முழுதும் தேவேந்திரகுல வேளார்களே வாழும் ஊர். இரண்டாயிரம் தலைக்கட்டு. மறவர்களின் கண்களை உறுத்தும்படியான வெளிச்சம் கொண்ட ஊர். ஒருநாள்

---

செந்தாமரை, வித்யாசாகர், விடுதலைராசேந்திரன், கனல்மைந்தன் அறிவுமதி, ஐ.தேவசகாயம், ஷீலு, டி.எஸ்.எஸ். மணி, வீரசேகரன்.

படிப்பகம்

www.padippakam.com



அதிகாலை 4½ மணியளவில் போலீஸ் I G விஜய்குமார் ஒரு பெரிய போலீஸ் படையுடன் வந்து, ஊரைச் சுற்றி வளைத்து முற்றுகையிட்டு, ஆண்களையும் பெண்களையும் தெருவுக்கு இழுத்து வந்து கொலைவெறித் தாக்குதல் நடத்தியுள்ளார். 'அந்நியர் புக முடியாத அரண்' என்னும் ஊர்ப் பெருமையைத் தகர்ப்பதற்கான தாக்குதல் அது. செம்மாந்திருந்த மக்களை அச்சத்தின் பிடியில் சிக்க வைக்க நடந்த அதிரடித் தாக்குதல் என்பதன்றி வேறெந்தக் காரணமும் இல்லை. ஆண்கள் பலரின் முதுகுப்பட்டை உரிந்து கிடந்தது. பெண்கள் மீதான வன்முறை வக்கிரத்தின் உச்சம். ''ஐயா, எங்களக் கட்டுனவுங்கக் கிட்டக்கூடக் காட்ட முடியாத எடத்திலல்லாம் எங்கள அடிச்சுக் காயம் பண்ணியிருக்காங் கய்யா,'' என்று குமுறியழுத பெண்மணியின் நீராடிய கண்கள் இன்னும் நெஞ்சைச் சுடுகின்றன. கைதுகளும் பொய் வழக்குகளுமாக எருமை புகுந்த குட்டை மாதிரி ஊரைக் கலக்கிவிட்டிருக்கிறார் அந்த அதிகாரி.

தாழ்த்தப்பட்ட மக்களை யார் வேண்டுமானாலும் வீடு புகுந்து தாக்கலாம். தாக்கப்பட்டவர்கள் தங்கள் அவமானங்களை விழுங்கிக்கொண்டு தாக்கியவனின் தயவில் பிழைத்திருக்க வேண்டும். இதுதான் எசமானர்களின் வாலாயமான கணக்கு. அந்தக் கணக்கு இப்போது பொய்த்துக் கொண்டிருப்பதைத் தாக்குகிறவன் இன்னும் நம்பத் தயாராயில்லை. கலவரம் நீடிப்பதற்கான காரணங்களில் இதுவும் ஒன்று.

இந்த ஐ. ஜி. விஜய்குமாரையும் மாவட்ட ஆட்சியர் ராஜகோபாலையும் மறவர்கள் பாராட்டுவதும் தேவேந்திரர்கள் குற்றம் சொல்வதும் இவர்கள் நியாயத்தின் பக்கம் இல்லை எனபதற்கான எளிய சான்று. மங்காபுரத்து மக்களுக்குப் பாதுகாப்பளிக்கக் கடமைப்பட்ட மாவட்ட ஆட்சியர் ராஜகோபால் கடமையிலிருந்து தவறியது மட்டுமல்லாமல், மக்களை அங்கிருந்து இடம் பெயர்ந்து போகும்படி வலுக்கட்டாயப் படுத்தியும் இருக்கிறார். இவர் யுனிசெஃப் கூட்டத்தில் இந்து தர்மம் (வர்ணாசிரமம்) பற்றி வானளாவப் புகழ்ந்தவர். சுந்தரனார் பல்கலைக் கழகத் துணைவேந்தர் வசந்திதேவி இவரது கருத்துகளை வன்மையாக மறுத்து எதிர் வழக்காடியுள்ளார். பள்ளர்களுக்குப் பாதுகாப்பளிப்பதை அவரது இந்து தர்மம 'பாவப்' பட்டியலில் சேர்த்திருக்கலாம். சென்னையில் நடந்த மாவட்ட ஆட்சியர் மாநாட்டில் இவர் நிகழ்த்திய 'உடுக்கடிக்கும்' சொற்பொழிவை நாங்கள் மதுரைக்குத் திரும்பியிருந்த 17-6-97 ஆம் நாள் முரசொலியில் கட்சியின் முன்னணித் தலைவருக்குள்ள முக்கியத்துவத்தோடு ரொம்ப விஸ்தாரமாக வெளி

படிப்பகம்

www.padippakam.com



யிட்டிருந்தார்கள். "போன வருசம் கலவரம் நடந்தபோது ஜெய லலிதாவே நேர்ல வந்து பாத்தாங்க. ஆனா, இந்த வருஷம் கலைஞரு இந்தப் பக்கமே தலைகாட்ல" என்று புழுங்கிக் கொண் டிருந்த மக்களுக்கு, அவர்கள் எந்த ராஜகோபாலை எதிர்த்து உண்ணாவிரதமும் தர்ணாவும் நடத்தி அவரின் மாற்றலைக் கோரி னார்களோ– அதே ராஜகோபாலின் பேச்சை முரசொலி முதன் மைப்படுத்தியிருந்தது அவர்கள் கோரிக்கை மீதான அரசின் வன் முறையாகப்பட்டது. (அடுத்து ஒரு மாதத்தில் ராஜகோபால் அங் கிருந்து மாற்றப்பட்டதை அரசு தனக்குகந்த வகையில் விளக்கிக் கொள்ளலாம்.)

"ஒவ்வொரு கோடையிலயுந்தான் அப்பப்போ கலவரம் வெடிக் குது. அடுத்த விதைப்பு வந்தாச்சுன்னா தானா அடங்கிப் போயி டும். அவனவன் காடுகரையப் பாக்கப் போயிடுவான். ஆனா இந்த வருஷம் மட்டும் பள்ளபயலுவளுக்கு என்ன வந்திரிச்சாம், கெடந்து திமுர்றானுங்க?"

இது ஒரு வயதான மறவரின் மதிப்பீடு.

தென்மாவட்டங்களில் சாதிக்கலவரம் ஒன்றும் புதிய விஷய மல்ல; நூற்றாண்டுகள் வரலாறு கொண்டது. 1869இல் நடந்த கலவரத்தில் நூற்றுக் கணக்கானோர் கொல்லப்பட்டார்களாம். எப்போதும் முதலாகவும் மிகுதியாகவும் கொல்லப்படுகிறவர்கள் சாதிக்கிளைத்தவர்கள்தாம். ஆனால் இப்போது அந்தக் கணக்கு மாறியிருக்கிறது. காரணமும் தெரிகிறது. ஆனால் நம்பத் தயங் குகிறது ஆணவ மனம். வேலையில்லாத காலங்களில் சீண்டி விளையாடி சாதிக்கலவரத்திற்கு வித்திட்டுப் பின்னர் தன் மேலாண் மையைக் கூடுதல் கொலைகள் மூலம் நிலைநாட்டி நெஞ்சு நிமிர்த் திய மனமல்லவா!

ராஜபாளையம் காவல் நிலையத்தில் DIG தர்மராஜ் சொன் னார் "அரசாங்கம் அளிக்கும் உதவிகளை இவர்கள் பணிவோ டும் நன்றியோடும் பெற்றுக்கொள்ள வேண்டியதுதானே. அதை விட்டு எதற்குப் போராட்டம் நடத்துகின்றனர்?"

இதை ஒரு காவல்துறை அதிகாரியின் தனிப்பட்ட கருத்தாக நினைத்துவிடக் கூடாது. இந்த சமூகத்தில் விழிப்புற்ற தாழ்த் தப்பட்டவர்களைத் தவிர்த்த ஒட்டு மொத்த மக்களுடைய கருத் துமே இதுதான். தாழ்த்தப்பட்டவர்கள் எப்போதும் பணிவுள்ள வர்களாய், தாங்கள் பெறும் 'உதவி'களுக்கு நன்றியுள்ளவர்களாய் இருக்கவேண்டும் என்பதே எல்லாருடைய எதிர்பார்ப்பும். அதா வது, விசுவாசமுள்ள வேலைக்காரார்களாகவே – அதுகூடத் தவறு–

படிப்பகம்

www.padippakam.com



வாலைக் குழைத்துக் கொண்டு நிற்கும் நன்றியுள்ள நாய்களாவே அவர்கள் எதிர்பார்க்கப்படுகிறார்கள். நாயோடு கொஞ்சி விளையாடுவதும், அதை என் படுக்கையில் விட்டுக்கொள்வதும் எனக்குப் பிரச்சினையே இல்லை. ஏனெனில் எனக்குப் பிடிக்காதபோது இழுத்துக் கொண்டுபோய் சங்கிலியில் பிணைத்து விடலாம்தானே. எனக்கான வேலையை நாள் முழுதும் செய்து முடித்து, பொழுதடங்கியதும் தனக்கான கூலியைப்பெற தடித்தனமாய் என் முன்னால் வந்து விறைத்துக்கொண்டு நின்று என்னை எரிச்சல் படுத்திவிடாமல் பக்குவமாய் ஒதுங்கி, தலையைச் சொறிந்து, அசடனாய்ச் சிரித்து, பணிவாய்க் குழைந்து நின்றால், நான் உள்ளூர மகிழ்ந்து, ஒரு கண்ணியமான கனவானின் கருணையோடு அவனுக்குச் 'சேர வேண்டியதைக்' கொடுத்து, "என்னலே, நீ பாட்டுக்குச் சாராயக்கடை பாக்கப் போயிடாதே. ஓம் பொட்டாட்டி புள்ளைகளைக் காப்பாத்தறது ஓம் பொறுப்புலே" என்று வெகு கரிசனத்தோடு அறிவுரை வழங்கி அரவணைத்துக் கொள்வேன். இந்த நீண்ட அரவணைப்புக் கண்காணிப்பில் அவன் வேலைக்கான கூலியை நான் எங்கே கொடுத்தேன்! அவன் காட்டிய பணிவுக்கு மட்டுந்தான் 'படியளந்தேன்!' இது நான் அவனுக்குச் செய்யும் உதவி! இந்த உதவிக்கு கணக்குண்டு; வழக்குண்டு; எதிர்பார்ப்புண்டு. அவன் உணர்வுக்கும் பணிவுக்கும் ஒரு இழவும் இல்லை. எல்லாம் காற்றோடு போனதுதான். அரசு தரும் 'உதவி' என்பதும் ஒருவகையில் இப்படித்தான் என்பதோடு 'அரசுக்கு இவன் ஒரு நஷடம்' என்று அந்நியப்படுத்தவும்தான். 'ஆண்டான் – அடிமை' எனும் உறவு, கால ஓட்டத்திற்கேற்றபடி சொல்லாட்சியிலும் அமலாக்கத்திலும் சில மாற்றங்களைப் பெற்றிருக்கலாமே தவிர, மனோபாவத்தில் அப்படியேதான் கிணற்றில் போட்ட கல் மாதிரி பிசுக்கேறிக் கிடக்கிறது. அடக்குகிறவனின் சந்தோஷமே அடங்குகிறவனின் கதிமோட்சம் என்பதில் ஐயத்திற்கிடமில்லாதவரை காலம் பொற்காலம்தான். கடவுள் கருணையுள்ளவர்தான். நம் வரலாற்றின் பொற்காலங்கள் யாவும் வேறெப்படி வகைப்படுத்தப்பட்டன என்கிறீர்கள்! தலித்துகளின் வாழ்வுக்கும் வளமைக்கும் தலித் அல்லாதவர்கள் தர்மகர்த்தாக்களாக இருக்கவே விரும்புகிறார்கள். காந்தியடிகள் கண்ட கனவும் அதுதான். அவர் மகாத்மாவாயிற்றே. மனிதர்களில் மகாத்மாக்கள் எங்கும் சுண்டைக்காய்கள் மாதிரி கொட்டிக்கிடப்பார்கள் என்று அவர் நம்பியிருக்கலாம். ஆனால் தர்மகர்த்தாக்களுக்கு எப்போதும் பிச்சைக்காரர்களே தேவை. அப்போதுதானே அவர்களுக்கு ஒரு கையால் தானம் வழங்கலாம்; மறு கையால் அவர்களிடமிருந்து அதைத் தட்டியும் பறிக்கலாம். இந்த ஐம்பது ஆண்டுகளில்-விந்து தானத்தைக்கூட விரும்பி ஏற்கும் இந்து தர்மத்தைப் போற்றி மகி

படிப்பகம்

www.padippakam.com

## அவைதிகப் பாரம்பரியத்தில்

# திராவிட இயக்கங்கள்

### —பொ. வேல்சாமி—

பகுதி ஒன்று

**1**

"இந்தியா என்பது மதங்களின் நாடு ஆகும்" என்கிற பேராசிரியர் புளும் பீல்டின் மேற்கோளில் ஒரு சிறிய திருத்தத்தைச் செய்து, "இந்தியா என்பது ஒன்றுடன் ஒன்று போரிடும் மதங்களின் நாடு" என்று அவர் கூறியிருந்தால் அது மேலும் அதிக ஆழமான, உண்மையான கருத்தாக இருந்திருக்கும். உண்மையில் இந்தியாவின் வரலாற்றில் மதத்திற்கு இருந்துள்ளது போன்ற பெரும் பங்கு வேறு எந்த நாட்டின் வரலாற்றிலும் இருக்கவில்லை. "இந்தியாவின் வரலாறு இரண்டு மதங்களுக்கிடையே – புத்த மதத்திற்கும் பிராமணியத்திற்கும் நடந்த கடும் போராட்டமன்றி வேறல்ல" (அம்பேத்கர் பேச்சும் எழுத்தும், தொகுதி-7, பக். 160) என்று கூறுவார் டாக்டர் அம்பேத்கர். தொடர்ந்து எழுதும் போது பிராமணியத்திற்கும் புத்த மதத்திற்கும் இடையே நடந்த ஆதிக்கப் போராட்டமே இந்திய வரலாறு என்று குறிப்பிடுவார். இந்தியத் துணைக்கண்டத்தின் உட்கூறுகளில் ஒன்றாக உள்ள தமிழ்நாட்டிற்கு இக்கூற்றைப் பொருத்தும் போது புத்த மதம் என்பதோடு சமணத்தையும் நாம் இணைத்துக் கொள்ள வேண்டியதாக இருக்கிறது. பார்ப்பனியம் என்பதற்குப் பதிலாக சைவ, வைணவ மதங்கள் என்று சொல்வது மேலும் பொருத்தமாக இருக்கும். குறிப்பாக சைவ வேளாள மதத்திற்கும் சமணத்திற்கும் இடைக் காலத்தில் நடந்த பெரும் போரை நாம் அறிவோம். தொகுத்துச் சுருக்கிச் சொல்வதானால் பார்ப்பனியம் – சைவம் – வைணவம் என்பதெல்லாம் ஒரு பக்கமாகவும், பௌத்தம் – சமணம் – ஆசீவகம் முதலான மதங்கள் மறுபக்கமாகவும் நின்று போரிட்டுக் கொண்ட வரலாறுகளாகவே இந்திய துணைக்கண்டத்தின் வரலாறுகள் அனைத்தும் அமைந்துள்ளன.

இந்திய தத்துவ ஞானிகள் அனைவரையும் இருபெரும் பிரிவினராகப் பிரிப்பது வழக்கம். வேத உபநிடதங்களில் கூறப்பட்டவற்றை சரியென ஒப்புக்கொள்வோர். மற்ற பிரிவினர் அவற்றை சரியென ஒப்புக்கொள்ளாதோர். வேதத்தை ஒப்புக்கொள்வோரை

படிப்பகம்

www.padippakam.com



வைதிகர் என்ற சொல்லாலும், ஒப்புக்கொள்ளாதோரை அவைதிகர் என்ற சொல்லாலும் குறிப்பிடும் மரபு உண்டு. (கி. லெக்ஷ்மணன், இந்திய தத்துவ ஞானம், பக். 4, 1987) உலகாயதர், சமணர், பௌத்தர் ஆகிய மூவருமே அவைதிகர் எனப்படும் பிரிவைச் சேர்ந்தவர். வைதிகருள் சாங்கியர், யோக மதத்தினர், நையாயிகர், மீமாம்சகர், வேதாந்திகள், சித்தாந்திகள் என பல உட்பிரிவினர் இடம் பெறுவர்.

மேற்குறிப்பிட்ட இரு தொகுதி மதங்களையும் அகச் சமயங்கள் எனவும் புறச் சமயங்கள் எனவும் அழைக்கிற வழக்கம் ஒன்று இருந்ததையும் நாம் அறிவோம். எந்த அடிப்படையில் சைவம் வைணவம் முதலியன அகச் சமயங்களாகவும், பௌத்தமும், சமணமும் புறச் சமயங்களாகவும் பெயரிடப்பட்டன? நான்கு வேதங்களையும் அவற்றின் அடியாகத் தோன்றிய உபநிடதங்களையும் பிரமாணமாக ஏற்றுக்கொண்டவை அகச் சமயங்கள் எனவும், அவ்வாறு ஏற்றுக் கொள்ள மறுத்தவற்றை புறச் சமயங்கள் எனவும் பெயரிட்டனர். இன்றைய மொழியில் சொல்வதானால் நான்கு வேதங்கள் எனும் மீப்பெருங்கதையாடல்களையும்(grand narratives) உபநிடதங்களாகிய பெருங்கதையாடல்களையும் ஏற்றுக் கொண்டவை வைதிக சமயங்கள். இப்பெரும் கதையாடல்களுக்கு எதிரான பெரும் போராட்டம் ஒன்றை நடத்தியவை அவைதிகப் புறச் சமயங்கள் எனவும் அழைக்கப்பட்டன. பின்னாளில் வரலாற்றைக் கட்டமைக்கும் வாய்ப்புப் பெற்றவர்களாக இருந்வர்கள் வைதிக சமயத்தைச் சார்ந்தவர்கள்தான் என்பதற்கு வைதிக சமயங்களுக்கு அகச் சமயங்கள் எனவும் அவைதிக சமயங்களுக்கு புறச்சமயங்கள் எனவும் பெயரிடப்பட்டதே தக்க சான்றாகும். எனவே அம்பேத்கரின் கருத்தைக் கீழ்க்கண்டவாறு நாம் சுருக்கிச் சொல்லலாம்: இந்தியாவின் வரலாறென்பது வைதிகத்திற்கும் அவைதிகத்திற்கும் நடந்த போராட்டத்தின் வரலாறே ஆகும்.

## 2

வேதங்களைப் பிரமாணமாகக் கொள்வது என்பது தவிர வேறு எந்தெந்த அம்சங்களில் வைதிகத்திற்கும் அவைதிகத்திற்கும் இடையிலான வேறுபாடுகளைக் கோடிட முடியும்? மேலோட்டமாகப் பார்க்கும்போது நமக்குத் தோன்றுகிற முதலாவது முக்கிய வேறுபாடு கடவுள் தன்மை பற்றியதாக இருக்கிறது. ''பௌத்தத்தைத் தோற்றுவித்த புத்தரும், சமணத்தை நிறுவிய மகாவீரரும் முழுமையான கடவுள் மறுப்பாளர்கள் / பொருள் முதல் வாதிகள் இல்லையாயினும் கடவுளைப் புறக்கணித்தனர்'' (A.L. Basham,

படிப்பகம்

www.padippakam.com



The wonder that was India, P. 298). கடவுளை குறிப்பாக இந்துக் கடவுளர்களை மறுக்க வந்த அடுத்த இரண்டாயிரம் ஆண்டு கால எதிர்ப்பாளர்கள் பலருக்கும் கடவுளை மறுக்கும் நோக்கில் விளக்கமளிக்க வாய்ப்பளிக்கக் கூடியதாக புத்த, சமண கதையாடல்கள் அமைந்தன. பௌத்த வணக்கத்தின் அடிப்படையாக உள்ள புகழ் பெற்ற முழக்கங்களாகிய

புத்தம் சரணம் கச்சாமி
தர்மம் சரணம் கச்சாமி
சங்கம் சரணம் கச்சாமி

என்பதற்கு நம் காலத்து புகழ் பெற்ற கடவுள் மறுப்பாளராகிய பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் அளிக்கும் விளக்கத்தைப் பாருங்கள்: தலைவனுக்குக் கீழ்ப்படிதல், கொள்கைக்குக் கீழ்ப்படிதல், அமைப்புக்குக் கீழ்ப்படிதல் என்கிற சமகாலத்திய கட்சி/ அமைப்புக் கோட்பாடுகளைத் தாண்டி புத்த வணக்கத்திற்கு வேறு பொருள் இல்லை என விளக்கம் அளித்தார் பெரியார். (புத்தநெறி, தந்தை பெரியார், பக். 3, 4). தவிரவும் புத்தம் என்பது மதமல்ல எனவும், புத்தன் என்பவன் கடவுளல்ல; புத்தியைப் பயன்படுத்திச் சிந்திப்பவர்கள் எல்லோரும் புத்தனே எனவும் விளக்கமளித்தார் பெரியார். புத்தரின் தம்மம் என்பது அடிப்படையிலேயே மதம் என்ற கருத்தாக்கத்திலிருந்து எவ்வாறு வேறுபடுகிறதென்பதை டாக்டர் அம்பேத்கர் அவர்கள் விரிவாக விளக்கி உள்ளார். (டாக்டர் அம்பேத்கர், புத்தரும் அவர் தம்மமும், பக். 275—82)

இந்திய மண்ணில் தோன்றிய இடதுசாரி சிந்தனையாளர்கள் பலரும் புத்த–சமண–அவைதிக மரபை அனுதாபத்துடனும் நட்புடனும் அணுகி இருப்பதற்கு நிறைய சான்றுகள் உண்டு. ராகுல சாங்கிருத்தியாயன், கோசாம்பி என நிறைய பேரை இவ்வரிசையில் சொல்லலாம்.

(தமிழ்ச் சைவ மறுமலர்ச்சியின் தலைமகனான ஸ்ரீ–ல–ஸ்ரீ வேதாசலம் பிள்ளை எனும் மறைமலையடிகளார் சமணத்தை ஒரு மதமென ஏற்றுக்கொள்ளாததற்கு அவர் சொல்லும் ஒரே காரணம் கடவுள் தன்மை பற்றிய கருத்தாக்கம் சமணத்தில் இல்லைஎன்பதே.)

## 3

மேலோட்டமாகப் பார்க்கும் போது வைதிக மரபிற்கும் அவைதிக மரபிற்கும் இடையிலான அடுத்த முக்கிய வேறுபாடு வேள்விகள் மற்றும் பார்ப்பன மேலாண்மையை உறுதிப்படுத்தும் சடங்

படிப்பகம்

www.padippakam.com



குகளை ஏற்றலும் மறுத்தலுமாகும். புத்தர், மகாவீரர் இருவரும் சத்திரிய மரபில் வந்தவர்கள் என்பதும் இனக்குழுத் தலைவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கன. வேள்வியை எதிர்த்து அகிம்சை என்கிற கருத்தாக்கம் இவர்களால் முன் மொழியப்பட்டன. பார்ப்பன மேலாதிக்கம், வர்ணாச்சிரம தர்மம் ஆகியவைகள் இவர்களால் கண்டிக்கப்பட்டன. வருணத்தை ஏற்றுக் கொள்ளாத ஆதி பௌத்த சமணத்தின் பொற்காலம் எனச் சொல்லக் கூடிய கி. மு. 3இல் இருந்து கி. பி. 150 வரையிலான கால கட்டம் என்பது இந்திய வரலாற்றில் பார்ப்பனர்களின் மிகப் பரிதாபத்துக்குரிய இருண்ட காலம் என்பதை நாம் அறிவோம் (டாக்டர் அம்பேத்கர், பார்ப்பனியத்தின் வெற்றி, தொகுதி7).

## 4

மேலோட்டமாகவன்றி சற்று நுணுக்கமாகப் பார்க்கும் போது கண்ணில் படும் வேறுபாடுகளை இனி தொகுக்கத் தொடங்குவோம். பிறவி அடிப்படையிலான ஏற்றத் தாழ்வுகள், கர்மவினை முதலான கோட்பாடுகளை வைதிகம் மிக அடிப்படையாகக் கொள்வதையும் அவைதிகம் அதனை முற்றாக புறந்தள்ளுவதையும் காண முடியும். சங்கம் என்னும் பொதுமைக் கோட்பாடு அவைதிக மதத்தில் மட்டுமே காணக்கூடிய ஒன்று. பிறவி அடிப்படையில் ஏற்றத் தாழ்வுகளை மறுக்கக்கூடிய எண்ணற்ற சான்றுகளுள் சிலவாக– அப்பன் பெயர் தெரியாத ஆபுத்திரனின் கதையையும், கணிகையாக இருந்து ஒரு பார்ப்னனைத் திருமணம் செய்துகொண்டு குடும்ப வாழ்க்கையை மேற்கொள்கிற வாசவதத்தையின் கதையையும், கணிகையின் மகளாக இருந்து துறவியாய்ச் சிறந்த மணிமேகலையின் கதையையும் நாம் அவைதிக மரபில் மட்டுமே காண முடியும். அனைவருக்கும் கல்வி, பசிப்பிணி அகற்றுதல் (உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே) என்பதையும் தலையாய பணியாக அவைதிகம் மேற்கொண்டுள்ளது. சமணப் பள்ளிகள் என்பன பொது மக்கள் வந்து பயிலும் கல்வி நிறுவனங்களாக விளங்கின. பள்ளியிலுள்ள கூடங்களில் மாணவர்கள் பயிற்றுவிக்கப்படுதல் என்கிற உண்மையின் அடிப்படையிலேயே பள்ளிக்கூடங்கள் என்கிற சொல்லாக்கம் தமிழில் உருவானதென்பர் ஔவை துரைசாமி (கரந்தை கட்டுரைக் கோவை). “கல்வியென்னும் பல்கடல் பிழைத்தும்” எனவும் “கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள்” எனவும் முழக்கிய வைதிகப் பாரம்பரியத்தில் கல்வி என்னும் கருத்தாக்கம் பொதுக்கல்வியைக் குறித்ததல்ல. கல்வி என்பதன் மூலம் வேதக் கல்வியையே வைதிகப் பாரம்பரியம் பொருள் கொண்டது.

படிப்பகம்

www.padippakam.com



குருமுகமாக பிறவியில் உயர்ந்த பார்ப்பனர்களுக்கு மட்டுமே வேதங்கள் கற்பிக்கப்பட்டு வந்தன. குருமுகமாக கற்பிக்கப்படும் சொற்கள் பிழைபடாமல் இருத்தல் வேண்டி சிட்ஷா, வியாகரணம், சந்தஸ் முதலிய எழுத்து, சொல், மற்றும் செய்யுள் இலக்கணங்கள் வகுக்கப்பட்டன. வைதிகச் சொற்களின் பொருளை விளக்கும் நூற்கள் நிருத்தம் எனப்பட்டன (பி. எஸ். சுப்ரமணிய சாஸ்திரி, சங்க நூல்களும் வைதிக மார்க்கங்களும், பக். 14, 15)

எனவே வைதிக மார்க்கத்தில் உருவான இராஜராஜன், ராஜேந்திரன் முதலிய மாமன்னர்கள் நிறுவிய கல்விக்கூடங்கள் என்பன பார்ப்பனர்கள் மட்டுமே கற்கக்கூடிய வேதக் கல்விக்கூடங்கள் தான் என்பது நாம் அனைவரும் கருத்தில் இருத்த வேண்டிய ஒன்று. மாறாக சமண, பௌத்த, அவைதிக பாரம்பரியத்தில் கல்வி என்பது பொதுக் கல்வியையே குறிப்பதாகும். பிறவியின் அடிப்படையில் ஆனதாக அல்லாமல் பயிற்சியின் அடிப்படையில் ஆனதாகக் கல்வி கருதப்பட்டது. கவிதை எழுதுவது உட்பட பயிற்சியின் அடிப்படையிலான ஒரு செயல்பாடாக கருதப்பட்டு அதன் அடிப்படையில் நிகண்டுகள் உருவாக்கப்பட்டன. திவாகரம், பிங்கல நிகண்டு, சூடாமணி நிகண்டு முதலானவை சமணப் பாரம்பரியத்தில் உருவானவை என்பதும் ஐரோப்பிய கல்விமுறை அறிமுகமாகும் வரை நமது கிராமியப் பள்ளிக்கூடங்களில் இத்தகைய நிகண்டுகளைப் பயிற்றுவிப்பதே கல்விமுறையாக இருந்தமையும் இங்கே கவனத்தில் கொள்ளத்தக்கன. எளிய முறையில் இலக்கணங்களைக் கற்றுக் கொள்வதற்கேற்ப நன்னூலும் சின்னூலும் யாத்தனர். வாய்பாடு எனும் சொல்லைக்கூட சமணர்களின் கொடையாகக் கருத இடமுண்டு. எளிதில் கணக்கியல் கற்றுக் கொள்வதற்கென இயற்றப்பட்ட நெல்லிக்கனி வாய்பாடும், சிறுகுழி வாய்பாடும் அருகனை, அமலனை, அசலனை அடிதொழ இயற்றப்பட்டு பயிற்றுவிக்கப்பட்டன. இந்திய வரலாற்றின் புகழ் பெற்ற கல்வி நிறுவனங்களாக இருந்த நாலாந்தா மற்றும் காஞ்சி பல்கலைக் கழகங்கள் பௌத்த மரபில் உருவானவை என்பதையும் நாம் மறந்துவிடலாகாது. இந்திய துணைக் கண்டத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமன்றி தென்னாசியாவின் பல்வேறு திசைகளிலிருந்தும் எண்ணற்ற பல இனங்களையும் மொழிகளையும் சேர்ந்த பலரும் வந்து கல்வி பயின்று செல்லும் மையங்களாக இவை விளங்கின.

## 5

பெண்களின் இருப்பை வைதிகம் முற்றாக மறுத்து ஒதுக்கியதென்றால் அவைதிகம் பெண்களின் இருப்பை ஏற்றுக்கொண்டது.

படிப்பகம்

www.padippakam.com



கல்வியில் ஆண் பெண் வேறுபாடுகள் அவைதிகத்தில் புறந்தள்ளப் பட்டன. வேதக் கல்வி என்பது பார்ப்பன ஆண்களுக்கே உரித் தாக இருந்தபோது அவைதிக மரபில் மட்டுமே மணிமேகலை போன்ற கணிகையரும், தன்னைக் கொலை செய்ய வந்த கண வனைக் கொன்று பழி தீர்த்த நீலகேசி முதலானோரும் கல்வியிற் சிறந்து, தர்க்கத்தில் முதிர்ந்து, காவிய நாயகிகளாய் உலாவரும் சாத்தியப்பாடுகள் முழுதாய் இருந்தன. இன்றுவரை பகுத்தறிவு பேயாட்சி புரியும் ஐரோப்பாவில்கூட மகளிருக்குக் குருத்துவ நிலை அளிக்கப்படாத போது கவுந்தயடிகள் முதலான பெண் துற விகளையும் நம்மால் அவைதிக மரபில் மட்டுமே பார்க்க முடியும். சீவகசிந்தாமணியை உ. வே. சா. பதிப்பாக்கத் தொடங்கிய போது அவருக்கு ஏற்பட்ட ஐயங்களை விளக்கும் வல்லமை சமண மர பில் வந்த குடந்தை அம்மையாருக்கு மட்டுமே சாத்தியமாயிற்று என்ற உண்மையும் நினைவில் கொள்ளத் தக்கது.

## 6

நுணுக்கமாக மட்டுமின்றி சற்று ஆழமாகவும் பரிசீலிக்கும் போது காணக் கிடைக்கும் ஒரு முக்கியமான வேறுபாடு இங்கே கருதத்தக்க ஒன்று. சிந்துவெளி நாகரிகத்தின் திராவிடத் தன்மை, ஆரியப் படையெடுப்பு முதலானவை குறித்த முற்று முழுதான தெளிவான முடிவுகள் என எதையும் இன்று நம்மால் அறுதியிட் டுச் சொல்ல முடியாது. படையெடுப்பு என்பதைக் காட்டிலும் இடப்பெயர்வு என்கிற கருத்தாக்கம் பொருத்தமாக இருக்கும் என் கறார் ரொமீலா தாப்பர். (Ancient Indian Social History, P. 214) உள்நாட்டுக் குடிகளுடன் மோதியும் பிணைந்தும் திராவிடம் அல் லது ஆரியம் என்றெல்லாம் பிரித்துப் பார்க்க இயலாத இந்தோ–ஆரி யப் பண்பாடு ஒன்று உருவாகி, கொஞ்சம் கொஞ்சமாக அது கிழக்கு நோக்கி கங்கைச் சமவெளியில் பரவியது. இரும்பைப் பயன்படுத்தும் விவசாய நாகரிகத்தோடு இந்தோ– ஆரியப் பரவல் இணைந்தது. இந்தோ ஆரியப் பண்பாடு பரவும் போது உள் நாட்டு இனக்குழுக்கள் பல அப்படியே உள்வாங்கப்பட்டு, வருண– சாதி அமைப்பில் ஒரு குறிப்பிட்ட இடம் அவற்றிற்கு வழங்கப்பட் டது. வேறு வார்த்தைகளில் சொல்வதானால் இத்தகைய இனக் குழு சமுதாயங்கள் வைதிகமயம் ஆக்கப்பட்டன. இத்தகைய வைதிக மயமாக்குவதற்கு விவசாய மயமாக்கல் துணை புரிந்த தென்பது கவனிக்கத் தக்கது. இதையடுத்து இந்திய வரலாற்றை நாம் நுணுகி நோக்கினால் விவசாய நாகரிகம் வைதிகத்துடன் இணைந்த ஒன்றாக இருப்பது தெரிய வருகிறது. நிலைபெற்ற

படிப்பகம்

www.padippakam.com



(Sedantary) விவசாய சமூகங்களுக்கு உரிய மதங்களாக சைவ வைணவ மதங்கள் விளங்கின. தமிழ்ச் சூழலுக்கு இது மேலும் நுண்மையாகப் பொருந்துகிறது. பாசன முறை மற்றும் விவசாய மயமாக்கல் முதலியவை வைதிக மயமாக்கலுடன் பிணைந்து நிற்பதை அகத்தியர் கதை முதலியவை நிறுவுகின்றன. தமிழகத்தில் இரும்பின் பயன்பாடு மற்றும் அதனடியான நிலைபெற்ற விவசாய உற்பத்திமுறை முதலியன இந்தோ - ஆரியப் பரவலுக்குப் பின்பே நிகழ்ந்திருக்கும் எனச் சொல்வதற்கும் இடமுண்டு. விவசாயத்தை மையமாகக் கொண்ட பேரரசுகள் உருவான போது அவை தமது உபரியைப் பெருக்கிக் கொள்ள மேலும் மேலும் இனக் குழு மக்களையும் மேட்டு நில மக்களையும் விவசாய மயமாக்கலுக்கு உட்படுத்தின. இடப்பெயர்வு தடை செய்யப்பட்டது. இடப்பெயர் நாடோடி வாழ்க்கை இழிவெனக் கருதப்பட்டது. பதியெழுவறியா பழங்குடித் தன்மை போற்றப்பட்டது.

இவ்வாறு விவசாயமயம் ஆக்கப்படும்போது இனக்குழு மக்களிடையே இருந்த பொது உரிமை முறை அழிக்கப்பட்டு பார்ப்பன–வேளாள–வைதிக மரபினர்க்கும் வைதிகக் கோவில்களுக்கும் காணியாட்சி உரிமைகள் வழங்கப்பட்டன. வேள்விகள் செய்து கொடுத்து இவ்வாறு எண்ணற்ற இனக்குழு மக்களின் நிலங்கள் வேள்விக் குடிகளாக மாற்றப்பட்டு பார்ப்பனர்களுக்குத் 'தானம்' வழங்கப்பட்ட வரலாற்றிற்கு எண்ணற்ற சங்கப் பாடல்கள் சாட்சியாக உள்ளன. இத்தகைய விவசாய வைதிக மயமாக்கலின் விளைவாக பயனடைந்தவர்கள் பார்ப்பனர்களும் வேளாளர்களும் என்றால் இதனால் பேரழிவுக்கு ஆளானவர்கள் அவ்வப் பகுதியில் வாழ்ந்த இனக்குழு மற்றும் மேல்நில மக்களாவர். வள்ளலார் இராம லிங்க அடிகளார் (தொண்டை மண்டல சதகஉரை, 1855), மறை மலையடிகளார் (வேளாளர் நாகரிகம்) முதலானோர் வெள்ளாளர்களுக்கும் வேளாண்மைக்கும் தொடர்பு படுத்தி தமிழ்க் கலாச்சாரத்தை அதனடியாக வரையறுக்க முயல்வது குறிப்பிடத்தக்கது. (Eugene F. Irschick, Dialogue and History, P. 200–205)

இத்தகைய வைதிகமயமாக்குதலுக்கு எதிராக இனக்குழு மக்களும் மேட்டுநில மக்களும் இருந்தனர். வைதிகமயமாக்குதலுக்கு எதிரான இவர்களது குறுகிய கால வெற்றியாக வைதிக நெறியாளர்களால் இருண்ட காலம் எனக் குறிக்கப் பெறும் 'களப்பிரர்' காலத்தைக் குறிப்பிடலாம். களப்பிரர் காலத்தில் பார்ப்பனருக்கு முன்னர் கொடுக்கப்பட்டிருந்த நிலங்கள் பறிமுதல் செய்யப்பட்டமை குறிப்பிடத் தக்கது (வேள்விக்குடி செப்பேடுகள்). களப்பிரர்

படிப்பகம்

www.padippakam.com



காலத்தில் அவைதிக மதங்கள் எழுச்சியுற்றிருந்தன எனச் சொல்வதற்கும் இடமுண்டு.

அவைதிக மதங்கள் தங்களை விவசாயக் கலாச்சாரத்துடன் இணைத்துக் கொள்ளாமல் இனக்குழு மரபுகளுடனும் வணிக மரபுகளுடனும் இணைத்துக் கொண்டமைக்கு வரலாற்றில் ஏராளமான சான்றுகளை நம்மால் கூறமுடியும். வளர்ச்சி அடைந்த உற்பத்தி முறையாக விளங்கிய விவசாயமயமாக்கலுடன் தன்னை இணைத்துக் கொள்ளாமல் இருந்ததென்பது அவைதிக மதங்கள் வீழ்ந்துபட்டதற்கான பொருளியல் காரணங்களில் ஒன்றாக இருக்க முடியும்.

இதுகாறும் சொன்னவற்றைத் தொகுத்துக் கொண்டோமேயானால் கடவுள் நம்பிக்கையை மையமாகக் கொள்ளாமை, வேதங்களை பிரமாணமாக ஏற்காமை, பார்ப்பன மேலான்மையை ஒத்துக் கொள்ளாமை, பொதுக்கல்வியைப் போற்றுகிற தன்மை, பெண்களின் இருப்பை அங்கீகரிக்கும் பண்பு, விவசாயமாக்கலுடன் இணைந்து கொள்ளாத தன்மை ஆகிய அம்சங்களில் அவைதிக மரபு என்பது வைதிக மரபிலிருந்து பெரிய அளவில் வேறுபட்டிருப்பது கண்கூடு. வேறுசில வேறுபாடுகள் காணக்கூடும் எனினும் எல்லாவற்றையும் சுட்டிக்காட்டுவதற்கு ஈண்டு இடமில்லை. தர்க்கம், வாதம், வெகுசன மத்தியிலான பட்டி மண்டபம் போன்றவற்றையும்கூட அவைதிக மரபில் நாம் இனங்காண முடியும். கடைசியாக ஒன்றைக் குறிப்பிடுவது முக்கியம். வேறுபாடுகள் எனச் சொல்ல வரும் போது எல்லைகள் வகுப்பது தவிர்க்க இயலாதது. சுற்றெல்லைப் புள்ளிகளில் இந்த வேறுபாடுகள் மயங்கி நிற்கும். மேற்கண்ட வேறுபாடுகள் அனைத்தும் மையங்களின் அடிப்படையில் கணிக்கப்பட்ட வேறுபாடுகள். சுற்றெல்லைகளில் இவை மயங்கி நிற்பதற்கான சான்றாக சமண, புத்த மதங்களில் பின்னாளில் ஏற்பட்ட மாற்றங்கள் பலவற்றைக் குறிப்பிடலாம்.

—கட்டுரையின் கடைசி இரு பகுதிகள் அடுத்த இதழில்—

படிப்பகம்

www.padippakam.com



—72ஆம் பக்கத் தொடர்ச்சி

# தென்திசை முளைத்த செஞ்சுடர்

மும் சுதந்திர இந்தியாவில் வேறு மாதிரியான தர்மகர்த்தா ஒருத்தனாவது உற்பத்தியாகியிருக்கிறானா? இல்லை. ஆனால் இந்த தர்மகர்த்தா முறை ஒன்றைத் தெளிவுபடுத்தியிருக்கிறது, — தலித்துகளுக்குத்தான். அதாவது "தலித் விடுதலையை யாரும் தானமாகத் தரமாட்டார்கள். அதை தலித்துகள்தாம் வென்றெடுத்தாக வேண்டும்" என்னும் தெளிவுதான். இவ்வாண்டு சாதிக் கலவரங்களின் எல்லா இழப்புகளையும் அர்த்தமுள்ளதாக்கியிருப்பதும் கலவரங்களின் காரணர்களை திகைப்புக்குள்ளாக்கியிருப்பதும் இந்தத் தெளிவுதான். கலவரப்பகுதிகளில் உள்ள எல்லாக் கொடிக் கம்பங்களும் கட்சிக் கொடிகள் இன்றி மொட்டையாய் நிற்பதும் இதனால்தான்.

ஆம். எல்லாக் கட்சிக் கொடிகளும் இறக்கப்பட்டுள்ளன. (ஆனால் கொடிக் கம்பங்கள் தகர்க்கப்படவில்லை.) எங்கள் கூட்டறிக்கையின் ஒரு பகுதியை இங்கே தருகிறேன்:

> கடந்த இரண்டாண்டுகளாக டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் தலைமையில் இப்பகுதியில் தேவேந்திரகுலத்தைச் சேர்ந்தவர்கள் இறுக்கமான அமைப்பாகத் திரண்டுள்ளனர். கட்சி, மத ஈடுபாடுகளை எல்லாம் மீறி தேவேந்திரர் கூட்டமைப்பாகத் திரண்டுள்ளனர். இவ்வாறு தேவேந்திரர் அமைப்பாகுவது, தேவேந்திரர் அடையாளத்தில் ஒன்றிணைவது, தலைமையின் கட்டளைகளை ஏற்று போராட்டங்களில் ஈடுபடுவது என்பன இங்குள்ள ஆதிக்க சாதியினர், மற்றும் ரெவின்யூ / காவல்துறை அதிகாரிகள் மத்தியில் வெறுப்பை ஏற்படுத்தியுள்ளன. காவல்துறை D I G திரு. தர்மராஜ் அவர்கள் எங்களிடம் பேசும் போது "அரசாங்கம், போலீஸ், சட்டம் ஆகியவற்றுக்குப் பயப்படுவதற்குப் பதிலாக சாதித்தலைவர்களுக்குப் பயப்படுவதுதான் இந்நிலைக்குக் காரணம்" எனக் கூறியது குறிப்பிடத்தக்கது. டாக்டர் கிருஷ்ணசாமியின் தலைமையில் தேவேந்திரர் திரண்டதை மனதில் வைத்தே அவர் கூறினார் என்பது தொடர்ந்த பேச்சில் வெளிப்பட்டது.

மறவர்களும், தேவேந்திரர்களும் சாதி உணர்வு பெறுவது என்பதை வேறுபடுத்திப் பார்த்தல் அவசியம். மறவர்களின் சாதிப் பெருமிதம் என்பது தீண்டாமையையும் சாதி ஒடுக்கு

படிப்பகம்

www.padippakam.com



முறையையும் தொடர்வதற்கும், மீண்டும் நிலைநாட்டுவதற்கும் பயன்படுகிறது. தேவேந்திரர் அமைப்பாவது என்பது இத்தகைய ஒடுக்குமுறைக்கு எதிரான எழுச்சியாகவும் தற்காப்புப் போராகவுமே உள்ளது.

ரெவின்யூ மற்றும் காவல்துறை அதிகாரிகள் முதலானோர் மேல்மட்டம் முதல் கீழ்மட்டம் வரை மேற்சாதி உணர்வுகளை இயல்பானதாகவும், தேவேந்திரர் புதிதாக அமைப்பாகுவதையும் போராட்டங்களில் ஈடுபடுவதையும் அடாவடித்தனமாகவும் சனநாயக விரோத நடவடிக்கைகளாகவும் பார்க்கும் நிலை உள்ளது.

ஒரு பெண்மணி தன் நிலப்பத்திரத்தை எடுத்துவந்து காட்டிப் படிக்கச் சொன்னார். 12-7-1927இல் பதியப்பட்ட அந்தப் பத்திரத்தில் 'தேவேந்திர குலம்' என்னும் சாதிப் பெயர் பயன்படுத்தப் பட்டுள்ளதை எங்களுக்குத் தெரிவிக்கும் முயற்சி அது. அப்போது இன்னொரு இளைஞர் தன் பத்திரத்தைக் கொண்டு வந்து காட்டினார். அதில் 1924 ஆம் ஆண்டிலேயே அந்தப் பெயர் குறிக்கப் பட்டிருந்தது தெரிய வந்தது. 'தேவேந்திரகுல வேளாளர்' என்னும் பெயர் ஏதோ டாக்டர் கிருஷ்ணசாமியோ, வேறெவரோ இன்று தான் உருவாக்கியதல்ல. அதற்கு நெடிய வரலாறுண்டு' என்று சொல்லித் தங்கள் ஒன்றிணைவை உறுதிப்படுத்தும் பெருமித உணர்ச்சியது.

சாதியப் பெருமிதம் என்பது எப்போதும் பிறரோடான ஒப்பீட்டளவில் தன்னை உன்னதப்படுத்திக் கொள்ளும் பார்ப்பனத் தனமாகவே முடிந்துவிடுகிறது. இங்கேயும் அதுதான் நேர்ந்திருக்கிறது. 'தேவேந்திரகுல வேளாளர்' என்ற அளவில் இவர்கள் வேளாளர்களுக்கு நிகரானவர்கள் அல்லது தேவேந்திரனின் தாயாதிகள் என்றும், மூலத்தில் இவர்கள் தலித்துகள் அல்லர் என்றும், அந்தப் பெயரில் அழைப்பது இவர்களை அவமதிப்பதற்கொப்பான விஷயம் என்றும் ஒரு கருத்தாக்கம் — தரப்படுத்திக் கொள்ளும் பார்ப்பனக் கருத்தாக்கம் உருப் பெற்றுள்ளது. இதிலிருந்து 'தேவேந்திரகுல வேளாளர்' என்னும் பெயர் சாதி இழிவு நீக்கும் குறியீடாகவே கற்பிதம் செய்யப்படுகிறது. இங்கு, மூலத்தில் எவரும் தலித்தாகப் பிறவி எடுத்திருக்க முடியாது என்னும் உண்மை வசதியாக விடுபட்டுப் போகிறது. சமூக வரலாற்றின் இணக்கமற்ற காலகட்டங்களில் இளைத்த மனிதர்கள் தலித்துகளாகப் பரிணாமப்பட்டிருக்க வேண்டும். ஆகவே தலித்துகளில் காலத்தால் மூத்தவர்கள், இளையவர்கள் என்ற பாகுபாடு ஒருவேளை சாத்தியமாகலாம். அப்படிப் பார்த்தால் பறையர்கள்தாம் மூத்தவர்களாயி

படிப்பகம்

www.padippakam.com



ருக்க வேண்டும். பெயரிடப்படாத இழிவுகளுக்கெல்லாம் கூட 'பறையன்' என்ற சொல்லையே குறியீடாக்கி, ஆதிக்க சமுதாயம் அவர்கள் மேல் இடைவிடாத பல்முனைத் தாக்குதல் தொடுத்து இன்று வரை திட்டமிட்டுப் படியிறக்கம் செய்து தாழ்த்தி மிதிக்கிறதெனில், அவர்கள் முன்னொரு நாளில் சமூகக் கட்டமைப்பை வகுத்துத் தொகுக்கும் ஓர் உச்சநிலையிலிருந்து, மீண்டும் அந்த நிலையை ஒருநாளும் உரிமை கொண்டாடிவிடாதபடி சுவடழிக்கும் முயற்சியாய் உருட்டித் தள்ளப்பட்டவர்கள் என்பதை உய்த்துணர முடிகிறது. (பேராசிரியர் தொ. பரமசிவனின் 'பார்ப்பார்– ஒரு வரலாற்றுப் பார்வை' எனும் கட்டுரையும் இதை உறுதி செய்கிறது.) பறையர்களுக்கு அடுத்து பள்ளர்கள். அவர்களுக்கும் அடுத்து தமிழகம் தெலுங்கு மன்னர்களால் ஆக்கிரமிக்கப்பட்ட போது அவர்களுக்குத் தொண்டூழியம் செய்வதற்கென்றே இறக்குமதி செய்யப்பட்டவர்களான அருந்ததியர்கள். இம்மூவரிலும் அண்மைக்காலம் வரை ஓர் அமைப்பாகக்கூடத் திரட்டப் படாமல், எல்லா வகையிலும் இழிவுக்கும் தாழ்வுக்கும் உள்ளாகி கடைப்பட்டிருப்பவர்கள் அருந்ததியர்களே. சாதிகள் என்பதே வேற்றுமைகளை வரப்புகளாக உயர்த்திக்கட்டும் சதிக்கூடங்கள்தாம். தாழ்நிலையில் தள்ளப்பட்ட இவர்களுக்குள்ளும் வேற்றுமைக்குப் பஞ்சமில்லை. குறிப்பிட்டுச் சொல்வதானால் தங்கள் உணவுப் பழக்கங்களிலேயே ஒருவருக்கொருவர் ஏற்றத்தாழ்வுகளைக் கற்பிக்கிறவர்கள்தாம். சான்றாக பறையர்கள் (அருந்ததியர்களும்) மாட்டை உரிப்பதையும் உண்பதையும் பள்ளர்கள் இழிவாகக் கருதுகின்றனர். அதுபோலவே பள்ளர்கள் நத்தையை உணவாகக் கொள்வதைப் பறையர்களில் பலர் பழித்தொதுக்குகின்றனர். இவையெல்லாம் அவரவர் கற்பித்துக்கொண்ட வெறும் ஒவ்வாமைக் கூறுகள்தாம். உலக முழுவதிலும் பார்ப்பனக் கருத்தாக்கத்தால் சமூக (வர்ணாசிரம) மரபுக்கு இசைந்து போனவர்கள் மட்டுமே மாடு தின்பதை இழிவாகவும் பாவமாகவும் கற்பிக்கின்றனர். அவர்களைத் தவிர்த்த பிற உலகினர் பெரும்பாலும் மாடு தின்பவர்களே. இந்த வகையில் 'உலகத்தோடு ஒட்ட ஒழுகலை'க் கற்றவர்கள் பறையர்கள்தாம். மற்றவர்கள் இவர்களை ஒவ்வாதவர்களாக்கி, தங்கள் 'உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே' என்று சொல்லி, மனிதர்களைக் கூறு போட்டு விற்கும் சில்லறை வியாபாரிகளானவர்களே.

பாரதீய ஜனதா கட்சி பசுவதைத் தடுப்புச் சட்டம் கொணர்வதை வற்புறுத்தியபோது, பிராமணர்கள் பெருகாத நிலப்பரப்பிலிருந்து வந்தவரும், பிராமணக் கருத்தாக்கத்தை எதிர்த்துக் கிளர்ந்து நிற்கும் வடகிழக்கு மாநில மக்களிடையே பிறந்தவரும், குடியரசுத் தலைவராகப் போட்டியிட்டவருமான சி. ஜி. ஸ்வெல் "இது எங்க

படிப்பகம்

www.padippakam.com



ளைப் பட்டினி போட்டுக் கொல்வதற்கான சூழ்ச்சி. உங்களுக்கு எது தெய்வமோ அதுவே எங்களின் பிரதான உணவு'' என்று பாராளுமன்றத்தில் முழங்கினார்.

இவ்வகையில் பார்த்தால், வர்ணாசிரம சமூக அமைப்பில் தங்களை ஓர் அங்கமாக்கிக் கொண்ட குழுவாக 'தேவேந்திரகுல வேளாளர்களைச்' சொல்லலாம். 'தேவேந்திரகுலம்' என்னும் பெயரும் பெருமிதமும்கூட அதற்கான சான்றுகளே. இவர்களோடுகூட வன்னியகுல க்ஷத்திரியர்கள், விஸ்வகர்மாக்கள், யாதவ குலத்தார்கள் என்று இன்னும் பலர்—இந்தியாவை ஒற்றைத் தேசியமாக்கிவிடும் உறுதியுடன் தங்கள் இனக்குழு அடையாளங்களை அழித்து, ரிஷிகள், பெருந்தெய்வங்கள் வழியான கோத்திர அடையாளங்களில் குவிந்தாயிற்று. தேவேந்திரர்களைப் பொறுத்தவரை 'பள்ளர்' என்னும் தலித் அடையாளத்தை விட 'தேவேந்திரர்' என்னும் சூத்திர அடையாளமே கண்ணியமுள்ளதாகப் படுகிறது. (தாசிமகனாய்-சூத்திரனாய் இருப்பதைவிட ஒரு தாய்க்கும் தந்தைக்கும் பிறந்தவனாய்- பஞ்சமனாய் இருப்பதே சிறப்பு என்னும் கருத்தை வெளிப்படுத்தியவர் பெரியார். ஆனால் இது வெட்டிப் பேச்சு; அறிவாளிகளின் ஏட்டுச் சுரைக்காய். தலித்தாய் இருந்து பார்க்கிறவனுக்கல்லவா அதன் அவமானம் புரியும்! சூத்திரனாய் இருப்பதிலுள்ள மேன்மைக்குப் பார்ப்பன உத்தரவாதம் உண்டு. நடைமுறை வாழ்க்கைக்கு வேறென்ன வேண்டும் என்னும் வாதத்தையும் நாம் புறக்கணித்துவிடுவதற்கில்லை.) சமூக இயக்கத்தில் ஒருவன் எதைப் பாவிக்கிறான் என்பதைவிடவும் அவன் என்னவாகப் பாவிக்கப்படுகிறான் என்பது முக்கியமாகிறது. தேவேந்திரர்கள் இதையும் கணக்கில் கொண்டிருக்க வேண்டும்.

கல்வியறிவு, பொருள் வளம், சொத்துடைமை, நுகர்பொருள் கலாச்சார மேம்பாடு ஆகியவை ஒரு குழுவை உயர்த்திக் காட்டும் அம்சங்கள். இந்த வகையில் தென்மாவட்டங்களில் தேவேந்திர குல வேளாளர் முன்னிலை வகிக்கின்றனர். (இந்தத் தற்சார்பும் 'வெள்ளை சொள்ளை'யும்தான் அண்மைக் கலவரங்களில் அதிக காரமூட்டிய அம்சங்கள்.) ஆனால், வடமாவட்டங்களில் பறையர்கள்தாம் அதிகம் முன்னேறிய பிரிவினர். அதோடுகூட, அரசு எந்திரத்தில் அதிகம் பங்கு பற்றியவர்களும், அரசியல் ரீதியாகத் தங்களை வெகுகாலத்திற்கு முன்பே அமைப்பாக்கிக் கொண்டவர்களும், ஒட்டுமொத்தமாகத் தாழ்த்தப்பட்டவர்கள் பிரச்சினையை முன்னெடுத்தவர்களும், தலைமை ஏற்றவர்களும் என்னும் கூடுதல் முக்கியத்துவமும் பெறுகிறவர்கள். எல்லா இடங்களிலும் அருந்ததியர் நிலை தாழ்வுதான் எனினும் தமிழகத்தின் மையப் பகுதியில்

படிப்பகம்

www.padippakam.com



இந்த மூன்று பிரிவினரும் ஏறக்குறைய சம அந்தஸ்திலும், உறவு முறை வைத்துப் பழகும் ஓர்மையுடனும் இருப்பதாகப் படுகிறது. இப்படிப்பட்டதோர் நெகிழ்வுத் தன்மையுள்ள வாழ்க்கைப் போக்கில் தங்களுக்குள் என்னதான் உயர்வு தாழ்வு பாராட்டிக் கொண்டாலும், ஆதிக்க சாதியின் பார்வையில் இவர்கள் அனைவரும் ஒரே தரமுள்ளவர்கள்தாம்: இழிவானவர்கள், தாழ்வானவர்கள், தீட்டானவர்கள், கீழானவர்கள். இந்தப் பொதுமை இழிவுக்கெதிராக ஒன்று திரண்டால் ஒழிய இவர்களது விடுதலை என்பது தானமாகப் பெற்றால்தான் உண்டு.

ஏறக்குறைய நாங்கள் சென்ற இடங்களுக்கெல்லாம் எங்களுக்கு முன்பாக இந்து முன்னணித் தலைவர் இராமகோபாலன் தன் பரிவாரங்களுடன் சென்றிருக்கிறார். தன்னோடு கொண்டு சென்ற இரண்டு ஸ்டிக்கர்களை ஒட்டிவிட்டு வந்திருக்கிறார். (ஆசீர்வாதம் செய்தாரா என்று எங்களில் ஒருவருக்கும் கேட்கத் தோன்றவில்லை. இது விஷயத்தில் யாரையும் நம்பி ஏமாந்து போகும் தலித்திய வெள்ளை மனம் இவர்களிடம் இன்னும் இருப்பது கண்டு வருத்தமும் கவலையும் ஏற்பட்டது. "எங்களைத் தேடி வருகிறவர்கள் பகைவர்களே ஆனாலும் அவர்களை வரவேற்று உபசரிப்பதுதான் நமது பண்பு இல்லையா?" என்று ஒரு இளைஞர் சொன்னார். சாமர்த்தியமான பேச்சு என்றாலும் கேட்கச் சுகமாகவே இருந்தது.) அவர் ஒட்டியிருந்த ஸ்டிக்கர் ஒன்றின் வாசகம்:

ஜாதி பேதத்தை விட்டிடுவோம்
நாம் இனி ஒன்றாய் வாழ்ந்திடுவோம்.

எளிய வாசிப்பில் இது ஒரு நல்ல சூத்திரம் போலவும், குறிப்பாக மறவர்களிடம் எடுத்துச் சொல்ல வேண்டிய கருத்தாகவும் தோன்றியது. ஜாதியை விட்டுவிடுவதைப் பற்றி இராமகோபாலனுக்கு மூர்க்கமான மறுப்புண்டு. காரணம் அவர் ஜாதிகள் தழைக்க வந்த 'மகான்'. ஆகவே பேதத்தை மட்டும் விட்டுவிடப் பரிந்துரைக்கிறார். சாதி இருக்கும் வரை பேதமும் இருக்கும் என்பது அவர் உபாசிக்கும் சத்தியம். பேதத்தைவிட்டு ஒன்றாய் வாழ்வது எங்ஙனம் என்பதை இரண்டாவது ஸ்டிக்கர் இன்னும் தெளிவுபடுத்தியது:

ஆயிரம் ஜாதிகள் நம்மிடம் உண்டு.
ஆனால் நாம் ஒன்று; அனைவருமே ஹிந்து.

இந்திய சமுதாயத்தில் ஆயிரம் சாதிகள் இருப்பது இராமகோபாலன் பெட்டகத்தில் ஆயிரம் வைரங்கள் இருப்பது மாதிரி; விலை மதிப்பற்ற செல்வம். ஆனால் இந்தியப் பாமரனுக்கோ

படிப்பகம்

www.padippakam.com



அவை உயிரைக் குடிக்கும் விஷக்கற்கள். இராமகோபாலன் 'நல்லது' என்று சொல்கிற விஷயங்கள் அவருக்கான 'நல்லது'தானே தவிர அனைவருக்குமான நல்லதாகாது. மதங்களைக் கடந்து, கட்சிகளைப் புறந்தள்ளி 'தேவேந்திரர்' என்னும் ஒற்றை அடையாளத்தில் ஒன்றிணைந்த கட்டமைப்பை அவரின் "ஆனால் நாம் ஒன்று; அனைவருமே ஹிந்து" என்ன செய்யும்? மரத்தில் விழுந்த இடி மாதிரி ஊடே புகுந்து இரண்டாய்ப் பிளக்கும். பிளந்த கூறுகளில் புழுத்த புழுக்களாகக் கட்சிக்கொடிகள் யாவும் கம்பங்களின் மேல் சரசரவென்று ஏறும். ஒவ்வொரு மனிதனும் எண்திசையும் சிதறியோடுவான். பிறகு பரமபத விளையாட்டுதான். தீண்டாமைக்கும் சாதி ஒடுக்குமுறைக்கும் எதிரான– சரியாக இனங்காணப்பட்ட இன்றைய விடுதலைப் போர் கட்டுடைந்து, கலகலத்து உட்பூசலில் உருக்குலைந்து முடிவில் அடக்குவார் ஆசியோடு அடங்கும். இராமகோபாலனின் சேவகர்கள் இந்தப் போரை விஷமிகளின் கலவரமாக வரலாற்றில் பதிவு செய்வர். அல்லாமலா காஞ்சிபுரத்து சங்கராச்சாரி, 'தேவேந்திர குலத்தார்கள் அற்ப விஷயங்களைப் பெரிதுபடுத்திச் சண்டையிட்டுச் சாவதை விடுத்து அமைதியைக் கடைப்பிடிக்க வேண்டும்' என்று சொல்கிறார்! இதன் அர்த்தம், 'நாம் ஒன்று என்றான பின்பு ஹிந்து தர்மப்படி ஜாதிகளையும் பேதங்களையும் தன் போக்கில் ஏற்று இணைந்து வாழ வேண்டும். 'சமத்துவம், விடுதலை' என்று சொல்லி அற்ப விஷயங்களுக்காக கிளர்ச்சி செய்தால் அதிகார பீடங்களனைத்தும் ஒன்று திரண்டு பொது நன்மையைக் கருதி இரும்புக்கரம் கொண்டு அடக்கும். துஷ்டநிக்ரகம், சிஷ்டபரிபாலனம். நாராயண, நாராயண' என்பதாகும். மதமென்னும் அணுவுக்குள் கெட்டிக்கப்பட்டிருக்கும் அழிவின் திரட்சி இதுதான். அடக்கத் துடிக்கும் மறவர்களைவிட அடங்கிப்போக மந்திரம் ஜபிக்கும் இராமகோபாலன்களும் சங்கராச்சாரிகளும் அபாயமானவர்கள் என்பதைக் களத்தில் நிற்பவர்கள் கவனத்தில் கொள்ளவேண்டும்.

★

இந்தக் கட்டுரையின் முகப்பில் டாக்டர் அம்பேத்கரின் மேற்கோள் ஒன்று கொடுக்கப்பட்டுள்ளது. 12-11-1930 முதல் 19-1-1931 முடிய நடந்த அரசியல் சட்ட வரைவு மாநாட்டில் அவர் தெரிவித்த கருத்து.

67 ஆண்டுகளுக்குப் பிறகு அக்கருத்தின் பொருளை முழுமையாக உள்வாங்கிக்கொண்டு அதை ஓர் அறைகூவலாக முன்னெடுத்த வகையில், தேவேந்திரகுல வேளாளர் கூட்டமைப்பின் தலைவர் டாக்டர் கே. கிருஷ்ணசாமி நமக்குத் தவிர்க்கமுடியாதவராகிறார்.

படிப்பகம்

www.padippakam.com



பாரதிக்கு சுதந்திரப் பயிர் 'வாராது போல வந்த மாமணி' யாகத் தென்படுகிறது. தேவேந்திரகுல வேளாளர்களுக்கோ டாக்டர் கிருஷ்ணசாமியே அப்படித் தென்படுகிறார். தென்படுதல் என்பதற்குத் 'தானாகத் தோன்றுதல்' என்று பொருள். டாக்டர் கிருஷ்ணசாமியின் தோற்றமும் அப்படியொரு சுயத்தன்மை கொண்டதுதான். அடங்காத கனலுடன் இயலாமைக்காட்பட்டவர்களின் அடியாழக் கனவுகளையும் எதிர்பார்ப்புகளையும் ஒன்று திரட்டி, வடிவமைத்து, வழி காட்டுகிறவனே சரியான தலைவன் எனில் டாக்டர் கிருஷ்ணசாமி அந்த இடத்தில் முற்றும் பொருந்துகிறார்.

அவரை ஒருமுறைதான் சந்தித்தேன். ஊடகங்களின் வாயிலாக அவரின் தொடர்ந்த செயல்பாடுகளை அவ்வப்போது கவனம் கொண்டிருந்த வகையில் அந்தச் சந்திப்பு என்னுள் வரையப்பட்டிருந்த அவரது சித்திரத்தைச் சரிபார்த்துக் கொள்ள உதவியது. பார்த்த மாத்திரத்தில் அவர் சராசரிக்கும் மேலாகத் தோன்றினார். நெடிய உருவம். தோழமை தேடும் வடிவம். வசப்படுத்தும் ஆளுமை. நன்றாய் நெகிழும் உதடுகள். சிரித்துக்கொண்டே விசாரிக்கும் கண்கள். எளிமைப்பட்டலே மரியாதைகளைச் சேமிக்கத்தான் என்பதான ஒரு பாவம். நெருக்கிக் கட்டிய சொற்களில் மெலிதாய் ஒரு பதற்றம்—இது நாங்கள் சந்தித்த போதிருந்த சூழ்நிலையாலிருக்கலாம். அடுத்த சில நாட்களில் இவரை நேசிக்கும் மக்களைச் சென்று பார்த்தபோது இவருடைய உயரம் இன்னும் ஓங்கித் தெரிந்தது. அப்போது பளிச்சென்று நினைவுக்கு வந்த சீவகசிந்தாமணிப் பாடல் வரியிலிருந்துதான் இக்கட்டுரையின் தலைப்பை நான் தேர்ந்து கொண்டேன். 'தென்திசை முளைத்த செஞ்சுடராக' டாக்டர் கிருஷ்ணசாமியை உருவகிப்பது உங்களுக்குச் சற்று மிகையாகப் படலாம். எனக்கது சரியாகவே படுகிறது.

இவருடைய பாராளுமன்ற அரசியல் பிரவேசம் டாக்டர் சுப்பிரமணியன் சாமியின் ஆசியோடும் சின்னத்தோடும் தொடங்கியதை இந்து தர்மத்தில் நம்பிக்கையுள்ள எவரும் மிக நல்ல சகுனமாகவே எடுத்துக் கொள்வார்கள். இதுபற்றி மாற்றறிவாளர்கள் குறை கூற ஏதுமிருப்பதாகத் தெரியவில்லை: காரணம் கிருஷ்ணசாமி இந்து தர்மத்தைப் பரிபாலிக்கத் தன்னை அர்ப்பணித்துக் கொள்ளவில்லை. உங்களுக்குப் பிடித்தாலும் பிடிக்காமல் போனாலும் சுப்பிரமணியன் சாமியை அவ்வளவு எளிதாக ஒதுக்கிவிட முடியாது. என்னதான் திட்டித் தீர்த்தாலும் சம்பந்தப்பட்டவர்களுக்கு அவர் எப்போதும் தொண்டையில் சிக்கிய முள்தான். ஜெயலலிதாவுக்கு எதிராக அவர் தொடுத்த இடைவிடாத தாக்குதலின் பலனாகத்தான் கலைஞர் இன்று தன்னை ஒரு ஊழலுக்கெதிரான அரசுத் தலைவராகவும், உத்தமமான அரசியல் வித்தக

படிப்பகம்

www.padippakam.com



ராகவும் காட்டி புதுப்பிறவி எடுக்க முடிந்துள்ளது. உலக மகா திருடர்களோடெல்லாம் சுப்பிரமணியன்சாமிக்கு உறவிருந்தாலும் (அவரை மதிக்காத) உள்ளூர் அரசியல் திருடர்களுக்கு அவர் சிம்ம சொப்பனமாயிருப்பது தற்சார்புள்ள சமூக மனிதனுக்குக் கொஞ்சம் ஆறுதல் தரக்கூடிய விஷயந்தான். International Paraiah என்னும் சொல்லைத் தற்செயலாய்ப் பயன்படுத்திவிட்டு அது தலித்துக்களை அவமதிக்கிறதென்றதும் மன்னிப்பு கேட்கும் நிலைக்காளான டாக்டர் சுப்பிரமணியன் சாமி சாதி ஒடுக்குமுறைக்கு எதிரான போரில் டாக்டர் கிருஷ்ணசாமிக்கு மீண்டும் உதவ நேர்ந்தால் அந்தச் சந்தர்ப்பத்தைப் பற்றிக்கொள்வதில் எந்தச் சித்தாந்தமும் சீரழிந்து விடாது.

தமிழ்நாட்டை ஆளுகிறவர்கள் எதைச் செய்தாலும் செய்யாவிட்டாலும் ஒரு பொய்யை மட்டும் இந்தியா முழுவதும் பரப்பி வைத்திருக்கிறார்கள். அது 'தமிழகம் அமைதிப் பூங்காவாகத் திகழ்கிறது' என்னும் பச்சைப் பொய்தான் இந்த அமைதிப் பூங்காவில்தான் விடுதலைக்கு முன்னும் சரி பின்னும் சரி தொடர்கதையாக சாதிக் கலவரங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. ஏழை மக்களின் இருப்பையே வேரறுக்கும்படியான கலவரங்கள். இதை யாரும் கணக்கிலேயே எடுத்துக்கொள்வதில்லை. காரணம், தலித்துகளுக்கேற்படும் இழப்புகளும் பிரச்சினைகளும் ஒரு பொருட்டாகக் கருதப்பட்டதே இல்லை. தலித்துகள் மீதான சாதிக் கலவரம் என்பது அன்றாட வாழ்வின் தவிர்க்க முடியாத அம்சம் போல– நாய் மனிதனைக் கடிக்கிற மிக இயல்பான விஷயம்போல அனைவருக்கும் மரத்துப்போயுள்ளது. இங்கு நாய் யார், மனிதன் யார் என்பது நம்மை அவமானப்படுத்துகிற விஷயமானாலும், சரியாகத்தான் பொருந்தி வருகிறது. மாறாக, நாயை மனிதன் கடித்துவிட்டாற்போல ஏதேனும் நிகழ்ந்துவிட்டால் அதுதான் அமைதி கெட்டுவிட்டதன் அறிகுறி. அதாவது பார்ப்பனர்களுக்கோ, அல்லது பார்ப்பன தாசர்களுக்கோ, பார்ப்பனச் சார்புகளுக்கோ சிறு ஊறு நேர்ந்தாலும், "போச்சு, போச்சு. தமிழ்நாடு பற்றி எரிகிறது- அராஜகம் தாண்டவமாடுகிறது. அரசு வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறது," என்று 'ஊரே கேள், நாடே கேள்' எனக் கூச்சல் போடப்படுகிறது. சான்றாக சினிமா இயக்குநர் மணிரத்ணம் வீட்டில் எறியப்பட்ட ஒரு குண்டு வெடித்து சுற்றுச் சுவரில் சில செங்கற்கள் மட்டுமே பெயர்ந்தபோது (மதுரையில் கொலையுண்ட இந்து முன்னணித் தலைவர் ராஜகோபால் செட்டியாருக்குப் போட்ட கூச்சலைவிடப் பன்மடங்காக) உருவாக்கப்பட்ட பரபரப்பிலும், பதைபதைப்பிலும் பத்தில் ஒரு பங்காவது— அண்மையில் மேலவளவு கிராமத்தில், 'என்னுடைய உயிருக்கு ஆபத்து

படிப்பகம்

www.padippakam.com



உள்ளது. பாதுகாப்பு வேண்டும்' என்று கேட்டும் கிடைக்காமல் போன பஞ்சாயத்து தலைவரும் அவரைச் சேர்ந்தவர்களுமாக ஏழு தலித்துகள் ஓடும் பேருந்திலிருந்து ஓட ஓட வெட்டிக் கொல்லப் பட்டபோது பதைத்ததுண்டா? அதிர்ந்ததுண்டா? அவருக்குப் பாதுகாப்பு ஏன் கொடுக்கவில்லை என்று யாராவது கேட்ட துண்டா? அரசுதான் விளக்கியதுண்டா? மேலவளவு படு கொலையை எல்லா ஊடகங்களும் அறிவித்தன. எப்படி? ஏதோ, சாலைவிபத்தில் நடந்துவிட்ட சாவுகளுக்குக் காட்டப்படும் 'பாவம்' போல. தலைவர்கள் அறிக்கை விட்டார்கள். ஏதோ தீ விபத் தில் உயிரிழந்தவர்களுக்கு இரங்கல் தெரிவிப்பது போல. சென் னைக்கு வடக்கே? அது எப்போதும் சென்னைக்குத் தெற்கே இந்தியா இருப்பதாகக் கண்டுகொள்வதே இல்லை. இந்தப் படு கொலையை நாட்டின் மனசாட்சியையே உலுக்கி எடுக்கக்கூடிய அவமானமாக நம்மில் எத்தனை பேர் உணர்ந்தோம்? 'ஒரு தலித் குடியரசுத் தலைவரை ஏற்றுக் கொள்ள முடிந்த நாட்டில் ஒரு தலித் பஞ்சாயத்து தலைவரை ஏற்றுக்கொள்கிற பக்குவம் வர வில்லை' என்று வக்கணை பேசப்பட்டது. ஆனால், ஒருத்தர் கூட இதனால் 'தமிழகத்தில் அமைதி கெட்டுவிட்டது' என்று சொல்லவில்லை. தலித்துகள் சொல்லியிருப்பார்கள். அதைக் காதில் வாங்கிக்கொள்ளத்தான் யாருமில்லையே.

தமிழ்நாட்டில் நூற்றுக்கும் மேற்பட்ட தலித் அமைப்புகள் இருப்பது இந்தப் படு கொலையை ஒட்டி மீண்டுமொருமுறை வெளிச்சப்பட்டது. ஆனால் அவை 24மணி நேரத்திலோ 48மணி நேரத்திலோ தங்கள் எதிர்ப்பை பதிவு செய்யும் வசதிவாய்ப்போ, ஒருங்கிணைப்போ, ஊடகத்தொடர்போ அற்றவை. எல்லா அமைப் புகளும் மெல்ல மெல்லத் தங்களைத் திரட்டிக்கொண்டு இந்த அரா ஜகத்துக்கு எதிராகத் தங்கள் ஜனநாயகப் போரட்டத்தை அறிவித் தபோது தமிழக முதல்வர் கலைஞர் என்ன செய்தார்? 'கொலை பற்றி விசாரிக்க கமிஷன் போட்டிருக்கிறோம். இறந்தவர் குடும் பங்களுக்கு கருணைத் தொகையை மேலும் உயர்த்திக் வழங்கி யிருக்கிறோம். குற்றவாளிகளைப் பிடிக்கக் காவல் துறை முடுக்கி விடப்பட்டுள்ளது. இவ்வளவுக்குப் பிறகும் போராட்டம் தேவை தானா என்பதை அவர்கள் யோசிக்க வேண்டும்' என்னும் தோர ணையில் கருத்து வெளியிட்டுக் குறைபட்டுக் கொண்டார். மணி ரத்னம் வீட்டு குண்டு வெடிப்பு நிகழ்ச்சி இவர் ஆட்சியில் நடந்து, "குண்டு வெடிப்பில் சில செங்கற்கள்தான் சேதமுற்றுள்ளன. யாரும் சாகக்கூட இல்லை. பிறகேன் இந்தக் கூச்சலும் குற்றச் சாட்டும்?" என்று சொல்லிவிடுவாரா? இத்தனைக்கும் கலைஞர் தன்னை ஒரு தலித் வீட்டுச் சம்பந்தி என்று சொல்லிக் கொண்ட

படிப்பகம்

www.padippakam.com



வர். ஒருவேளை தன்னை 'சாமானியன்' என்று கூறிக்கொள்வதில் கர்வம் கொண்டிருந்த காலத்தில் நடந்துவிட்ட விபத்தாக எண்ணி இப்போது உள்ளூர வருத்தம்கூட இருக்கலாம். வருந்துவதற்கான அந்தஸ்தை அவர் பெற்று எவ்வளவு காலம் ஆயிற்று! இப்போதெல்லாம் அவர் ஆட்சிக்கு ஆபத்து வரும்போல் இருந்தால்மட்டுமே, "பிற்பட்டவன் ஆள்வதா என்று கச்சை கட்டுகிறார்கள்" என்று சொல்லிக் கொள்வதோடு சரி.

ஆயிற்று ஒரு தலைமுறைக் காலம் திராவிடக் கட்சிகள் ஆட்சியைப் பிடித்து. ஒரு சந்தர்ப்பத்திலாவது இந்த சாதிக் கலவரத்தின் தகவமைப்பை உடைப்பதற்கான வழிமுறைகளை யாரேனும் திட்டமிட்டதுண்டா?

கோவணம் மட்டுமே மிஞ்சியுள்ள ஒரு பாமரனுக்கு மானம், மரியாதை, மனிதனாயிருப்பதற்கான அடையாளம் யாவும் அந்தக் கோவணம்தான். அதை உருவிக் களைவதும் அவனைக் கொல்வதும் ஒன்றுதான். மானம் மரியாதைக்கான மாற்றுக் கவசங்களை அவனுக்கு அணிவித்தால், பின்னர் அவன் கோவணத்தை உருவுவதும் இடுப்புக் கயிற்றை அறுத்தெறிவதும், அல்லது குறைந்த பட்சம் கோவணத்தை ஆடைக்குள் மறைத்துக் கொள்வதுதான் நாகரிகம் என்று கற்பிப்பதும் ஒரு பிரச்சினையாகாவே இருக்கப் போவதில்லை. சாதியைத் தன் மான மரியாதைக்கான கோவணமாகக் கட்டிக் கொண்டிருக்கிறவனுக்கு இந்த அரசோ, அரசியல் வாதிகளோ, ஆசாரியார்களோ மாற்றுகளை முன் வைத்ததில்லை; முன் வைக்க முயன்றதும் இல்லை. உண்மையில் கோவணத்தை இறுக்கிக் கட்டிக் கொள்ளச் சொல்வதுதானே இந்த மண்ணின் தர்மமாய் இருக்கிறது! அதை அனுசரித்துத்தானே இந்த திராவிடக் கட்சிகளும் பரிவட்டம் கட்டிக்கொண்டு திரிகின்றன! இதனால் பாதிக்கப்படுவது தலித்துகள்தானே. தலித்துகளாகவே அவர்கள் நிரந்தரப்படுவதும், அவமானப்படுவதே அவர்கள் வாழ்க்கையாவதும் பற்றி யாருக்கும் அக்கறையில்லை.

இந்த இடத்தில்தான் டாக்டர் கிருஷ்ணசாமியின் வருகை முக்கியத்துவம் பெறுகிறது. இவருடைய வேலை தலித்துகளுக்குச் சில சலுகைகளை பெற்றுத் தருவதில்லை. மாறாக தலித்துகளின் தன்மானத்தையும் தன்னுரிமையையும் மீட்டுத் தருவதாகும். இவர் கட்டமைத்துள்ள கூட்டமைப்பு ஆதிக்க சாதியினர் புரியும் அத்தனைக் கொடுமைகளிலிருந்தும் தம் மக்களை முழுமையாக விடுவிப்பதாகும். "இனியும் பணிவதில்லை; இழிவைச் சகிப்பதில்லை" என்னும் வைராக்கியத்தோடு சாதிப் பிரச்சினைகளை எதிர்கொள்வதாகும். தம் மக்களுக்கு இழைக்கப்படும் அவமா

படிப்பகம்

www.padippakam.com



னங்களை துடைத்தெடுப்பதற்கான எல்லா சாத்தியப்பாடுகளையும் களப்பணியாக முன்வைப்பதாகும். இவரால் தேவர் பேரவைகள் தம் பிரிவுகளை விட்டு ஒன்றாகி, ''ஏதோ சில பூசல்கள் எங்களுக்கும் பள்ளர்களுக்கும் இடையே ஏற்பட்டிருந்தாலும் எங்கள் இரு சமூகங்களும் ஒரு தாய் மக்கள் போல்தான் வாழ்ந்து வந்தோம். இப்போது அந்நியர் (கிருஷ்ணசாமி கோவைக்காரர்) தலையீட்டால்தான் எங்களுக்கிடையே தீராத பகை தோன்றியிருக்கிறது'' என்று வாக்கு மூலம் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளாக்கியுள்ளவர் இவர்.

இது தலித்திய வரலாற்றில் ஒரு நம்பிக்கை மிகுந்த திருப்புமுனை. புதிய வரலாற்றின் தொடக்க அத்தியாயம். கட்சிகளையும் மதங்களையும் கடந்ததாக இவர் கட்டமைத்துள்ள கூட்டமைப்பும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இதுவரை யாரும் புரிந்திராத சாதனை. இந்த அமைப்பு தன்னளவில், தலித்துகளுக்கிடையேயான சாதிகளையும் கடந்த கூட்டமைப்பாகுவது சாத்தியப் படாது என்றாலும், சாதி அமைப்புகளாகவே ஒருங்கிணைத்து பெருங்கூட்டமைப்பாக முழுமையுறுவது தலித் விடுதலையை விரைவுபடுத்தும் என்பது நம் அபிப்பிராயம். டாக்டர் கிருஷ்சாமியைச் சந்தித்த போது, ''இம்மாதிரியான நெருக்கடியான காலகட்டங்களில்தான் எல்லாப் பிரிவினரும் ஒன்றிணைவது சாத்தியமும் அவசியமும் ஆகிறது. நீங்கள் ஏன் அதற்கான முன் முயற்சியை எடுக்கக் கூடாது? இதில் உங்களுக்கு ஏதேனும் பிரச்சினை இருக்கிறதா?'' என்று கேட்டேன். அதற்குப் பதிலாக அவர் அடங்கிய குரலில் ''எனக்கு இதில் பிரச்சினை இல்லை. மக்களுக்கும் இல்லை. தலைவர்களுக்குத்தான் இதில் பிரச்சினை,'' என்றார். ஆக பிரச்சினையின் மூலத்தை அவர் சரியாகவே அடையாளம் காண்கிறார் என்பதால் இது விஷயத்தில் போகப்போக அவர் சாதிப்பார்; அல்லது இனிவரும் சந்தர்ப்பங்கள் எல்லா அமைப்புகளையும் ஓரணியில் கொண்டு வந்து நிறுத்தும் என்று நம்பலாம்.

தலித் பிரச்சினையை இனியும் தள்ளிப்போட முடியாத ஒரு 'எரியும் பிரச்சினையாகக் கிருஷ்ணசாமி முன்னெடுத்திருப்பது அரசு தன் மௌனத்தைக் கலைக்க வேண்டிய கட்டாயத்தை உருவாக்கியுள்ளது. இப்போது அரசுக்கு இருவழிகள் உள்ளன. ஒன்று, தலித் பிரச்சினைக்கு மனப்பூர்வமாகத் தீர்வு காண முயல்வது. மற்றொன்று தீர்க்க முடியாத(!) பிரச்சினையை முன்னெடுக்கும் கிருஷ்ணசாமியை சட்டம் ஒழுங்கு, அதிகார அரசியல் ரீதியாகச் சமாளிப்பது. தலித் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது முடிகிற

படிப்பகம்

www.padippakam.com



காரியமல்ல என்று எல்லோரும் நம்புகிறார்கள். 'அது அரசைப் பலி கேட்கும்; பதவியைப் பறிக்கும்; அரசியல் வாழ்வைக் குலைக்கும்; சமூக நியதியை அழிக்கும்; (இதுதான் முக்கியம்; போராட்டமும் இதற்குத்தான்.) புதிய சமூக மதிப்பீடுகளை உருவாக்கும்; முடிவில்லாமல் அதன் பின் விளைவுகள் பெரும் பிரச்சினைகளாகத் தொடரும்' எனக் காரணங்களை அடுக்குவதிலேயே எல்லாரும் குறியாயிருக்கிறார்கள்.

(ஆனால் தலித்துகள் தங்கள் மேம்பாடுகளைத் தாங்களே திட்டமிட்டுத் தீர்மானித்தாக வேண்டும். இது ஒரு மலையேற்றம் தான் என்றாலும் முயன்றால் ஒரு தலைமுறைக்குள் அது முடியும். முதலில் அவர்கள் தங்கள் வளங்களையெல்லாம் கணக்கெடுத்துக் கொண்டு, அவற்றின் சீரான பங்கீட்டிற்கு முன் வரவேண்டும். நிலம் சார்ந்த தங்கள் வாழ்வை மாற்றியமைக்க வேண்டும். இந்தியக் கிராமங்கள் ஒவ்வொன்றும் சோம்பிச் சுருண்டு கிடக்கும் மலைப்பாம்பு மாதிரி. அதன் நியதி கலையாதவரை அப்பாவித் தனமாய்த் தூங்கிக் கொண்டிருக்கும். நியதி மாறி எவனாவது இடறிவிட்டால் தன் தூக்கத்தை உதறிக் கொண்டெழுந்து அவனை நெறித்துக் கொன்றுவிடும். ஆகவே, ஒன்று பெருநிலவுடைமையாளர்களாக வேண்டும். இல்லையேல் அடிமைப் படுத்தும் நிலச் சார்பை விட்டொழிக்க வேண்டும். அறிவு சார்ந்த, தொழில் சார்ந்த, சுயச்சார்புள்ள நிறுவனம் சார்ந்த வாழ்வைக் கட்டமைக்க வேண்டும். கல்விசார் வளங்களை சமூகம் முழுதும் சமச் சீராக வளர்த்தெடுக்கும் பணியை அமைப்புகள் மூலம் தூண்டிக் கண்காணிக்க வேண்டும். மக்களின் செயல் முழுதும் சமூகச் சுரணையுள்ள பொருளாதார இயக்கமாகக் கட்டமைக்கப்பட வேண்டும். இன்று பெற்றிருக்கும் தலித் விழிப்புணர்வையும் பரவலான அறிவு சார் மேம்பாட்டையும் முதலீடாகக் கொண்டே இதனைச் சாதிக்க முடியும். வேண்டுவதெல்லாம் இதை அறைகூவலாக ஏற்கும் மனத்திட்பமும், அரசியல் பேரத்தில் விலைபோகும் கமிஷன் ஏஜண்டுகளாய்த் தன்னூட்டம் பெறுகின்ற குறுங்குழுத் தலைமைகளைப் புறக்கணித்து ஒதுக்கும் விவேகமும்தான்.)

ஆக, அரசு, தலித் பிரச்சினையை ஒட்டுமொத்தத் தீர்வுக்கு உட்படுத்த ஒருபோதும் தயாராயில்லை. இப்போது மிஞ்சுவது இரண்டாவது வழிதான்: அதாவது சாத்தியமில்லாததைக் கோரும் கிருஷ்ணசாமியைச் சமாளிப்பது. கலைஞரின் சொற்போக்கை நுட்பமாகக் கவனித்துவருபவர்கள் இது தொடர்பான அவர் உத்திகள் ஆறேழு மாதங்களுக்கு முன்பே செயலாக்கம் பெற்றுவிட்டதை அறிவார்கள். முதல்வர் கலைஞர் கடந்த ஆறேழு மாதங்

படிப்பகம்

www.padippakam.com



களாகவே தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில்கூட டாக்டர் கிருஷ்சாமியின் பெயரை உச்சரிப்பதைத் தவிர்த்துவிட்டார். ஆனால் கிருஷ்சாமியின் ஒவ்வொரு அசைவுக்கும் தன் 'முதிர்ந்த சாணக்கியத்தனத்தோடு' எதிர் அரசியல் பண்ணிக் கொண்டிருக்கிறார். எதிர் அரசியலின் பலாபலன்களையும் பின் விளைவுகளையும் தொகுத்து மதிப்பிடுவதை எப்போதும் போலவே புறக்கணித்து விடுகிறார். இதில் நமது பகுப்பாய்வு எதுவாயினும், தகர்ப்பு அரசியலில் கலைஞர் ஒன்றும் கிள்ளுக்கிரை இல்லை. 'கிள்ளுக்கீரை' என்று ஏதொன்றையும் தள்ளிவிடுகிறவரும் இல்லை. எப்போதும் தன் எதிராளியை இனங்கண்டு, குறி வைத்து, துரும்பாக்குவதில் அவர் தேர்ந்த ஞானவான். தனக்குச் 'சவாலாகிறவர்களோடு தான்' அவருக்கு இந்த விளையாட்டு. இதன் காரணம், அவரது தனிமனிதக் குணமாக அரசியல் தளத்திலும் அரசதிகார மையத்திலும் தன்னை எப்போதும் தலைமகனாகத் தக்க வைத்துக் கொள்ளும் கட்டற்ற வேட்கையாகக் கொள்ளலாம். இவ்வேட்கை ராஜாஜியையும் ஆட்டிப் படைத்ததை நாம் அறிவோம். நவீன அரசியல் சூத்திரங்கள் பலவற்றுக்குச் சொந்தக்காரரும், தன்போக்கிலான அரசியல் 'சுயசிந்தனையாளரு'மான கலைஞரைப் போன்ற ஒரு 'மேதை'யை— எம். ஜி. ஆர். அமெரிக்காவில் நோயுற்றுக் கிடந்த போது 'அவர் சார்பாக தான் இந்த அரசை ஏற்று நடத்தி, அவர் திரும்பிவந்ததும் அலுங்காமல் நலுங்காமல் அவர் கையில் ஒப்படைத்துவிடுவதாகப்' பிதற்ற வைத்தது அந்த வேட்கையன்றி வேறாக இருக்க முடியாது. அத்துடன் நாம் (சாதிப்பிரச்சினை பற்றிப் பேசிக்கொண்டிருப்பதால்) சாதிய உளவியல் ரீதியாகவும் இதை ஆய்வுக்குட்படுத்துவது பொருத்தமானதாயிருக்கும்.

கலைஞர், தமிழர் திரளில் முற்றுமாகத் தள்ளுபடி செய்துவிடக் கூடிய நுண் சிறுபான்மைக் குழுவிலிருந்து முளைத்து வந்தவர். (இந்த அம்சத்தில் டாக்டர் கிருஷ்ணசாமி கொடுத்து வைத்தவர். என்ன பிரிவுகள் இருந்தாலும், தன் ஒட்டுமொத்த மக்கள் பக்கம் அர்ப்பணிப்புணர்வோடு நிற்கும் வரை அவர் தனது ஒன்றரைக் கோடி மக்களின் சொத்து.— உங்கள் வீட்டு மனையில் ஒரு புதையல் புதைந்து கிடக்கிறது. உங்களுக்குத் தெரியாது என்பதனாலேயே அது உங்களுடையதல்லாமல் போய்விடாதல்லவா. கிராமத்துப் பாமர தலித் மக்களில் பலருக்கு கிருஷ்ணசாமியை இன்னும் தெரியாமல்கூட இருக்கலாம். தெரிந்து கொள்ளும் போது அவரே அவர்களின் உயிராகிவிடுவார். தெரிந்துகொள்ள வைப்பதொன்றும் பிரம்ம சூத்திரமல்ல. அதன் தேவையையும் அவசரத்தையும் கலைஞரே வகுத்துக் கொடுத்துவிடுவார்.)

கலைஞரைப் பொறுத்தவரை, 'இந்தச் சாதிய சமுதாயத்தில்

படிப்பகம்

www.padippakam.com



தன்னுடைய ஒரு பராக்குப் பார்வையில்கூட இம்மக்கள் தன்னைக் கீழே தள்ளிவிடுவார்கள் என்ற முன்னெச்சரிக்கை உணர்வால் அவர் கட்டமைக்கப்பட்டிருக்கலாம். முதன்முதலில் தாழ்த்தப்பட்டவர் களால் பார்ப்பன கருத்தாக்க சமூகத்திற்கெதிராகத் திட்டமிடப் பட்டு, நீதிக் கட்சியினரால் வடிவேற்றப்பட்டு, பெரியாரால் வேரோ டும் விழுதுகளோடும் நிலைப்படுத்தப் பட்ட மாற்றுச் சமுதாயக் களத்தைப் பயன்படுத்தி அரசதிகாரத் தலைமைப் பீடங்களைப் பிடித்தவர்கள் கலைஞர் போன்றவர்கள். இவர்கள் பார்ப்பனர்க ளைத் தவிர்த்த அமைச்சரவையைச் சாத்தியப்படுத்தினார்களே தவிர சாதி சமண்பாடுகளை மீற முயலவும் இல்லை; அதனால் பின்னர் முடியவும் இல்லை. உண்மையில் இவர்கள் பெரியாரின் எச்சசொச்சங்கள்தானே தவிர– அவர் சேர்த்துவைத்த விதைநெல் லில் வயிறு வளர்க்கிறவர்கள்தானே தவிர, அவரை மேலெடுத்து வளர்த்துச் சென்றவர்களல்லர். ஒருவேளை– உதாரணத்துக்குச் சொல்லக்கூட அச்சமாய்த்தான் இருக்கிறது– இந்துத்துவக் கட்சி கள் பிரளயம் மாதிரி மறுபிரவேசம் செய்து, மாற்றுச் சமுதாயக் கட்டமைப்பு தகர்க்கப்படால், இவர்கள் வரலாற்றிலிருந்து முற்றாக துடைக்கப்படுவார்கள். இருபதாம் நூற்றாண்டுத் தமிழக வரலாறு '1937இல் ராஜாஜி. 52இல் மீண்டும் ராஜாஜி. 91இல் ஜெயலலிதா' என்ற மூன்று வாக்கியங்களிலேயே நிரப்பப் படும்.

கழகத் தலைமைகள் வரலாற்றில் நிலைத்திருப்பதென்பது மாற்றுச் சமூகக் கட்டுறுதியைப் பொறுத்த விஷயமே. அதன் கட் டுறுதிக்குப் பெரியார் முன்னெடுத்தவற்றுள் தாழ்த்தப்பட்டோர் தன்னுரிமையும் சாதி மறுப்பும் முக்கியமானவை. "நான் பெரியா ரின் வாரிசு" என்று பிரகடனப்படுத்திக்கொள்ளாவிடினும் பெரியா ரைச் செயலாக்க முயல்கிறவர் இப்போது கிருஷ்ணசாமிதான். இது ஒருவகையில் கலைஞர் முதலானவர்களை வரலாற்றில் நிலைப் படுத்தும் முயற்சியாகவே அமைகிறது. இந்தத் தொலைநோக்குப் பார்வையெல்லாம் அதிகார அரசியலுக்கு வேண்டாத குப்பை என்று மீண்டும் ஒருமுறை மெய்ப்பித்திருக்கிறார் கலைஞர். காவிரியைக் காயவிட்டதிலிருந்து (பெருமழைக்கு வடிகால்!) கள்ளுக்கடையைத் திறந்துவிட்டதுவரை அவர் எத்தனையோ வரலாறுகள் படைத்தி ருந்தாலும், ஆகஸ்ட் 6ஆம் நாள் டாக்டர் கிருஷ்ணசாமி தலை மையில் தலித் அமைப்புகள் சென்னையில் நடத்திய பேரணியை கலைஞர் எதிர்கொண்ட விதம் உலகறியாத 'உத்தம' வரலாறு.

பேரணி என்ற பெயரில் மனிதகுலத்தின் நிர்மூல சக்தி ஒன்று சென்னை மாநகரைச் சின்னாபின்னமாக்கத் திரண்டு வருவதாக ஒரு திகிலூட்டும் தோற்றம் கட்டமைக்கப்பட்டது. ஊடகங்கள்

படிப்பகம்

www.padippakam.com



பரபரத்தன. அறிக்கைகளும் பேரணியைச் சமாளிக்கிற உபாயங்களும் என்று ஊரே அல்லோலகல்லோலப்பட்டது. வெளி மாநிலங்களின் காவல் படைகளும் பாதுகாப்புப் படைகளும் கொண்டுவந்து குவிக்கப்பட்டன. பேரணியில் கலந்துகொள்கிறவர்களுக்குப் புதுப் புது நடத்தை விதிகள் உருவாக்கப்பட்டன. சென்னை நோக்கி தலித் மக்கள் வந்த வாகனங்கள் அனைத்தும் முடக்கப்பட்டன. முத்தாய்ப்பாக, சென்னை உயர் நீதி மன்றம் அந்த தலித் பேரணிக்கு 16 வகையான நிபந்தனைகளை விதித்தது. ''பேரணியில் கலந்துகொள்கிறவர்கள் தங்கள் உடைகளைக் களைந்துவிட்டு உள்ளாடைகளோடு மட்டும், வானத்தை நோக்கிக் கைகளை உயர்த்தி 'அமைதிப்பூங்கா தமிழகம், அமைதிப்பூங்கா தமிழகம்' என்று மக்களைப் பயமுறுத்தாத அடங்கிய குரலில் முழக்கமிட்டுகொண்டே செல்லவேண்டும்'' என்பது கடைசி நிபந்தனையாக இடம் பெற்றிருக்குமானால் அது ஒன்றும் விசித்திரமாகவே இருந்திருக்கப் போவதில்லை.

பேரணி பற்றி இந்து நாளேடு (The Hindu, August 26, 1997) இவ்வாறு எழுதுகிறது.

> ஆகஸ்ட் 6இல் சென்னையில் நடந்த அமைதியான பேரணியை உடைக்க தமிழ்நாடு அரசு மேற்கொண்ட நடவடிக்கை இந்திய சட்டம்–ஒழுங்கு வரலாற்றிலேயே ஒரு புதிய அத்தியாயத்தை எழுதியது. விரோதிகளால் சீர்குலைக்கப்பட்டால் ஒழிய, தங்கள் பேரணி அமைதியாக நடக்கும் என்று தலித்துகள் அரசுக்கு உறுதியளித்திருந்தனர். அரசு அவர்களுக்குப் பற்பல நிபந்தனைகள் விதித்ததோடு லட்சத்திற்கும் மேற்பட்ட தலித்துகளைக் கைது செய்தது; அவர்கள் வாகனங்களைப் பறிமுதல் செய்தது.
>
> ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில்கூட சுதந்திரப் போராட்ட வீரர்கள் இந்த அளவு அடக்குமுறைக்கு உட்படுத்தப்பட்டதில்லை. அத்துடன் எந்த ஒரு காலகட்டத்திலும் ஒரே மாநிலத்திலிருந்து லட்சம் பேர் கைது செய்யப்பட்டதில்லை.

தலித் பேரணியை சுதந்திரப் போராட்டத்தோடும் தமிழக அரசை ஆங்கில ஏகாதிபத்தியத்தோடும் 'இந்து' ஒப்பிட்டது வெறும் தற்செயல் நிகழ்வல்ல. பன்னூறு ஆண்டுகளாக ஆதிக்க சாதியினரின் வன்கொடுமைகளைச் சகித்து வந்த மக்கள், முதல் முறையாகத் தங்கள் எதிர்ப்பை ஓர் அமைப்பாகத் திரண்டு பதிவு செய்த அளவில், அவர்கள் தர்க்க நியாயங்களுக்கப்பாற்பட்ட நிர்மூல சக்தியாகவும், கொலைக்கஞ்சாத நாசகாரக் கும்பலாகவும் கொச்

படிப்பகம்

www.padippakam.com



சைப் படுத்தப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் ஒரு கோரிக்கையை முன்னெடுப்பதென்பது அரசு அவர்களைத் தண்டிக்க வழி செய்து கொடுப்பது என்பதாகிறது. 'இரண்டாயிரம் கிராமங்களில்—தேனீர்க் கடைகளில் தலித்துகளுக்குத் தனிக் குவளை வைத்திருப்பதை எதிர்த்துப் போராடுவோம்' என்று கிருஷ்ணசாமி அறிவித்தால், 'அதுபற்றிப் புகார் செய்ய வேண்டுமே தவிர, சட்டத்தை தங்கள் கையில் எடுத்துக்கொண்டு செயல்படுபவர்கள் மீது சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்கப்படும்' என்று அரசு மிரட்டுகிறது. இந்திய அரசியல் சட்டம் தலித்துகளுக்கு வழங்கியுள்ள சமத்துவங்களை மீட்டுத் தராமைக்காக எந்த அரசும் வெட்கப்பட்டதில்லை. ஏனெனில் இந்திய விடுதலை என்பது சமத்துவம் கேட்டுப் போராடுகிறவர்களை 'கிரிமினல்' குற்றவாளிகளாகத் தண்டிக்கத்தான்.

ஒரு வழியாக கிருஷ்ணசாமியின் பெயரை உச்சரிப்பதில்லை என்னும் நோன்பைக் கொஞ்சம் தளர்த்தி, 17-10-1997ஆம் நாள் சட்டப் பேரவையில் அவருக்கு முதல்வர் கலைஞர் கீழ்க்கண்டவாறு அறிவுரை வழங்கியுள்ளார்:

> சமூகத்தினரிடையே சமத்துவம் இல்லாத நிலை இருப்பதாக இங்கு பேசிய கிருஷ்ணசாமி வேதனை தெரிவித்தார். எல்லாக் கட்சித் தலைவர்களுக்கும் இந்த வேதனை உள்ளது. குறிக்கோளை அடைவதற்கு அணுகுமுறை உள்ளது. மூர்க்கத்தனமாக அவசரம் காட்டினால் வெற்றி கிடைக்காது. நெஞ்சுறுதியுடன் நிதானத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்.
>
> தமிழகத்தில் 1000 கிராமங்களில் டீ கடைகளில் ஜாதிக்கு ஏற்ப இரண்டு குவளைகளில் டீ தரும் கொடிய பழக்கம் உள்ளது. இது எல்லோருக்கும் தெரிந்த வேதனையான விஷயம். இதுபோன்ற வழக்கத்தை ஒழிக்க அரசு ஒத்துழைக்கும்போது சட்டத்தை அவரவர் கையில் எடுத்துக் கொண்டால் சமூக விரோதிகள் நுழைய வாய்ப்பு ஏற்படும்... கோயில் நுழைவுப் போராட்டம் என்று கிருஷ்ணசாமி சிலரை அழைத்துக் கொண்டு போனால் இரு சாராருக்கிடையே மோதல் ஏற்பட வாய்ப்புள்ளது. மோதலில் ஒருவர் இறந்தாலும் 10 பேர் இறந்தாலும் சமுதாயத்துக்குப் பாதிப்புதான். சமதர்மத்துக்கு மாறான காரியத்தை மாற்றும் வகையில் நமது அணுகுமுறை இருக்க வேண்டும். தொடர்ந்து சாதிக்கலவரம் நடக்கும்வகையில் அணுகுமுறை இருக்கக்கூடாது.
>
> ...நான் சாதாரணமாக இன்றும் இருப்பதால், வரம்பை மீறி காரியம் செய்தால்தான் என் கவனத்துக்கு வரும் என்று கருத வேண்டாம். (தினமணி,18 அக். 1997)

படிப்பகம்

www.padippakam.com



கல்லக்குடி தண்டவாளத்தில் தலை வைத்துப் படுத்த கலைஞரின் மறவுரையல்ல இது. மஞ்சள் துண்டு போர்த்திய மடாதிபதியின் கனிவான அறவுரை. காஞ்சி சங்கராச்சாரிக்கு இத்தனை நுனிய தமிழில் தேன் சொட்டச் சொட்ட அருளுரை வழங்கத் தெரியாது. இந்த அறிவுரை வரிகளுக்கிடையே போராடும் சாத்தியப்பாட்டை எவனாவது கண்டுபிடித்துவிட முடியும் எனில் அது கலைஞருக்கு அவன் செலுத்தும் காணிக்கை.

அறிவுரையின் ஊடாக, சமூகத்தில் நிலவும் சமத்துவமின்மைக்காக வருந்துவதை விடவும் 'மூர்க்கத்தனத்'துக்கு எதிரான கோபமும் எச்சரிக்கையுமே தூக்கலாகக் தெரிகிறது. கிருஷ்ணசாமியை அராஜகவாதியாகவும் அவர் மக்களை வன்முறைக் கும்பலாகவும் சித்தரிப்பதே அரசின் நிலைப்பாடாகியுள்ளது. கலைஞரோ, ஜெயலலிதாவோ, மேற்சாதி உணர்வுள்ள அனைவரிடமும் இந்தச் சித்திரம்தான் வன்மையான நிறத்தில் தீட்டப்படுகிறது. கிருஷ்ணசாமி தாமரைக்கனியைத் 'தாக்க முயன்றார்' என்பது தாமரைக்கனி பிறரைத் தாக்குவதையே தொழிலாகக் கொண்டிருந்தார் என்பதை ஒன்றுமில்லாததாக்கி விடுகிறது. கிருஷ்ணசாமியின் 'முயற்சி' சாதிக் குணமாகவும் தாமரைக்கனியின் தாக்குதல் தனிக் குணமாகவும் பார்க்கப்படுகின்றன. "தலித் என்பவன் தாழ்ந்து போக வேண்டியவன்" என்னும் சூத்திரத்தை தகர்க்க முயன்றால் எதிர்கொள்ள வேண்டிய சமூகப் பகைமுகம் இது.

கிருஷ்ணசாமியால் மரபுச் சமூக அமைதி கெடுகிறது என்பதால் தேனியில் அவர் நுழையத் தடை விதிக்கப்பட்டுள்ளது. அவர் மீண்டும் மீண்டும் அமைதியைக் குலைக்க முயன்றால் நாளாவட்டத்தில் தமிழகம் முழுவதிலும் அவர் நுழையத் தடை விதிக்கப்படலாம். 'அப்புறம் என்னாகும்?' என்று அதிசயப்பட்டுக் கொண்டிருந்தபோது, நல்லவேளை தாமரைக்கனி தீர்வு சொல்லியுள்ளார்: 'அவரை நாடு கடத்த வேண்டும்.'

அரசியல்வாதியின் எல்லை இது. வரலாற்று நாயகனாய் இருக்கப் பிரியப்படுகிறவன் அரசியல்வாதிக்கு நண்பனாய் இருப்பதைவிட மக்களுக்கே உயிராய் இருப்பான். அது அவன் எல்லை.

டாக்டர் கிருஷ்ணசாமி இன்று தேவேந்திரர்களின் தலைவராகத்தான் அறியப்படுகிறார். அதனாலென்ன. டாக்டர் அம்பேத்கர்கூட தொடக்கத்தில் தான் பிறந்த சாமர் குல மக்களின் தலைவராகத்தான் தன் பொது வாழ்வைத் தொடங்கினார். பின்னர் ஒட்டுமொத்த தலித் மக்களின் தன்னேரில்லாத தலைவராகிவிடவில்லையா. கிருஷ்ணசாமியும் அப்படி ஆகிவிடுவார். கலைஞரே அவரை ஆக்கி விடுவார். ●

படிப்பகம்

www.padippakam.com

Kavithaasaran, F to Oct.(21)-Nov. '97. Regd.No. TN/MSN
CREATIVE LITERARY MONTHLY IN TAMIL. R. Dis



Printed by Mrs. Kavithasaran at Allwell Press, 31, T.K.S. Nag-
Chennai-600019. Published at 580, T.H. Road, Chennai-
& Edited by: Kavithaasaran.

படிப்பகம்